


# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:219 | 23-02-2026 | திங்கட்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


# "ஏஐ உச்சி மாநாட்டில் காங்கிரஸ் செய்தது கண்ணியமற்ற அரசியல்"

**மீரட், பிப்.23:**

டெல்லி ஏஐ உச்சி மாநாட்டில் ஆடையை களைந்து காங்கிரஸ் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டது குறித்து உத்தரப் பிரதேச மாநிலம் மீரட் நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோடி கடுமையாக விமர்சித்துள்ளார்.

இந்த நிகழ்வில், ரூ.12,930 கோடி மதிப்பிலான பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார். முன்னதாக, நமோ பாரத் ஆர்ஆர்டிஎஸ் ரயில் மற்றும் மீரட் மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைத்திருந்தார்.

அதன் பின்னர் பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியது: "இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச நிகழ்வு ஒன்றில் காங்கிரஸ் கட்சி கண்ணியமற்ற அரசியலை அரங்கேற்றும் அரங்கமாக பயன்படுத்தியது. வெளிநாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் முன்பாக ஆடையை காங்கிரஸ் கட்சியினர் களைந்து நின்றனர்.



நீங்கள் அப்படித்தான் என்று தேசம் மக்கள் அறிவார்கள். அப்படி இருக்கும்போது ஏன் உங்களது ஆடையை களைய வேண்டும்? இதை நான் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

இந்தியாவை அவமதித்த காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்களின் இத்தகைய செயலுக்கு அக்கட்சியின் தலைவர்கள் வருத்தம் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால், அதற்கு நேர்மாறாக உள்ளது நிலைமை. இந்தச் செயலுக்கு பிறகு காங்கிரஸ் கட்சியின் கூட்டணி கட்சியினர் அவர்களை விட்டு சற்று விலகி உள்ளனர்.

நீங்கள் பிரதமர் அரியணையில் அமர வேண்டுமென்றால் மக்களின் நம்பிக்கையை முதலில் பெற வேண்டும். இன்று வளர்ந்த நாடுகள் இந்தியாவுடன் இணைந்து பயணிக்க ஆர்வம் காட்டி வருகின்றன. இந்தியாவின் வளர்ச்சியில் தங்களின் எதிர்காலத்தை அவர்கள் பார்க்கிறார்கள். 21-ம் நூற்றாண்டில் எதிர்கொள்ளும் சவாலுக்கு இந்தியா தீர்வு தரும் என உலகம் கருதுகிறது.

முன்னொரு காலத்தில் காங்கிரஸ் ஆட்சியில் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள விருப்பம் இருந்தும், அது நடக்காத ஒன்றாக இருந்தது.

ஆனால், பாஜக ஆட்சியில் தேசத்தின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது" என்றார் பிரதமர் மோடி.

மீரட் மெட்ரோ: இந்தியாவின் அதிவேக மெட்ரோ ரயில் சேவையை மீரட் மெட்ரோ வழங்குகிறது. அதிகபட்சமாக மணிக்கு 130 கிலோமீட்டர் வேகம் வரை மீரட் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். இந்தியாவிலேயே நமோ பாரத் ஆர்ஆர்டிஎஸ் ரயில், மெட்ரோ ரயில் என இரண்டும் ஒரே தடத்தில் பயணிக்கும் வகையில் மீரட் மெட்ரோ வடிவமைக்கப்பட்டுள்ளது. 23 கிலோமீட்டர் தூரம் கொண்ட இந்த மெட்ரோ தடத்தில் 13 ரயில் நிலையங்கள் உள்ளன. 30 நிமிடத்தில் பயண தூரத்தை மீரட் மெட்ரோ ரயில் சேவை நிறைவு செய்கிறது.

### மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமர் மோடி புகழாரம்

# ஓடிபி, ஆதார், வங்கி கணக்கு தகவல்களை யாருடனும் பகிராதீர்கள்; பிரதமர் மோடி அறிவுரை

**புதுடில்லி, பிப்.23:**

பிரதமர் மோடி ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை ரேடியோவில் மனதின் குரல் நிகழ்ச்சி (மன் கி பாத்) மூலம் நாட்டு மக்களிடம் உரையாற்றி வருகிறார்.

அந்த வகையில் 131வது மன் கி பாத் நிகழ்ச்சி இன்று ஒலிபரப்பானது. இதில் பிரதமர் மோடி பேசியதாவது;-



டிஜிட்டல் கைது, ஆன்லைன் மோசடி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நான் ஏற்கனவே பேசியுள்ளேன். ஆனாலும், இதுபோன்ற நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

டிஜிட்டல் கைது, நிதி மோசடி பெயரில் ஏராளமானோர் குறிவைக்கப்படுகின்றனர். மூத்த குடிமக்கள் தங்கள் வாழ்நாள் சேமிப்பை இழக்கின்றனர்.

இதில் இருந்து தப்பிக்க பொதுமக்கள் தங்கள் ஓடிபி, ஆதார் எண், வங்கி கணக்கு எண் போன்ற தகவல்களை யாருடனும் பகிராதீர்கள்.

உணவு, உடைகளை சீசனுக்கு ஏற்றார்போல் பயன்படுத்துவதுபோல உங்கள் பாஸ்வேர்டுகளையும் அடிக்கடி மாற்றுங்கள். சில நாட்களுக்கு ஒருமுறை பாஸ்வேர்டுகளை மாற்றுவதை வழக்கமாக கொள்ளுங்கள்' என்றார்.

## சிறந்த தேசபக்தி கொண்டவர் ஜெயலலிதா

31-வது 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமர் மோடி நேற்று நாட்டு மக்களிடம் உரையாற்றினார். அப்போது முன்னாள் முதல்வர் ஜெயலலிதா குறித்து புகழ்ந்து பேசினார்.



"நம் தேசத்தில் சமூக நலனுக்காகவும், மக்கள் நலனுக்காகவும் பாடுபட்டவர்கள் எப்போதும் மக்களின் நெஞ்சங்களில் நிலைத்திருக்கிறார்கள். தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவும் அதில் ஒருவர். மக்கள் மத்தியில் பிரபலமாக அறியப்படும் தலைவர். பிப்.24-ம் தேதி அவரது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட உள்ளது. நான் தமிழகம் செல்லும் போதெல்லாம் மக்கள் அவர் மீது கொண்டுள்ள அன்பை கண்டு வருகிறேன்.

அவர் தலைமையிலான அரசு தமிழகத்தில் இருந்தபோது, தாய்மார்கள், மகளிர் நலனுக்காக பல பாராட்டத்தக்க மக்கள் நல திட்டங்கள் மற்றும் முயற்சிகளை மேற்கொண்டார். மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகளை முன்னெடுத்தார். சிறந்த தேசபக்தி உணர்வு கொண்டவர். இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தை போற்றி பெருமைப்பட்டார். அவருடனான ஒவ்வொரு சந்திப்பும் ஒவ்வொரு, உரையாடலும் இன்னும் என் மனதில் உள்ளது.

கடந்த 2002 மற்றும் 2012-ல் நான் குஜராத் மாநிலத்தில் முதல்வராக பதவியேற்ற போது, அந்த விழாவில் அவர் கலந்து கொண்டார். நாங்கள் இருவரும் அந்தந்த மாநிலங்களின் முதலமைச்சர்களாக இருந்தபோது, நல்லாட்சி உட்பட பல்வேறு தலைப்புகளில் விவாதித்தது உண்டு. அவரது சிந்தனை மிக தெளிவானதாக இருக்கும். அது அவரது குறிப்பிடத்தக்க பண்பு.

பல ஆண்டுகளுக்கு முன்பு பொங்கல் கொண்டாட்டத்தின் போது என்னை மதிய உணவுக்காக சென்னைக்கு அழைத்தார். அந்த அன்பான செயல் என்னால் என்றென்றும் மறக்க முடியாது. சமுதாயத்திற்கு அவர் ஆற்றிய சேவை என்றும் நினைவில் இருக்கும்" என பிரதமர் மோடி தெரிவித்தார்.

# திமுக கூட்டணி : எந்தெந்த தேதிகளில் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை!

**சென்னை, பிப்.23:**

சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி கூட்டணி கட்சிகளுடன் இன்று (பிப். 22) முதல் திமுக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறது. அந்தவகையில் முதல் வாய்ப்பாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியுடன் இன்று, திமுக கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இதனைத் தொடர்ந்து நாளை (பிப். 23) மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்துடனும், மனித நேய மக்கள் கட்சியுடனும் திமுக பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளது.

இதற்காக அக்கட்சிகளுக்கு திமுக சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பிப். 26 ஆம் தேதி மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியுடன் (சிபிஎம்) திமுக பேச்சுவார்த்தை நடத்துகிறது. சிபிஎம் கட்சியின் மாநில செயலாளர் சண்முகம், மாநில செயற்குழு உறுப்பினர்கள் கனகராஜ், சாமுவேல்ராஜ், கண்ணன் ஆகியோர் அடங்கிய குழுவினருடன் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

இதனை அடுத்து பிப். 27 ஆம் தேதி தொகுதிப் பங்கீடு தொடர்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியுடன் திமுக பேச்சுவார்த்தை நடத்துகிறது. திமுக கூட்டணியில் கூடுதலான இடங்களைக் கேட்டுப் பெறுவோம் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு. வீரபாண்டியன் முன்னதாக தெரிவித்திருந்தார்.

கூட்டணிக் கட்சிகளுடன் திமுக பொருளாளர் டி.ஆர். பாலு, கே.என். நேரு, திருச்சி சிவா, ஆ.ராசா, ஆர்.எஸ். பாரதி, எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் உள்ளிட்ட 7 பேர் கொண்ட குழுவினர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இம்முறை பேரவைத் தேர்தலில் திமுகவுடன் தேமுதிகவும் இணைந்துள்ளதால், கூட்டணிக் கட்சிகளுடனான பேச்சுவார்த்தையில் திமுக கண்டிப்புடன் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இன்றைய பஞ்சாங்கம்

23.02.2026 மாசி 11
திங்கட்கிழமை

சூரிய உதயம் 6.32

திதி:
இன்று காலை 10.08 வரை சஷ்டி பின்பு சப்தமி.

நட்சத்திரம்:
இன்று மாலை 5.25 வரை பரணி பின்பு கார்த்திகை.

யோகம் :
இன்று காலை 11.12 வரை பிராம்யம்பின்பு ஐந்திரம்

கரணம் :
இன்று காலை 10.08 வரை தைதுலம் பின்பு இரவு 8.58 வரை கரசை பின்பு வணிசை

அமிர்தாதி யோகம் :
இன்று மாலை 5.25 சித்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

சந்திராஷ்டமம்
இன்று மாலை 5.25 வரை அஸ்தம் பின்பு சித்திரை

நல்ல நேரம்
காலை 6.30 – 7.30.
மாலை 4.30 – 5.30

இராகு காலம்
காலை 7.30 – 9.00.

எமகண்டம்
10.30,–12.00.

குளிகை
பிற்பகல் 12.00 – 1.30

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# 'மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுவதே முன்னேற்றத்துக்கு உறுதுணை': சி.பி.ஆர்

**சிவகங்கை, பிப்.23:**

மத்திய, மாநில அரசுகள் எப்போதும் இணைந்து செயல்படுவது தான் ஒரு பகுதி முன்னேற்றத்துக்கு உறுதுணையாக இருக்கும் என குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே திருக்கோஷ்டியூரில் பிரசித்தி பெற்ற சவுமிய நாராயணப் பெருமாள் கோயில் உள்ளது. இக்கோயில் தங்கக் கோபுர கும்பாபிஷேகம் பிப். 6-ம் தேதி நடைபெற்றது. இதற்கு குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு அழைப்பிதழ் கொடுக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து இன்று அக்கோயிலுக்கு சி.பி. ராதாகிருஷ்ணன் வந்தார். இதற்காக அவர் மதுரையிலிருந்து ஹெலிகாப்டரில் திருப்பத்தூர் வந்தார். அவரை கார்த்திசிதம்பரம் எம்பி, மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவெற்றனர்.

அங்கிருந்து காரில் திருக்கோஷ்டியூர் சவுமியநாராயண பெருமாள் கோயிலுக்கு வந்தார். தொடர்ந்து சுவாமி தரிசனம் செய்தார். பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், மாவட்டத் தலைவர் பாண்டித்துரை ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர், காரில் சிவகங்கை



அரண்மனைக்கு வந்த அவரை சமஸ்தானம் தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் மதுராந்தகி நாச்சியார், சமஸ்தான மகேஸ்துரை, இலங்கை முன்னாள் அமைச்சர் செந்தில்தொண்டமான் உள்ளிட்டோர் வரவேற்றார்.

பின்னர் சி.பி. ராதாகிருஷ்ணன் அரண்மனை வளாகத்தில் இருந்த மன்னர் சசிவர்ணதேவர், ராணி வேலுநாச்சியார் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அரண்மனை பொருட்களையும் பார்வையிட்டார்.

தொடர்ந்து சி.பி. ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ராணி வேலுநாச்சியார் மட்டும் தான் இழந்த அரசை போர் புரிந்து மீண்டும் கைப்பற்றியவர். வீரம் விளைந்த மண் சிவகங்கை. மகத்தான சரித்திரத்துக்கு சொந்தமானது. மத்திய, மாநில அரசுகள் எப்போதும் இணைந்து செயல்படுவது தான் ஒரு பகுதி முன்னேற்றத்துக்கு உறுதுணையாக இருக்கும்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் 50 சதவீதம் வரி விதித்திருந்தார். அதை 18 சதவீதமாக குறைத்துள்ளனர். நிச்சயமாக இது இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து காவி உடைந்து அணிந்து சிலைகளுக்கு மரியாதை செலுத்தியுள்ளீர்களே, அதில் எதுவும் விஷேசம் உண்டா? என்று செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு, நீங்கள் கூட வயது முதிர்வு அடைந்தால் காவி உடைக்கு மாறி விடுவீர்கள், என்று நகைச்சுவையாக தெரிவித்தார்.

குடியரசு துணைத் தலைவர் வருகையையொட்டி, சிவகங்கை அரண்மனைவாசலில் இருந்த கடைகள் அடைக்கப்பட்டு போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டது. நிகழ்ச்சிகள் முடிந்ததும் அரண்மனையிலிருந்து சி.பி.ராதாகிருஷ்ணன் காரில் வெளியே வந்தார்.

அப்போது தடையை மீறி அதிக ஒலி எழுப்பிக் கொண்டே இருசக்கர வாகனத்தில் ஒருவர் வந்தார். பாதுகாப்பு பணியிலிருந்த போலீஸார் அவரை வாகனத்துடன் மடக்கி பிடித்தனர். விசாரணைில், அவர் காளையார்கோவில் அருகே சிலுக்கப்பட்டியைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சித் தலைவர் கருணாகரன் (45) என்பதும், குடியரசு துணைத் தலைவர் வாகனம் செல்வதை அறியாமல் வந்ததும் தெரியவந்தது. இதையடுத்து அவரை போலீஸார் எச்சரித்து அனுப்பி வைத்தனர். குடியரசு துணைத் தலைவர் சென்றதும் கடைகள் திறக்கப்பட்டன.







## திருக்குறள் குறள்-539

இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து



தாம் தம் மகிழ்ச்சியால் செருக்குக் கொண்டு கடமையை மறந்திருக்கும் போது, அவ்வாறு சோர்ந்திருந்த காரணத்தால் முற்காலத்தில் அழிந்தவரை நினைக்க வேண்டும்.

## சிந்திக்க ஒரு நொடி



வாய்ப்பும் மீனும் ஒன்றுதான் சரியாக பிடிக்கவில்லை எனில் கைநழுவி போய்விடும்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## 476-ம் ஆண்டு தீ மிதி திருவிழா கொடியேற்றம்



விழுப்புரத்தில் பழமையும் வாய்ந்த திரவுபதி அம்மன் ஆலயத்தில் 476-ம் ஆண்டு தீ மிதி திருவிழா கொடியேற்றம் நேற்று நடந்தது.

## ஆடவல்லீஸ்வரர் திருக்கோவில் குடமுழுக்கு விழா



மரக்காணத்தை அடுத்த முன்னூர் கிராமத்தில் சோழர் காலக் கலைநயத்துடன் புதுப்பிக்கப்பட்ட அருள்மிகு பிரஹன்நாயகி உடனுறை ஆடவல்லீஸ்வரர் திருக்கோவில் குடமுழுக்கு விழா நேற்று நடந்தது.

## நமோ மாரத்தான் போட்டி



தென்காசியில் நமோ டிரஸ்ட், பாஜக விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு சார்பில் நமோ மாரத்தான் போட்டி நடந்தது.

## ரத்தினகிரீஸ் வரர் கோவில் கும்பாபிஷேகம்



குளித்தலை அருகேயுள்ள அய்யர்மலை ரத்தினகிரீஸ் வரர் கோவில் கும்பாபிஷேகம் நேற்று நடந்தது.

## மாசி மக பிரம்மோற்சவம் கொடியேற்றம்



காரைக்கால் திருமலை ராயன்பட்டினம் ஸ்ரீஜடாயுபுரீஸ்வரர் கோயிலில் மாசி மக பிரம்மோற்சவம் கொடியேற்றம் நடந்தது.

## மாரியம்மன் கோயில் கும்பாபிஷேகம்





சேலத்தில் பிரசித்தி பெற்ற செவ்வாய்ப்பேட்டை மாரியம்மன் கோயில் கும்பாபிஷேகம் நேற்று கோலாகலமாக நடந்தது.

# ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ பாக மகளிர் பயிற்சி கூட்டம்







**திருவண்ணாமலை, பிப்.23:** திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் சட்டமன்ற தொகுதியில் ’வெல்லும் தமிழ் பெண்கள்’ பாக மகளிர் பயிற்சி கூட்டத்தில் கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு பெ.சு.தி. சரவணன் அவர்கள் கலந்து கொண்டு தேர்தல் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

கலசபாக்கம் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்செல்வன் அவர்கள், கலசபாக்கம் ஒன்றிய கழக செயலாளர் A.சிவக்குமார் அவர்கள், வழக்கறிஞர் சுப்பிரமணியன் அவர்கள், புதுப்பாளையம் ஒன்றிய கழகச் செயலாளர் சுந்தரபாண்டியன் அவர்கள் , ஆறுமுகம் அவர்கள் போளூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் சேகர் அவர்கள் பணிக்கு ஒருங்கிணைப்பாளர்கள் இளங்கோவன், இராஜசேகரன், முனியப்பன், முருகையன், முருகன், நாவலன், மாவட்ட ஆதிதிராவிடர் அணி தலைவர் மனோகரன் அவர்கள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் சிறுகதை தொகுப்பு நூல் வெளியீடு



நெல்லை பொருநை புத்தகத் திருவிழாவில் தேவர்குளம் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் சிறுகதை தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.

## திமுக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி



உடுமலையில் திமுக மூத்த முன்னோடிகளுக்கு துணை முதல்வர் உதயநிதி பொற்கிழி வழங்கினார்.

## ஸ்டாலின் மகளிர் படையின் பயிற்சி பாசறை தொடக்க விழா



கோவில்பட்டியில் திமுக சார்பில் நடந்த ஸ்டாலின் மகளிர் படையின் பயிற்சி பாசறை தொடக்க விழாவில் அமைச்சர் கீதாஜீவன் பேசினார்.

## பொய்கையில் புதிய அங்கன்வாடி மையம் திறப்பு விழா!



**வேலூர், பிப். 23:** வேலூர் தெற்கு மாவட்டம், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி, கிழக்கு ஒன்றியம் பொய்கை ஊராட்சியில் உள்ள அம்பேத்கர் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் திறப்பு விழாவில் வேலூர் தெற்கு மாவட்ட செயலாளர் மற்றும் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ. பி. நந்தகுமார் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இதில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, கிழக்கு ஒன்றிய செயலாளர் கோ.குமரபாண்டியன், மத்திய ஒன்றிய செயலாளர் வெங்கடேசன், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## சிங்கப்பெருமாள் கோயிலில் கும்பாபிஷேகம்



பணகுடி ராமலிங்க சுவாமி, சிவகாமி அம்மன், ஸ்ரீதேவி, பூதேவி சமேத நம்பி சிங்கப்பெருமாள் கோயிலில் நேற்று கும்பாபிஷேகம் நடந்தது.

## உலக நன்மைக்காக கோடி அர்ச்சனை



தூத்துக்குடி திருவிக நகர் சக்தி பீடத்தில் உலக நன்மைக்காக கோடி அர்ச்சனை நடந்தது.

## காளையை அடக்க முயன்ற இளைஞர்கள்



அரியலூர் மாவட்டம் பூண்டியில் நேற்று ஜல்லிகட்டில் சீறி வந்த காளையை அடக்க முயன்ற இளைஞர்கள்.

## புதிய பேருந்து நிலையம் திறப்பு



பொள்ளாச்சியில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தை தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

## பாக மகளிர் அணி தலைவிகளுக்கு நடந்த பயிற்சி கூட்டம்



தாம்பரம் சட்டமன்றத் தொகுதி சார்பில் வெல்லும் தமிழ் பெண்கள் எனும் தலைப்பில் பாக மகளிர் அணி தலைவிகளுக்கு நடந்த பயிற்சி கூட்டத்தில் மேயர் வசந்தகுமாரி பேசினார்.

## 1800 தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவி



சென்னை டான்பாஸ்கோ பாலிடெக்னிக் வளாகத்தில் நடந்த விழாவில் 1800 தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் நேரு வழங்கினார். உடன் அமைச்சர் சேகர்பாபு, மேயர் பிரியா உள்ளனர்.

## இராமநாதபுரத்தில் சிவப்பு புத்தகம் வாசிப்பு இயக்கம்

**இராமநாதபுரம், பிப்.23:**

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவப்பு புத்தகம் தினத்தையொட்டி கூலி உழைப்பும் மூலதனமும் என்ற புத்தகத்தை வாசிக்கும் வாசிப்பு இயக்கம் மாவட்டத்தில் 10க்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்றது. அதில் ஒரு பகுதியாக இராமநாதபுரம் தாலுகா குழு சார்பாக இராமநாதபுரத்தில் கே.ராகுல் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ரெ.குருவேல், தாலு காச் செயலாளர் என்.வெங்கடேஷ், மாவட்டக்குழு உறுப்பினர்கள் பி.கல்யாணசுந்தரம், டி.முத்துப்பாண்டி, தாலுகா குழு உறுப்பினர் எஸ்.பி.பூமிநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## கல்விக் கடன் சிறப்பு முகாம்

**சிவகங்கை, பிப்.23:**

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த கல்லூரி மாண வர்கள் பயன்பெறும் வகையில் கல்விக் கடன் பெறு வதற்கான சிறப்பு முகாம் வரும் 23 ஆம் தேதி நடைபெறு கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார். அனைத்து வங்கிகளின் சார்பில் நடைபெறும் முகா மில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் HTTPS://PMVIDYALAXMI.CO.IN இணையதளத்தில் பதிவு செய்த விண்ணப்ப நகல், மாணவர் மற்றும் பெற்றோரின் புகைப்படங்கள், கூட்டு வங்கி கணக்கு பாஸ்புக் நகல், இருப்பிடச் சான்று, வருமானச் சான்று, சாதிச் சான்று, பான் கார்டு, ஆதார் அட்டை நகல், கல்லூரி வழங்கிய அசல் BONAFIDE சான்றிதழ், கல்விக் கட்டண விவரம், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் பிற படிப்புகளின் மதிப்பெண் சான்றிதழ்கள், முதல் பட்டதாரி சான்று (இருந்தால்), கலந்தாய்வு மூலம் பெற்ற சேர்க்கை ஆணை உள்ளிட்ட ஆவணங்களுடன் வர வேண்டும். முகாமில் பெறப்படும் விண்ணப்பங்கள் வங்கி களின் விதிமுறைகளின்படி பரிசீலிக்கப்பட்டு தகுதியான வர்களுக்கு உடனடி கல்விக் கடன் ஒப்புதல் வழங்கப் படும் என்றும் மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## மகாத்மா வித்யாலயா பள்ளியில் விளையாட்டு விழா

**திருவில்லிபுத்தூர், பிப்.23:**

மகாத்மா வித்யாலயா பள்ளியில் 22-வது ஆண்டு விளையாட்டு விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் பங்கேற்ற விருந்தினர்களை பள்ளித் தாளாளர் முருகேசன் வரவேற்றார். முதல்வர் ராணி முன்னிலை வகித்தார். ஆசிரியை நர்மதா விளையாட்டு விழா ஆண்டு அறிக்கையை வாசித்தார். திருவில்லிபுத்தூர் இன்னர் வீல் சங்கம் தலைவர் டாக்டர் சுகுமாரி மற்றும் செயலாளர் சாந்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். விழாவின் ஒரு பகுதியாக மாணவர்களின் வண்ணமய மான கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கராத்தே, யோகா, சிலம்பம், வில்வித்தை உள்ளிட்ட பல்வேறு திறன்களை மாணவர்கள் வெளிப்படுத்தினர். மேலும் மாணவர் களுக்கு பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப் பட்டன. ஆசிரியர்களுக்கான சிறப்பு போட்டிகளும் நடந்தன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவி யர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள் பரிசுகளை வழங்கினர். பள்ளி ஒருங்கிணைப்பாளர் அருணா நன்றி கூறினார்.

## அங்கன்வாடி மையங்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் விழா



**இராமநாதபுரம், பிப்.23:**

மாவட்ட ஆட்சியர் அலுவலக பயிற்சி மையத்தில், பாவை பவுண்டேஷன் சார்பில் அங்கன்வாடி மையங்க ளுக்கு கற்றல் திறன் மேம்பாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் விஸ்பவதி தலைமை தாங்கி னார். பாவை பவுண்டேஷன் மாவட்ட ஒருங்கிணைப்பா ளர் கனகராஜ் முன்னிலை வகித்தார். குழந்தைகளின் ஆரம்பக் கல்வித் தரத்தை உயர்த் தும் நோக்கில் கற்றல் விளையாட்டு பொருட்கள், அறி வாற்றல் வளர்ச்சிக்கான உபகரணங்கள் மற்றும் குழந்தை களின் உயரத்தை கண்காணிக்கும் அளவீட்டு கருவிகள் அங்கன்வாடி பணியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஏற்பாடு ஸ்டாலின் பிறந்தநாள்: 73 ஜோடிகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்தார் உதயநிதி



**சென்னை, பிப்.23:**

முதலமைச்சர் ஸ்டாலினின் 73வது பிறந்தநாளையொட்டி சென்னை கிழக்கு மாவட்டத்தின் சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 73 இணையர்களின் திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசை பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.

இந்த திருமண விழாவில் தி.மு.க.வின் இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

இந்தத் திருமணம் மட்டுமல்ல, கழகத்திற்காக உழைத்திருக்கின்ற 76 மகளிருக்கு இருசக்கர வாகனங்களையும் அமைச்சர் சேகர்பாபு வழங்கியிருக்கிறார். அதற்கும் என்னுடைய வாழ்த்துகள்.

கழகத் தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு நடக்கின்ற முதல் நிகழ்ச்சி இது. அமைச்சர் சேகர்பாபு கிட்டத்தட்ட ஒரு மாத காலம் தலைவரின் பிறந்தநாளைச் சிறப்பாக நடத்துவார். அதில் இன்று தொடக்கமே மிகச்சிறப்பாக நடத்திக் காட்டியிருக்கிறார்.

அரசியலாக இருக்கட்டும், ஆன்மீகமாக இருக்கட்டும் இரண்டிலுமே சேகர்பாபு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருபவர். அதனால்தான் தலைவர் அவரை அடிக்கடி "சேகர்பாபு அல்ல, நீ செயல்பாபு" என்று புகழ்ந்து பேசுவார்.

இந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் நம் அரசு சார்பாக 5,000 கோயில்களுக்குக் குடமுழுக்கு நடத்தப்பட்டிருக்கிறது. இது எந்த ஆட்சியிலும் செய்யாத சாதனை. கிட்டத்தட்ட 9,000 கோடி மதிப்பிலான கோயில் நிலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. துறை சார்பாக 3,000 திருமணங்களை நடத்தி வைத்துள்ளார். இப்படி அவரின் பல்வேறு சாதனைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

அரசியல் பணியாக இருக்கட்டும், கட்சிப் பணியாக இருக்கட்டும், மக்கள் பணியாக இருக்கட்டும், எப்பொழுதுமே மக்களோடு மக்களாகத் தொடர்பில் இருக்கக்கூடிய ஒரு மாவட்டச் செயலாளர் தான் சேகர்பாபு. கொரோனா காலமாக இருந்தாலும் சரி, மழை வெள்ளம் போன்ற பேரிடர் காலமாக இருந்தாலும் சரி, களத்தில் இறங்கி என்றைக்கும் மக்களோடு மக்களாக நின்று மக்களுக்குத் தேவையான உதவிகளை உடனுக்குடன் செய்து கொடுப்பவர். ஏழை, எளிய மக்களுக்கு, மாணவர்களுக்கு, மாணவி களுக்குப் பயிற்சி வகுப்புகள், கல்வி மட்டுமல்லாமல் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற திறன் பயிற்சி என இப்படிப் பல்வேறு விஷயங்களை அவர் செய்து வருகிறார். இன்றைக்குத் தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு மட்டுமல்ல, தீபாவளி, பொங்கல், ரம்ஜான், கிறிஸ்துமஸ் என இப்படி எல்லாப் பண்டிகைகளையும் மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் அதை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யக்கூடியவர்.

அதன் தொடர்ச்சியாக இன்று கழகத்திற்காக உழைத்த 76 மகளிருக்கு இருசக்கர வாகனங்களையும் கொடுத்திருக்கிறார்.

எனக்குத் தெரிந்த வரை இந்த மேடையில் பாதிக்கும் மேற்பட்டவர்களுக்குக் காதல் திருமணம்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். கிட்டத்தட்ட 90 சதவிகிதம் இல்லை, 100 சதவிகிதம் இங்கு காதல் திருமணம்தான். கூடுதல் மகிழ்ச்சி, ஏனென்றால் எனக்கும் காதல் திருமணம்தான். இவ்வளவு பெரிய தடைகளை எல்லாம் கடந்து, இன்று இத்தனை இணையர்கள் திருமணத்தை, அமைச்சர் சேகர்பாபு நடத்தி வைத்துள்ளார்.

இவ்வாறு உதயநிதி பேசினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் உள்பட ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.

## ரோட்டில் திரியும் கால்நடைகளைப் பிடிக்கும் வாகனங்கள் உள்பட 23 புதிய வாகனங்கள்: மேயர் ஆர்.பிரியா இயக்கி வைத்தார்



**சென்னை, பிப்.23:**

மேயர் ஆர்.பிரியா, மாநகராட்சியின் சார்பில் 23 புதிய வாகனங்களைப் பயன்பாட்டிற்கு இயக்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலைகளில் சுற்றித் திரியும் மாடுகளைப் பிடிக்க பயன்படுத்தப்படும் வாகனங்களில் கழிவு செய்யும்நிலையில் இயங்கும் வாகனங்களுக்கு மாற்றாக இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் ரூபாய் 2.28 கோடி மதிப்பீட்டில் 8 எண்ணிக்கையில் கால்நடைகள் பிடிக்கும் புதிய வாகனங்களும், பெருநிறுவனங்களின் சமூக பங்களிப்பு நிதியின் கீழ் அண்ணாநகர் மண்டலத்தில் மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணிக்காக எச்.டி.எப்.சி. வங்கியின் சார்பில் 10 மூன்று சக்கர மின்கல வாகனங்களும், பெடரல் வங்கியின் சார்பில் 5 மூன்று சக்கர மின்கல வாகனங்களும் என மொத்தம் 23 வாகனங்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்கள், பொது இடங்களில் சுற்றுப்புற சூழலை மேம்படுத்திடும் வகையிலும் அழகுபடுத்திடும் வகையிலும் தன்னார்வலர்கள் மூலமாக சூரிய காந்தி விதைகள் நடும் பணியினை மேயர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், , நிலைக்குழுத் தலைவர் (கல்வி) த.விசுவநாதன், எச்.டி.எப்.சி. வங்கி தமிழ்நாடு தலைவர் பிரேம் ஆனந்த், மண்டலத் தலைவர் ராமச்சந்திரன் மற்றும் அலுவலர்கள், தன்னார்வலர்கள் உடனிருந்தனர்.

## பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப ஆய்வகம்: அமைச்சர் அன்பில் மகேஸ் திறந்தார்

**சென்னை, பிப்.23:**

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இன்று சென்னை, அடையாறு குமார ராஜா முத்தையா மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் 654 அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 9 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.41.85 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 654 உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களை திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடம் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனை வளர்க்கவும், குழுவாக இணைந்து செயல்படக்கூடிய திறனைக் கற்றுக் கொள்ளவும், படைப்பாற்றலை வளர்க்கவும் முதற்கட்டமாக ரூ.6.09 கோடி மதிப்பீட்டில் 15 எந்திரவியல் ஆய்வகங்கள்நிறுவப்பட்டு உள்ளன.

மாற்றுத்திறன் கொண்ட குழந்தை களின் புலன் உணர்வுத்திறன், அறிவுத்திறன், பெருந்தசை இயக்கத்திறன் மற்றும் நுண்தசை இயக்கத்திறன் ஆகியவற்றை விளையாட்டு வாயிலாக மேம்படுவதற்காக முதற்கட்டமாக 20 மாவட்டங்களில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் 20 பல்வகைத் திறன் பூங்காக்கள்நிறுவப்பட்டு உள்ளன.

6 முதல் 8ம் வகுப்பு மாணவர்களின் ஆங்கிலத் திறனை மேம்படுத்துவதற்காக, அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நிறுவப்பட்டுள்ள உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களை பயன்படுத்தி டிஜிட்டல் மொழிக்கற்றல் திட்டமான மொழிகள்திட்டத்தை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்தத் திட்டத்தின் மூலம் மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களது கேட்கும், பேசும், வாசிக்கும் மற்றும் எழுதும் (LSRW) திறன்களை சுயவேகக் கற்றல் டிஜிட்டல் முறையில் மேம்படுத்தி வருகின்றனர்.

அறிவியல் கருத்துகளை மாணவர்கள் எளிமையாக, அனுபவத்தால் விளக்கும் வகையில் கற்றுக் கொள்ளும் பொருட்டு அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ரூ. 80.24 இலட்சம் மதிப்பீட்டில் சிறுவர் அறிவியல் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. ஸ்டெம் சார்ந்த 21 கருவிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த அறிவியல் பூங்கா பள்ளி மாணவர்கள் இடையே அறிவியல் ஆர்வத்தை வளர்க்கும் வகையில் செயல்படுகிறது.

பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் மற்றும் திட்டமிடல் போன்ற செயல்முறைகளை மேம்படுத்துவதற்கு ICT தொழில்நுட்பம் ஒரு முக்கிய ஊக்கியாக உள்ளதைக் கருத்தில் கொண்டு, அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் ரூ.519.73 கோடி மதிப்பீட்டில் 8,209 உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களும், அரசு தொடக்க, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் ரூ. 455.32 கோடி மதிப்பீட்டில் 22,931 திறன்மிகு வகுப்பறைகளும் வெற்றிகரமாக நிறுவப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டில் உள்ளன.

இந்த உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் காணொலி, ஒலி மற்றும் டிஜிட்டல் கருவிகள் மூலம் கற்பித்தல் மற்றும் கற்றலை எளிமையாக்கிப் பாடப்புத்தக உள்ளடக்கத்தை விரைவாகவும், ஆர்வமாகவும் கற்றுக் கொள்ள உதவுகின்றன. இது ஒரு கல்வி வளமாக அமையும் என்றார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### பெண்களே உஷார்! வைட்டமின் டி குறைபாட்டில் அலட்சியம் காட்டாதீர்கள்!

சமீப காலமாக தொடர்ச்சியாக பெண்களிடையே வைட்டமின் டி குறைபாடு அதிகரிப்பது தொடர்கதையாகி வருகிறது. இன்றைய வாழ்க்கை முறை தான் இந்த குறைபாடுகளுக்கு காரணமாக உள்ளது. பெண்கள் வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ நீண்ட நேரமாக சூரிய வெளிச்சம் இல்லாத அறைகளில் பணிபுரிய வேண்டிய கட்டாயம் உள்ளது. சூரியன் நன்கு உதிக்கும் முன் வேலைக்கு கிளம்பி விடுவதாலும், சருமத்தில் சூரிய ஒளியை இவர்கள் பெறுவது குறைகிறது. தற்போது மகளிர் தினமும் சன் ஸ்கிரீனை பயன்படுத்துவது வழக்கமாகி விட்டதால், அதன் காரணமாகவும் விட்டமின் டி கிடைப்பது கடினமாகிறது.

பெண்களுக்கு இருக்கும் ஊட்டச்சத்து குறைபாடுகள், பால் மற்றும் பால் பொருட்களின் குறைந்த அளவிலான நுகர்வுகள், உடல் பருமன், ஹார்மோன் சமநிலை இல்லாமல் இருத்தல் ஆகியவையும் வைட்டமின் டி குறைபாடுகளை ஏற்படுத்துகிறது. இந்த குறைபாடுகள் பல ஆரோக்கிய கோளாறுகளை வரவழைத்து உடல்நல பிரச்னைகளை ஏற்படுத்துகின்றன.

வயது அதிகமாகும்போது உடல் வைட்டமின் டி உற்பத்தி செய்வதையும் குறைக்கிறது. மடிக்கணினிகள் மற்றும் மொபைல் போன்களில் அதிக நேரம் செலவழிப்பதும், உடல் செயல்பாடு குறைவதாலும் பல உடல்நல குறைபாடுகள் தோன்றுகின்றன.

வைட்டமின் டி குறைபாட்டின் பொதுவான அறிகுறிகள்:

ஆரம்ப நிலை அறிகுறிகளாக பெண்களுக்கு தொடர்ச்சியான சோர்வு மற்றும் பலவீனம் இருக்கலாம். உடல் வலி, கைகால் வலி, மூட்டு வலி போன்ற எலும்பு சார்ந்த வலிகளை பெண்கள் அனுபவிக்கலாம். வைட்டமின் டி குறைபாடு காரணமாக ஒரு சில பெண்களுக்கு அடிக்கடி சளியும், நோய் தொற்றும் ஏற்படும். சில நேரங்களில் மனச்சோர்வு, தூக்கமின்மை போன்ற உணர்வுகளும் கூட ஏற்படக்கூடும். இதன் காரணமாக தலைமுடி உடைவதும், உதிர்ந்து போவதுமாக இருக்கும்.

எலும்பு மெலிதல் மற்றும் ஆஸ்டியோபோரோசிஸ் நோய்:

55 வயதைக் கடந்த பெண்களுக்கு உடலில் ஈஸ்ட்ரோஜன் உற்பத்தி குறைவதால், எலும்புகளின் வலிமை குறைய தொடங்குகிறது. உடலில் போதுமான அளவில் வைட்டமின் டி இல்லாவிட்டால் குடலால் கால்சியத்தை உறிஞ்ச முடியாது. இதனால் எலும்பு சார்ந்த நோய்கள் ஏற்படுகின்றன.

தசை மற்றும் நரம்பு மண்டல நோய்கள்:

மூளையிலும் தசைநார்களிலும் வைட்டமின் டி ஏற்பிகள் உள்ளன. இவற்றிற்கு வைட்டமின் டி கிடைக்காவிட்டால் தசையின் வலிமை குறைந்து போகும், மேலும் நரம்பு மண்டல சமநிலை இழப்பு ஏற்பட்டு நடக்கும் போது அடிக்கடி தடுமாறி விழத் தொடங்குவார்கள்.

நோய் எதிர்ப்பு மண்டல பாதிப்பு:

வைட்டமின் டி ஆனது உடலின் வெள்ளை அணுக்களை ஒழுங்குபடுத்தும் செயல்களை செய்கிறது, இதனால் நோயெதிர்ப்பு மண்டலம் ஆரோக்கியமாக இருக்கிறது. ஆனால், வைட்டமின் டி இல்லாத போது தன்னுடல் தாக்க நோய் மற்றும் சுவாச நோய்கள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

கருவுறுதலில் தோல்வி:

சமீபத்திய சில ஆய்வுகள் கருவுறுதலுக்கும் வைட்டமின் டி க்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்புகளை உறுதிப்படுத்துகிறது. PCOS பாதிப்பு உள்ள பெண்களுக்கு வைட்டமின் டி சிகிச்சை அளிக்கப்பட்டபோது நேர்மறையான முடிவுகளை கண்டறிந்துள்ளனர்.

வைட்டமின் டி குறைபாட்டை நிவர்த்தி செய்வது எப்படி?

தினமும் காலையில் சூரிய ஒளி வந்ததும் 20 நிமிடங்கள், உடலில் சூரிய ஒளிபடும் அளவிற்கு நடமாட வேண்டும். தினசரி உணவில் பால் சார்ந்த பொருட்களை சேர்த்துக் கொள்ள வேண்டும். காளான்கள், கொழுப்பு நிறைந்த மீன்கள், சீஸ், ஓட்ஸ் போன்றவற்றில் இயற்கையாக வைட்டமின் டி கிடைக்கிறது. மேலும் மருத்துவரின் பரிந்துரையின் பேரில் வைட்டமின் டி மாத்திரைகளும் எடுத்துக் கொள்ளலாம்.

## மினி டைடல் பார்க்: அரசு டெண்டர் கோரியது!

**சென்னை, பிப்.23:**

மாநிலம் முழுதும் தகவல் தொழில்நுட்ப வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்கில், நாகப்பட்டினம், கரூர் மற்றும் புதுக் கோட்டை மாவட்டங்களில் மினி டைடல் பார்க் அமைக்க தமிழ்நாடு அரசு டெண்டர் அறிவித்துள்ளது. நாகப்பட்டினத்தில் ரூ. 42 கோடியில் 58,660 சதுர அடியிலும், கரூரில் ரூ. 37 கோடி யில் 64 ஆயிரம் சதுர அடியிலும், புதுக் கோட்டையில் ரூ. 37 கோடியில் 60,386 சதுர அடியிலும் இந்த கட்டடங்கள் அமைய உள்ளன. மொத்த திட்ட செலவு ரூ. 120 கோடி ஆகும். தகுதியான நிறுவனங் களை தேர்வு செய்து நான்கு மாதங்களுக் குள் கட்டுமான பணிகளை துவக்க திட்ட மிடப்பட்டுள்ளது.

## கட்டுப்பாட்டை இழந்த கார் விபத்தில் சிக்கியது

**சிதம்பரம், பிப். 23:**

சென்னையிலிருந்து ஒரு குடும்பத்தினர் சீர்காழி நோக்கி காரில் பயணம் செய்து கொண்டி ருந்தபோது, அந்த கார் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்தது. அது லால்புரம் புறவழிச் சாலையோரத்தில் இருந்த டீக்கடை முன்பு நிறுத்தப்பட்டிருந்த 10-க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் மற்றும் இரண்டு கார்கள் மீது மோதிவிட்டுச் சாலையோர முட் புதரில் தலைகுப்புறக் கவிழ்ந்தது. கார் அதிவேகமாக வந்ததைக் கவனித்த அங்கிருந்த 20-க்கும் மேற்பட்டோர் சிதறி ஓடிய தால் பெரிய விபத்து தவிர்க்கப்பட்டது. காய மடைந்தவர்களை மீட்ட தாலுகா காவல்துறையினர், 108 ஆம்புலன்ஸ் மூலம் சிதம்பரம் அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர்.

## பேருந்தில் நூதன முறையில் 7 பவுன் நகை திருட்டு

**சிதம்பரம், பிப். 23:**

சிதம்பரம் அருகே சி.முட்லூர் கிராமத்தைச் சேர்ந்த கனக ராஜ் மனைவி வள்ளி (60), வடலூருக்குச் சிதம்பரத்தி லிருந்து பேருந்தில் சென்றுள்ளார். அப்போது அருகில் அமர்ந்திருந்த இரண்டு பெண்கள் நகைகள் குறித்துப் பேசித் திருடர்கள் அதிகம் இருப்பதாகக் கூறி நகைகளைக் கழற்றிப் பையில் வைக்கும்படி நம்ப வைத்துள்ளனர். இதனை நம்பிய வள்ளி தனது 7 பவுன் நகைகளைக் கழற்றிப் பையில் வைத்தபோது, அந்தப் பெண்கள் 'பேப்பரில் மடித்துக் கொடுக்கிறோம்' என்று கூறி நகை களை மடித்துக் கொடுத்துள்ளனர். பின்னர் பேருந்து சிறிது தூரம் சென்றபோது அவர்கள் இறங்கித் தப்பியுள்ளனர். காகிதத்தைப் பிரித்துப் பார்த்த வள்ளி அதில் கவரிங் வளையல்கள் இருந்த தைக் கண்டு அதிர்ச்சி யடைந்தார். அவர் அளித்த புகாரின் பேரில் உதவி ஆய்வாளர் ஜம்புலிங்கம் வழக்குப் பதிவு செய்து, சிசிடிவி காட்சி களை ஆய்வு செய்து விசாரணை மேற் கொண்டார். இதில் கிருஷ்ண கிரி மாவட்டத்தைச் சேர்ந்த அஞ்சலையம்மாள் (60) மற்றும் நேத்ரா (33) என்பது தெரியவந்தது. அவர்க ளிடம் இருந்த 7 பவுன் நகை களைப் பறிமுதல் செய்து சிறையில் அடைத்தனர்.

# மாசி மகத்தையொட்டி கும்பகோணம் பெருமாள் கோயில்களில் கொடியேற்றம்: மார்ச் 2-ல் 3 கோயில்களில் தேரோட்டம்





**கும்பகோணம், பிப்.23:**

கும்பகோணத்தில் உள்ள 3 பெருமாள் கோயில்களில் மாசி மகத்தையொட்டி கொடியேற்றம் பிப்.22-ம் தேதி நடைபெற்றது.

கும்பகோணத்தில் உள்ள 3 பெருமாள் கோயில்களில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாசி மகாமக விழாவும், ஆண்டுக்கு ஒரு முறை மாசி மக விழாவும் நடைபெறுவது வழக்கம்.

நடப்பாண்டு சக்கரபாணி சுவாமி, ராஜகோபாலசுவாமி, ஆதிவராகப் பெருமாள் ஆகிய 3 கோயில்களில் கொடியேற்றம் பிப்.22-ம் தேதி நடைபெற்றது.

அந்தக் கோயில்களில் உள்ள கொடி மரத்திற்குச் மங்களப் பொருட்களால் அபிஷேகம் செய்விக்கப்பட்டு, சிறப்புப் பூஜைகள் செய்து, மங்கள வாத்தியங்கள் முழங்கக் கொடியேற்றம் நடைபெற்றது.

அப்போது கொடி மரத்தின் முன் சக்கரபாணி கோயிலில் விஜயவல்லி- சுதர்சனவல்லி தாயார்கள் உடனாய சக்கரபாணி சுவாமி, ராஜகோபால சுவாமி கோயிலில் செங்கமலவல்லித் உடனாய ராஜகோபால சுவாமி, ஆதிவராக பெருமாள் கோயிலில் அம்புஜ வல்லி உடனாய ஆதிவராகப் பெருமாள் சுவாமிகள் சிறப்பலங்காரத்தில் காட்சியளித்தனர்.

# மாசிமகம்: கும்பகோணத்தின் சிவன் கோயில்களில் கொடியேற்றம்!



**கும்பகோணம், பிப்.23:**

கும்பகோணத்தில் உள்ள 7 சிவன் கோயில்களில் மாசி மகத்தையொட்டி கொடியேற்றம் (பிப்.21) நடைபெற்றது.

கும்பகோணத்தில் நடைபெறும் மகாமக விழாவுக்கு சிறப்புப் பெற்ற 12 சிவன் கோயில்கள் மற்றும் 5 பெருமாள் கோயில்களில் 12 ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறுவது மாசி மகாமகம்.

நிகழாண்டு மாசி மக விழாவை யொட்டி மங்களாம்பிகையம்மன் உடனாய ஆதிகும்பேஸ்வரர், காசி விசாலாட்சி உடனாய காசிவிஸ்வநாதர், சோமசுந்தரி உடனாய சோமேஸ்வரர், சவுந்தரநாயகி உடனாய கவுதமேஸ்வரர், அமிர்தவள்ளி உடனாய அபிமுகேஸ்வரர், ஞானாம்பிகை உடனாய காளஹஸ்தீஸ்வரர், கரும்படு சொல்லியம்மை உடனாய சாட்சிநாதர் சுவாமி ஆகிய 7 சிவன் கோயில்களில் (பிப்.21) கொடியேற்றம் நடைபெற்றது. முன்னதாக கொடிமரத்துக்கு பல்வேறு வகையான மங்களப் பொருட்களால் அபிஷேகம் செய்விக்கப்பட்டு விமரிசையாக கொடியேற்றம் நடைபெற்றது. அப்போது 7 கோயிலில் உள்ள பஞ்சமூர்த்தி சுவாமிகள் கொடி மரத்தின் முன்பு பக்தர்களுக்கு காட்சியளித்தனர். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் மேற்கொண்டனர். வரும் மார்ச் 23-ம் தேதி வரை பல்வேறு வாகனங்களில் சுவாமிகள் வீதியுலா நடைபெறுகிறது.

ஆதிகும்பேஸ்வரர் கோயிலில் பிப்.24-ம் தேதி 63 நாயன்மார்கள் வெள்ளி பல்லக்கில் வீதியுலாவும், பிப்.25-ம் தேதி இரவு ஓலைச்சப்பரமும், பிப்.28-ம் தேதி விநாயகர், முருகன், சுவாமி, அம்பாள் ஆகிய 4 திருத்தேரோட்டமும், மார்ச் 1-ம் தேதி சண்டிகேஸ்வரர் தேரோட்டம், மார்ச் 1-ம் தேதி மாலை காசிவிஸ்வநாதர், கௌதமேஸ்வரர், அபிமுகேஸ்வரர் ஆகிய 3 கோயிலின் தேரோட்டம் மகாமக குளத்தை சுற்றிலும், காலஹஸ்தீஸ்வரர் மற்றும் சோமேஸ்வரர் கோயில்களின் தேரோடும் வீதிகளில் தேரோட்டம் நடைபெறுகிறது.

இதேபோல் கம்பட்ட விஸ்வநாதர் கோயிலில் திருப்பணிக்கான பாலாலயம் நடைபெற்றுள்ளதால், இந்தக் கோயிலை தவிர மற்ற நாகேஸ்வரர், ஏகாம்பரேஸ்வரர், கோடிஸ்வரர், அமிர்த கலசநாதர், பாணபுரீஸ்வரர், ஆகிய 5 சிவன் கோயில்களில் ஏக தின உற்சமான தீர்த்தவாரிக்கு மகா மக குளக்கரையில் எழுந்தருளுகின்றனர்.

இதைத் தொடர்ந்து மார்ச் 2-ம் தேதி 11 சிவன் கோயில் சுவாமிகள் பஞ்ச மூர்த்திகளுடன் புறப்பட்டு, வீதியுலாவாக மகா மககுளக்கரையில் எழுந்தருளி மகல் 12 மணிக்கு மேல் 12.30 மணிக்குள் தீர்த்தவாரி நடைபெறுகிறது.

மார்ச் 3-ம் தேதி இரவு ஆதிகும்பேஸ்வரர் கோயிலில் சுவாமி அம்பாள் திருக்கோயில் உட்பிரகாரத்தில் 6 முறையும், வீதியில் ஒரு முறை என 7 முறை வலம் வருதலும், 4-ம் தேதி இரவு சுவாமி அம்பாள் ஏகாசனத்தில் புறப்பாடு நடைபெறுகிறது. இதே போல் சக்கரபாணி, ராஜகோபாலசுவாமி, ஆதிவராகப்பெருமாள் ஆகிய 3 பெருமாள் கோயில்களில் நாளை (பிப்.22) கொடியேற்றம் நடைபெறுகிறது. வரும் மார்ச் மார்ச் 1-ம் தேதி வரை பல்வேறு வாகனங்களில் சுவாமிகள் வீதியுலா நடைபெறுகிறது. பிரதான நிகழ்ச்சியான மாசி மகமான மார்ச் 2-ம் தேதி காலை 9 மணிக்கு மேல் 9.30 மணிக்குள் திருத்தேரோட்டம் நடைபெறுகிறது.

சாரங்கபாணி சுவாமி கோயிலில் பிப்.25-ம் தேதி முதல் மார்ச் 1-ம் தேதி வரை ப்ரஹார புறப்பாடும், ஸ்ரீ சடாரி திருமஞ்சனமும், மார்ச 2-ம் தேதி காலை பெருமாள் உபயநாச்சியாருடன் காலை 9 மணிக்கு மேல் 10 மணிக்குள் வீதியுலா, தொடர்ந்து பொற்றாமரை குளத்தில் தெப்ப உற்சவமும், தீர்த்தவாரி, இரவு 11 மணிக்கு பெருமாள் உபயநாச்சியாருடன் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளல் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அந்தந்த கோயில் செயல் அலுவலர்கள், ஊழியர்கள், பணியாளர்கள் மற்றும் உயபதாரர்கள் செய்து வருகின்றனர்.




## சட்டவிரோத மது விற்பனை: 2 பேர் கைது

**திருவில்லிப்புத்தூர், பிப்.23:**

வத்திராயிருப்பு காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட அரசு மருத்துவமனை அருகே, சார்பு ஆய்வாளர் கோட்டி யப்பசாமி தலைமையிலான போலீசார் ரோந்து சென்ற போது மேலப்பாளையத்தைச் சேர்ந்த ஈஸ்வரன் என்பவர் அரசு அனுமதி இன்றி 26 மது பாட்டில்களை விற்பனைக்கு வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து மது பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதேபோல் கூமாபட்டி காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட கான்சாபுரம் கல்மண்டபம் அருகே, சார்பு ஆய்வாளர் முருகானந்தம் தலைமையிலான போலீசார் ரோந்து சென்றபோது கான்சாபுரத்தைச் சேர்ந்த முருகன் என்பவர் அனுமதி இன்றி மதுபாட்டில்கள் விற்பனைக்கு வைத்திருந்தது தெரியவந்தது. அவரிடமிருந்து 26 மது பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இரு சம்பவங்களிலும் மேலும் விசாரணை நடைபெற்று வருகின்றது.

## வாகனம் மோதி பெண் உயிரிழப்பு

**ஸ்ரீவில்லிபுத்தூர், பிப்.23:**

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே கொழூர்பட்டியில் வசித்து வந்த சாந்தி வெள்ளிக்கிழமை சிவகாசி மெயின் ரோடு செல்லும் சாலையை கடக்க முயன்றபோது, அத்திக்குளம் காலனியைச் சேர்ந்த மணிகண்டன் ஓட்டி வந்த இருசக் கர வாகனம் மோதியது. இந்த விபத்தில் சாந்திக்கு தலையில் ரத்தக்காயம், வலது தொடையில் எலும்பு முறிவு மற்றும் இடது கை மணிக்கட்டில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. சம்பவ இடத்தி லேயே மயங்கி விழுந்தார். தகவல் அறிந்த அவரது தம்பி கார்த்திகேயன், 108 ஆம்புலன்ஸ் மூலம் அவரை ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்து வமனைக்கு அனுப்பி வைத்தார். அங்கு சிகிச்சை அளிக் கப்பட்டும், சாந்தி உயிரிழந்தார்.

## காலி நிலத்தில் புற்கள் எரிந்து தீ விபத்து

**ஸ்ரீவில்லிபுத்தூர், பிப்.23:**

குடியிருப்பு பகுதியில் காலி நிலத்தில் இருந்த காய்ந்த புற்கள் திடீரென தீப்பற்றி எரிந்ததால் பர பரப்பு ஏற்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், சிவ காசி செல்லும் சாலையில் மாவட்ட நீதிமன்றம் அருகே உள்ள ராஜீவ் காந்தி நகர் குடியிருப்பு பகுதி யில் சனிக்கிழமை மதியம் இந்த சம்பவம் நடைபெற்றது. குடி யிருப்பு வீடுகளுக்கு அருகிலுள்ள காலி நிலத்தில் காய்ந்த புற்கள் அதிகமாக இருந்த நிலையில் திடீ ரென தீப்பற்றி எரிந்தது. வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததும், பலத்த காற்று வீசி யதும் தீ வேகமாக பரவி அருகி லுள்ள வீடுகளுக்கு ஆபத்து ஏற்பட்டது. இதையடுத்து பகுதி மக்கள் தகவல் அளித்ததன் பேரில் ஸ்ரீ வில்லிபுத்தூர் தீயணைப்பு நிலை யத்தினர் நிலைய அலுவலர் மற்றும் போக்குவரத்து அலுவலர் சுந்தர்ராஜன் தலைமையில் தீய ணைப்பு வீரர்கள் ராஜ்குமார் உள் ளிட்டோர் சம்பவ இடத்திற்கு விரை ந்து வந்து தீயை கட்டுப்படுத்தி அணைத்தனர்

# விரைவில் 'ஏர் டாக்ஸி': இனி சென்னை TO செங்கல்பட்டு வெறும் 15 நிமிட பயணம்..!

இந்தியாவில் பெங்களூரு, டெல்லி, மும்பை போன்ற நகரங்கள் உலக அளவில் அதிக போக்குவரத்து நெரிசல் கொண்ட நகரங்களில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன, இது நகர்ப்புறங்களில் பயணத்தை மிகவும் சவாலானதாக மாற்றுகிறது. மக்கள் நீண்ட நேரம் போக்குவரத்து நெரிசலில் நிற்பது மன அழுத்தம் மற்றும் கோபத்தை (ROAD RAGE) உண்டாக்குகிறது.

இந்நிலையில் தான் இந்தியாவில் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு மக்களின் பிரச்சனையை தீர்க்கும் வகையில் சென்னையைச் சேர்ந்த 'தி ஈ-பிளேன் கம்பெனி' என்ற ஸ்டார்ட் அப் நிறுவனம், 'E200X' என்ற பெயரில் மின்சாரத்தில் இயங்கும் பறக்கும் ஏர் டாக்ஸியை உருவாக்கிவருகிறது. இந்த ஏர் டாக்ஸி அதிக நெருக்கடியான சாலைப் போக்குவரத்தில் சிக்காமல், வானத்திலேயே பறந்து சென்று மக்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு விரைவாகக் கொண்டு சேர்க்கும்.

இந்தியாவின் விமானப் போக்குவரத்துத் துறையில் ஒரு மிகப்பெரிய புரட்சியாகக் கருதப்படும் இந்த ஏர் டாக்ஸிகள் பயன்பாட்டிற்கு வந்தால், சென்னையில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்ல 2 மணி நேரம் ஆகும் பட்சத்தில் அதுவே இந்த ஏர் டாக்ஸியில் பயணம் செய்தால் வெறும் 15 நிமிடங்கள் மட்டுமே ஆகும்.

உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனமான என்விடியா-வுடன் கைகோர்த்துள்ள 'தி ஈ-பிளேன் கம்பெனி' நிஜமாக ஒரு விமானத்தைச் செய்து அதை ஓட்டிப் பார்ப்பதற்கு முன்னால், கணினியிலேயே அந்த விமானத்தைப்போன்றே



ஒரு "டிஜிட்டல் நகலை" உருவாக்கியுள்ளனர்.

சென்னையில் தயாராகும் இந்த ஏர் டாக்ஸி, நிஜமாக வானில் ஏறுவதற்கு முன்பே கணினி உலகில் பல கோடி மைல்கள் பறந்து, அனைத்துப் பாதுகாப்புகளையும் உறுதி செய்த பிறகுதான் நம் கைக்கு வரும். இந்தத் தொழில்நுட்பம் வெறும் சோதனையோடு நிற்காமல், விமானத்தின் பாகங்கள் எப்போது பழுதடையும் என்பதைக் கூட முன்கூட்டியே கணித்துச் சொல்லும் என்பதால் விபத்து ஏற்படாமல் தவிர்க்க முடியும்.

இதில் EVTOL தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. E200X ஏர் டாக்ஸியின் இறக்கைகள் செங்குத்தாக மேலே எழும்பும்போது ஒரு விதமாகவும், காற்றில் வேகமாக முன்னோக்கிப் நகரும்போது ஒரு விதமாகவும் ஆற்றலைச் சேமிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது இதன் சிறப்பம்சமாகும்.

இதில் 6 செங்குத்து மோட்டார்கள் மற்றும் 4 முன்னோக்கிச் செலுத்தும் மோட்டார்கள் என மொத்தம் 10 மோட்டார்கள் உள்ளதால் ஒரு மோட்டார் பழுதடைந்தாலும் மற்ற மோட்டார்கள் மூலம் பாதுகாப்பாகத் தரையிறங்க முடியும்.

ஒருவேளை மிகப்பெரிய அவசரநிலை ஏற்பட்டால், முழு விமானத்தையும் பாதுகாப்பாகத் தரையிறக்க பிரத்யேகப் பாராசூட் வசதியும் இதில் உள்ளது. என்விடியா (NVIDIA) தொழில்நுட்பம் மூலம், வானில் பறக்கும் மற்ற பொருட்கள் அல்லது தடைகளை இது தானாகவே கண்டறிந்து விலகிச் செல்லும்.

இந்த நிறுவனம் ஏற்கனவே இந்திய விமானப் போக்குவரத்து அமைச்சகத்திடம் தேவையான முதற்கட்ட அனுமதிகளைப் பெற்றுள்ளதால் விரைவிலேயே



இந்த ஏர் டாக்ஸிகள் வணிக ரீதியாகப் பயன்பாட்டிற்கு வர வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

இதில் பயணிக்க விலை அதிகமாக இருக்குமோ என்ற அச்சம் வேண்டாம். ஏனெனில் இது மக்கள் பயன்பாட்டிற்கு வரும் போது ஓலா/உபேர் போன்ற பிரீமியம் காரில் செல்வதற்கு ஆகும் செலவை விட வெறும் 2 மடங்கு மட்டுமே அதிகமாக இருக்கும் என்று அந்த நிறுவனம் தெளிவுபடுத்தியுள்ளது.

பெங்களூரு விமான நிலையத்திலிருந்து நகரின் முக்கியப் பகுதிக்கு போக்குவரத்து நெரிசலை தாண்டி காரில் செல்வதற்கு 2 மணி நேரமாகும் என்றால், அதே இந்த ஏர் டாக்ஸியில் செல்வதற்கு வெறும் 8 முதல் 10 நிமிடங்கள் மட்டுமே ஆகும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

# "புகைப்படத்தில் இருக்கும் பெண்"

அந்த வீட்டுக்குள் நுழைந்த நாள் முதலாகவே மாலாவுக்குள் ஏதோவொன்று நெருடலாகவே தோன்றியது. ஹாலின் நடுவில், மங்கலான விளக்கின் கீழ், ஒரு பழைய புகைப்படம்.

அதில் சாம்பல் நிறச் சேலையில், உயிரற்ற கண்களோடு ஒரு பெண்.
“இதை எடுத்திடலாமா?” மாலா கேட்டாள்.
“அவசியமில்லைங்க... இது இந்த வீட்டோட சேர்ந்து வந்தது... அதுவுமில்லாம படத்தைச் சுவரோடு சேர்த்து ஃபிக்ஸ் பண்ணி வெச்சிருக்காங்க... அதனால அத் பாட்டுக்கு இருந்திட்டுப் போகட்டும் விடுங்க!” என்று சொன்ன புரோக்கர் குரலில் சிறு தடுமாற்றம்.
முதல் நாள் இரவு தூங்கும் போது கண்ணாடி உடையும் சத்தம். ஓடி வந்து பார்த்தால் புகைப்படத்தின் கண்ணாடி மட்டும் உடைந்திருந்தது. புகைப்படப் பெண்ணின் கண்கள்...
இப்போது இன்னும் அருகில்.
இரண்டாம் இரவு, சமையலறையில் ஒரு பெண்ணின் காலடி ஓசை. மாலா சென்று பார்த்த போது அங்கே யாரும் இல்லை. புகைப்படத்தில் அந்தப் பெண்ணின் கால்கள் முழுதாகத் தெரிந்தது.

மூன்றாம் இரவு, அரவிந்த் சொன்னான், "நேத்து ராத்திரி அந்தப் போட்டோ பெண்... நம்ம படுக்கைக்கு பக்கத்துல நின்னு நீ தூங்குறத பார்த்திட்டேயிருந்தா...”
அவன் முகத்தில் அதற்கான பயம் இல்லை. பதிலாய் ஏதோ ஆசை தெரிந்தது.
மறு நாள் இரவு, அரவிந்த் காணாமல் போனான்.

மாலா வீடு முழுவதும் தேடினாள். யார் யாருக்கோ கால் செய்து, " அரவிந்த் அங்க வந்திருக்காரா?"

அடுத்த நாள் காலை, மாலா ஏதோவொரு எதிர்பார்ப்புடன் அந்தப் புகைப்படத்தை பார்த்தாள்.

இப்போது அந்தப் பெண்ணின் அருகில் அரவிந்த், புன்னகையோடு. புகைப்படத்திற்குக் கீழே ஒரு காகிதம் கிடந்தது. மாலா எடுத்துப் படித்தாள்.

“இந்த வீட்டில் முதலில் ஆண்கள்.
பின்னர் பெண்கள்.
புகைப்படம் நிரம்பும் வரை.”

அந்த நிமிடம் மாலாவின் தோளில் ஒரு கை விழுந்தது. காதருகே ஒரு மெல்லிய குரல், "புன்னகைக்கக் கத்துக்கோ... அடுத்தது நீ தான்.”





-முகில் தினகரன்
கோயம்புத்தூர்.

# சேமிப்பு சாத்தியமே!!!




ஆஸ்பத்திரியில் ICU க்கு வெளியே உள்ள சேரில் அம்மா அழுதபடியே கடவுளை வேண்டிக் கொண்டிருந்தாள். கடவுளே அவரோட உயிரை காப்பாத்திடு. உன் கோவிலுக்கு வந்து அங்க பிரதக்ஷணம் செய்கிறேன், என்று எதிரில் உள்ள பிள்ளையார் படத்தைப் பார்த்து பிரார்த்தனை செய்து கொண்டு இருந்தாள். அலமு... பயமா இருக்குடி அப்பாவுக்கு ஒன்றும் ஆகாது இல்ல, என்று மனைவியிடம் பதட்டத்துடன் கேட்டான் சேகர் .அப்பா நல்லா தானே இருந்தார். எப்படி? திடீர்னு இப்படி ஆயிடுச்சு .கவலைப் படாதீங்க டாக்டர் வந்து நல்ல செய்தி சொல்லுவார். கொஞ்சம் பொறுமையா இருங்க என்றாள் அலமு. ரூம் கதவை திறந்து கொண்டு டாக்டர் வந்தார். சேகர் உங்க அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் ,உடனே ஆஞ்சியோ பண்ணியாகணும் முதலில் அஞ்சு லட்சம் கட்டுங்க. மீதி அப்புறமா பாத்துக்கலாம் என்றார். சேகர் , அலமு விடம் ஐந்து லட்சம் என்னிடம் இல்லையே! இப்ப என்ன பண்றது? சரி, அலமு நீ அம்மாவ பாத்துக்கோ. நான் பிரெண்ட்ஸ்களிடம் கடன் கேட்டு பாக்குறேன் பணத்துக்கு ஏதாவது ரெடி பண்ணி கொண்டு வரேன். என்று சொன்னான் சேகர். நண்பர்களுக்கு போன் செய்து உதவி கேட்டான் யாரும் தரவில்லை. அம்மா அடிக்கடி ஏதாவது சேர்த்து வைடா பின்னாடி பசங்க வாழ்க்கைக்கு உதவும் அப்படின்னு சொல்லிக்கிட்டே இருப்பா நான் தான் எல்லா படத்தையும் செலவு பண்ணி விடுறேன் இப்போ என்ன பண்றதுன்னு புரியல; சரி நானே இன்னொரு நண்பர் வீட்டுக்கு நேரில் சென்று கேட்டு பார்க்கிறேன் என்று கூறிவிட்டு சென்றான் சேகர் .அந்த நண்பரிடம் ஒரு லட்சம் கிடைத்தது. மீதி 4 லட்சத்திற்கு என்ன செய்வது? என்று புரியவில்லை .நேரம் ஆகிக்கொண்டே போகிறது .பயத்துடன் ஆஸ்பத்திரிக்கு வந்தான் சேகர். அம்மா, டாக்டர் ஏதாவது சொன்னாரா? பணம் ஒரு லட்சம் தான் மா கிடைச்சுது என்றான். அப்பாவுக்கு பணம் கட்ட முடியவில்லை என்று ஓவென அழுதான் .அதற்கு அம்மா சேகர் அழாதடா.. அப்பாவுக்கு ட்ரீட்மென்ட் நல்லபடியா போய்ட்டு இருக்கு. அப்பா பிழைச்சுட்டார். நீ கவலைப்படாத என்றாள் .எப்படி மா பணம் கட்டாமல் வைத்தியம் பார்த்தாங்க என்றான் சேகர். நம்ம வீட்டு மாடியில் செகண்ட் ஃப்ளோர் இல் இருக்காரே ஜெயராமன் மாமா அவர் இன்சூரன்ஸ் ஏஜென்ட் அவர்தான் ஒரு நாள் வந்து வயசானவங்க வீட்ல இருந்தா கண்டிப்பா மெடிக்கல் இன்சூரன்ஸ் இருக்கணும் அப்படின்னு சொன்னார் .அதற்கு நானும் அப்பாவும் சரி அப்படின்னு சொன்னோம் அவரே பணமும் கட்டி உதவியும் செஞ்சார். உன்கிட்ட கேட்டா நீ எங்களை திட்டுவியோ யோனு பயமா இருந்தது. அதனால நீ ஆபீஸ் போனதுக்கப்புறம் நானும் அலமுவும் சாம்பார் பொடி, ரசப்பொடி, ஊறுகாய், மிளகாய் பொடி என வீட்டிலேயே தயார் செஞ்சு வைத்து விடுவோம். அதை உன் அப்பா தெரிந்த கடையில் போய் விற்று விட்டு வருவார் அதில் வரும் பணத்தை கொஞ்சம் கொஞ்சமாக ஜெயராமன் மாமாவிடம் கொடுப்போம். அத்தோடு நீ எங்களுக்கு செலவுக்காக கொடுக்கும் பணத்திலேயேயும் கொஞ்சம் மிச்சம் படுத்தி சேர்த்து வைத்திருக்கிறேன். நான் போன் பண்ணதும் ஜெயராமன் மாமா வந்து ஆஸ்பத்திரில இந்த இன்சூரன்ஸ் பேப்பரை கொடுத்துட்டார் அதனால ஆஸ்பத்திரியில் உடனே அப்பாவுக்கு வைத்தியம் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். நல்ல வேலை!! நான் உடனே ஜெயராமன் மாமாக்கு ஒரு தேங்க்ஸ் சொல்லிறேன். இந்தாடா சேகர் சாவி என்னோட இரும்பு பெட்டியில் உள்ள பணத்தையும் எடுத்து செலவுக்கு வச்சுக்கோ என்றாள் அம்மா. இங்க பாருங்க வர்ற வருமானத்துல அப்படியே செலவு பண்ணாம கொஞ்சம் கொஞ்சமா எடுத்து சேர்த்து வச்சுக்கணும் எல்லாத்தையும் செலவு பண்ணிட்டா திடீர்னு வரும் செலவுகளை நம்மால் சமாளிக்க முடியாது என்றாள் அலமு. குருவி சேக்குற மாதிரி கொஞ்சம் கொஞ்சமா சேர்த்து வெச்சிருக்கேன் பார்த்து செலவு பண்ணுடா சேகர். சரிமா இப்போதான் எனக்கே புரிஞ்சது இனிமேல் நானும் என்னோட செலவு எல்லாம் குறைச்சுக்கிட்டு மாச வருமானத்துல சேமிக்கிறதுக்கு பழகிக்கிறேன். சேமிப்பு எவ்வளவு முக்கியம்னு இப்பதாம்மா எனக்கும் புரிந்தது.



- எம் .எல். பிரபா
ஆதம்பாக்கம்.
சென்னை 88

# திருவிளையாடல் புராணம் 23



சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி.

## விருத்த குமார பாலரான படலம்

தன்பக்தையான கவுரிக்கு வீடுபேற்றினை அளிக்கும் பொருட்டு சொக்கநாதர் முதியவர் வடிவில் காட்சி தந்து இளைஞராகி, குழந்தையாக மாறியதை குறிப்பிடுகிறது.

கவுரியின் சிவபக்தி, புகுந்த இடத்தில் கவுரிக்கு நேர்ந்த கொடுமை, கவுரி துன்பத்திலும் சிவனடியாருக்கு சேவை செய்தல் என ஒவ்வொரு நிகழ்வும் அழகாக இப்படலத்தில் விளக்கப்பட்டுள்ளன.

விக்கிரமன் ஆட்சி செய்து வரும் நாளில் மதுரையில் விருபாக்கன் என்னும் வேதியன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி சுபவிரதை; இருவருக்கும் நெடுங்காலம் குழந்தைகளின்றிப் பின் தான தருமங்கள் செய்ய நிதானமாக ஒரு குழந்தை பிறந்தது. கவுரி என்பது அவள் பெயர்; இளம் வயது முதல் சிவனிடம் சிந்தை கொண்டு சைவ நெறியினைப் போற்றி வழிபட்டு வந்தாள். மணப்பருவம் வந்தது. மனத்துக்கு உகந்த மணாளன் அமையவில்லை; அதனால் பெற்றோர் வருந்தி இருந்தனர்.

வேதியர் குலத்து இளைஞன் ஒருவன் இவர்கள் வீட்டுக்கு விருந்தினனாக வந்தான். கோத்திரம் குலம் விசாரித்துச் சாத்திரப்படி அவனுக்கு மணம் முடிப்பது என்று நிச்சயித்தனர். மதம் மட்டும் மாறுபட்டிருந்தது; வைணவ குலத்தைச் சார்ந்தவன்; இம்முரண்பாடு ஒத்துப் போவதாக இல்லை; எனினும் நிச்சயித்த அவனை உதறித் தள்ள இயலவில்லை.

இருவருக்கும் திருமணம் நடந்தது; வாழ்க்கைப்பட்ட இடத்தில் சிக்கல் ஏற்பட்டது; அவளை அவர்கள் மதித்து நடத்தவில்லை. வீட்டை விட்டு வெளியேறும் போது அவள் சமையல் கட்டுக்குப் போகாதபடி தடுக்கப் பேரறையில் விட்டுப் பூட்டி வைத்தனர். அவள் கையால் சமைக்கக் கூடாது என்பது அவர்கள் விதி.

சிவனடியாருக்குச் சோறு போட்டுப் பழகிய அவள் இப்பொழுது வெறும் சடமாக அறையில் கிடப்பதை வெறுத்தாள். அவள் விழிகள் சிவனடியார் யாராவது வருவார்களா என்று தேடின. எதிர்பார்த்தபடி வயது முதிர்ந்த சிவனடியார் ஒருவர் பசியால் இளைத்து இவள் வீட்டுப்படியில் காலடி எடுத்து வைத்தார்.



வெளிக்கதவைத் திறந்து அவரை உள்ளே விட்டாள்.

சமைக்க முடியாதபடி பூட்டும் தாளும் அவளைத் தடுத்து நிறுத்தின. சிவனடியார் இதை உணர்ந்து அவர் ஒரு பார்வை பார்த்தார். தாளும் பூட்டும் தாமாகத் திறந்து கொண்டன; உள்ளே சென்று அடுப்புப் பற்ற வைத்தாள். சோறு சமைத்துக் கறியும் செய்தாள். இலை போட்டுச் சோறு பரிமாறி அவர் பசியையும் போக்கினாள்.

வள்ளியை மணக்கவந்த முருகன் போல முதிய தோற்றத்தில் வந்த சிவனடியார் காளைப்பருவத்தில் அவள் கண்முன் நின்றார்; கற்பிற் சிறந்த அப்பொற்புடை நங்கை ஆடவன் ஒருவன் தனித்துத் தன் முன் நிற்பதைக் கண்டு அஞ்சினாள்; வியர்த்தாள்; ஒரு புறம் ஒதுங்கினாள்.

வெளியூருக்குச் சென்றிருந்த அவள் மாமனும் மாமியும் கணவனும் அலுத்துக் களைத்து வீட்டுக்குள் நுழைந்தனர்.

அவள் அவப்பெயருக்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அந்நியன் ஒருவனோடு அவள் பேசிக் கொண்டிருந்தாள். அவள் நிலை அதோ கதி தான்; பாலகனாக அவர்கள் முன் தாவத் தொடங்கினார். முதியவராக வந்தவர் காளைப்பருவத்தோடு காட்சி அளித்துக் குழந்தையாகத் தவழ்வதைக் கண்டு கவுரி வியப்படைந்தாள்; இறைவன் திருவிளையாடல் இது என்பது அவள் அறிந்து கொண்டாள்.

"பக்கத்து வீட்டுத் தத்தனுடைய குழந்தை அது; பார்த்துச் கொள்ளச் சொல்லிச் சென்றார்கள்" என்று பக்குவமாக விடை சொன்னாள். எனினும் அக்குழந்தை சைவ வீட்டுப் பிள்ளை என்பதால் அவர்கள் கடிந்து கொண்டனர். "தூக்கி வெளியே எறி" என்று சொல்லி அக்குழந்தையை வெளியே போட்டார்கள். அவளையும் வீட்டைவிட்டு வெளியே போகச் சொன்னார்கள்.

சமய வெறுப்பின் அடிப்படையில் மிருகத்தனமாக நடந்து கொண்டதைக் கண்டு அவள் வருந்தினாள். குழந்தை விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டது; அதனைச் சமய அடிப்படையில் அவர்கள் வெறுத்ததை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

குழந்தையோடு வெளியே நடந்தாள். சோமசுந்தரக் கடவுளிடம் முறையிட்டு அழுதாள்; உமையாரிடத்து அதிக பக்தி இளமை முதல் கொண்டவளாயிற்று; மந்திரம் செபித்தாள்; அதற்கு மேல் அவளைச் சிவனார் சோதிக்க விரும்பவில்லை. அவள் காணும்போதே குழந்தை உருவம் மாறிப் பரம் பொருளாகிய சிவனார் பார்வதியோடு காட்சியளித்தார். இக்காட்சியைப் பாண்டிய நாட்டில் உள்ளவர்களும் கண்டு பேரானந்தம் அடைந்தனர்.

தனது வீட்டினர் துன்புறுத்தியபோதிலும் இறைவனின் மீதும் தனது கொள்கையின் (வீடுபேற்றினை அடைதல்) மீதும் கவுரி கொண்டிருந்த நம்பிக்கையானது அவளுக்கு அதனைக் கிடைக்கச் செய்தது.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார், தன்னம்பிக்கை வெற்றி தரும் ஆகியவை இப்படலம் கூறும் கருத்தாகும்.

(தொடரும்)




வருடத்தில் ஒரு நாள் மட்டுமே தரிசனம் தரும் புரி லோகநாதர்!

உலகப் புகழ்பெற்ற புரி ஜெகந்நாதர் ஆலயம் மட்டுமல்ல அதே புரி நகரத்தில் இன்னொரு அதிசய தெய்வீக ரகசியமும் மறைந்திருக்கிறது. அது தான் அருள்மிகு லோகநாதர் சிவன் கோவில்!

இந்த ஆலயத்தில் நிகழும் அதிசயம் உலகின் வேறு எந்த சிவாலயத்திலும் காண முடியாத ஒன்று.

பொதுவாக சிவலிங்கங்கள் எப்போதும் பக்தர்களுக்குக் காட்சியளிக்கும். ஆனால் இங்கு உள்ள லோகநாதர் வருடத்தில் 364 நாட்கள் முழுவதும் நீருக்குள் மூழ்கிய நிலையில் இருப்பார்!

மட்டும் ஒரு நாள்தான் அதுவும் ஆண்டுக்கு ஒரே ஒரு நாள்தான் பக்தர்களுக்குத் தெளிவாக தரிசனம் தருவார்!

நீரில் மூழ்கியிருக்கும் அதிசய சிவலிங்கம்

புரி நகரத்தில் உள்ள முக்கியமான ஐந்து சிவாலயங்களில் ஒன்றாக விளங்குவது லோகநாதர் கோவில். இந்த கோவிலின் கருவறையில் இருக்கும் சிவலிங்கம் "சுயம்பு லிங்கம்" எனப் போற்றப்படுகிறது. ஆனால் இந்த சிவலிங்கம் எப்போதும் சாதாரணமாக காணப்படாது.

கருவறை முழுவதும் எப்போதும் நீரால் நிரம்பியிருக்கும். அந்த நீருக்குள் முழுவதுமாக மூழ்கிய நிலையில்தான் லோகநாதர் வாசம் செய்கிறார்.

இந்த நீர் இயற்கையாகவே ஊறிக்கொண்டே இருப்பதாகவும், எவ்வளவு வெளியேற்றினாலும் மீண்டும் நிரம்பிவிடுவதாகவும் அர்ச்சகர்கள் கூறுகின்றனர்.

ஒரே ஒரு நாள் அரிய தரிசனம்!

இந்த அதிசய கோவிலில் லோகநாதரை நேரடியாக தரிசிக்க முடியும் நாள் பங்கோத்த ஏகாதசி (Pankod-dhar Ekadashi) எனப்படும் விசேஷ தினம்.

சிவராத்திரிக்கு மூன்று நாட்கள் முன்பாக அர்ச்சகர்கள் கருவறையில் நிரம்பியிருக்கும் நீரை முழுமையாக வெளியேற்றத் தொடங்குகிறார்கள்.

அப்போதுதான் ஆண்டுக்கு ஒரே முறை நீரிலிருந்து வெளிப்பட்டு லோகநாத சிவலிங்கம் பக்தர்களுக்குத் தெளிவாகக் காட்சியளிக்கிறது.

இந்த அரிய தரிசனத்தை காண, நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புரி நகரை நோக்கி வருகிறார்கள்.

ஜெகந்நாதரின் காவல் தெய்வம் லோகநாதர்

இந்த லோகநாதர் கோவில் ஜெகந்நாதர் கோவிலோடு நெருங்கிய ஆன்மிகத் தொடர்புடையது.

லோகநாதரின் உத்சவ மூர்த்தி (உலா விக்ரகம்) ஜெகந்நாதர் கோவிலிலேயே பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

புராண நம்பிக்கைப்படி, ஜெகந்நாதரின் பொக்கிஷங்கள் நகைகள் ஆலயத்தின் செல்வங்கள் அனைத்திற்கும் லோகநாதரே காவல் தெய்வமாக விளங்குகிறார்.

புரியில் நடைபெறும் புகழ்பெற்ற "சோமவார மேளா" திருவிழாவின் போது, இந்த லோகநாதரின் உத்சவ மூர்த்தியும் நகரம் முழுவதும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவார்.

ராமாயணத்துடன் தொடர்புடைய தல வரலாறு

இந்த கோவில் உருவானதற்குப் பின்னால் ஒரு அழகிய புராணக் கதை உள்ளது.

இராமாயண காலத்தில், சீதையை தேடி இராமர் புரி பகுதிக்கு வந்தபோது, சிவபெருமானை வழிபட விரும்பினார்.

அப்போது அங்கு வாழ்ந்த ஒரு கிராமவாசி, இராமருக்கு ஒரு சுரைக்காயை வழங்கினாராம்.

அதை லிங்க வடிவமாக மாற்றி, அங்கேயே பிரதிஷ்டை செய்து இராமர் சிவபூஜை செய்தார்.

அந்த லிங்கமே காலப்போக்கில் "லோகநாதர் சிவலிங்கம்" ஆக மாறி, இன்றைய கோவிலாக உருவெடுத்தது எனப் புராணங்கள் கூறுகின்றன.

இதனால் இந்த ஆலயம் ராமாயணத்தோடு தொடர்புடைய புனித தலமாகவும் கருதப்படுகிறது.

கருவறை நீரின் அற்புத சக்தி

லோகநாதர் சிவலிங்கத்தைச் சூழ்ந்திருக்கும் நீர் சாதாரண நீர் அல்ல என்று பக்தர்கள் நம்புகிறார்கள்.

ஏனெனில் மற்ற நாட்களில்,
பால்
தேன்
இளநீர்
வில்வம்
நெய்
போன்ற புனித நிவேதனங்கள் அனைத்தும் அந்த நீரிலேயே சேர்க்கப்படுகின்றன.

இதனால் அந்த கருவறை நீர் மருத்துவ குணம் கொண்டதாகவும், பல நோய்களுக்கு நிவாரணம் அளிப்பதாகவும் பக்தர்கள் ஆழமாக நம்புகிறார்கள்.

கோவிலின் அமைப்பும் சிறப்பும்

இந்த ஆலயம் முழுவதும் மணற்கற்களால் கட்டப்பட்டுள்ளது.

பிரதான கோவில் தரையிலிருந்து சுமார் 30 அடி உயரத்தில் அமைந்துள்ளது.

கருவறையின் கிழக்குப் புறச் சுவரில் முருகப்பெருமான் (கார்த்திகேயன்) நான்கு கரங்களுடன் விநாயகர் என்ற திருவுருவங்கள் சிற்பக் கலை நுணுக்கத்துடன் வடிக்கப்பட்டுள்ளன.

ஜெகந்நாதர் கோவிலிலிருந்து சுமார் 2 கி.மீ தொலைவில் இந்த லோகநாதர் ஆலயம் அமைந்துள்ளது.

ஆன்மிக அனுபவத்தின் உச்சம் புரி நகரத்திற்கு வரும் பெரும்பாலான பக்தர்கள் ஜெகந்நாதரை தரிசிப்பதோடு நிற்காமல், லோகநாதர் கோவிலையும் தவறாமல் தரிசிக்கின்றனர்.

ஏனெனில், வருடத்தில் ஒரே ஒரு நாள் மட்டுமே தரிசனம் தரும் இந்த சிவலிங்கத்தை காண்பது ஒரு மனிதனின் வாழ்நாளில் கிடைக்கும் மிகப் பெரிய ஆன்மிகப் பாக்கியமாகக் கருதப்படுகிறது.

நீரில் மூழ்கியபடியே உலகைக் காக்கும் லோகநாதர், அந்த ஒரே நாளில் வெளிப்பட்டு அருள் புரிவது பக்தர்களுக்கு மறக்க முடியாத தெய்வீக அனுபவமாக மாறுகிறது.

"அதிசயங்கள் நிறைந்த இந்திய திருக்கோயில்களின் மகிமையில், லோகநாதர் ஆலயம் ஒரு உன்னதமான ஆன்மிக ரகசியம்!"

எம்பெருமான்
திருக்கருணை இருந்தவாறே
நற்றுணையாவது
அண்ணாமலையாரே
எங்கும் நீக்கமற
நிறைந்திருக்கும் அகிலம்
காக்கும் அண்ணாமலையாரே
போற்றி போற்றி . உன்
ஆழ்ந்த கருணையை பெற
என்ன தவம் செய்தேனோ
சிவாய நம சிவமே ஜெயம்
சிவமே தவம்.
சிவமே
என் வரமே
. எங்கும்
சிவ நாமம்
ஒலிக்கட்டும்.



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி.

# தினம் ஒரு தலைவர்கள் அஷ்பகுல்லா கான் வரலாறு

அஷ்பகுல்லா கான் (22 அக்டோபர் 1900 – 19 டிசம்பர் 1927) பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான இந்திய சுதந்திர இயக்கத்தில் ஒரு சுதந்திரப் போராட்ட வீரராகவும் , பின்னர் இந்துஸ்தான் சோசலிச குடியரசுக் கட்சி சங்கமாக மாறிய இந்துஸ்தான் குடியரசுக் கட்சியின் இணை நிறுவனராகவும் இருந்தார்.

ஆரம்ப கால வாழ்க்கை

கான் ஐக்கிய மாகாணங்களின் ஷாஜகான்பூர் மாவட்டத்தில் பதான் நில உரிமையாளர் பெற்றோர்களான ஷபிக் உல்லா கான் மற்றும் மஜாருனிசா ஆகியோருக்குப் பிறந்தார். அவர் தனது ஐந்து உடன்பிறப்புகளில் இளையவர்.

1918 ஆம் ஆண்டு, கான் ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது, காவல்துறையினர் அவரது பள்ளியைச் சோதனையிட்டு, மைன்புரி சதி தொடர்பாக மாணவர் ராஜாராம் பாரதியாவைக் கைது செய்தனர். இந்த வழக்கில், காலனித்துவ எதிர்ப்பு இலக்கிய வெளியீட்டிற்கு நிதி திரட்டுவதற்காக ஆர்வலர்கள் மைன்புரியில் கொள்ளையடித்தனர். இந்தக் கைது, ஐக்கிய மாகாணங்களில் புரட்சிகர நடவடிக்கைகளில் கானின் ஈடுபாட்டைத் தூண்டியது.

கான் , மைன்புரி சதியில் நெருக்கமாக ஈடுபட்டிருந்த புரட்சியாளரான ராம் பிரசாத் பிஸ்மிலை ஒரு நண்பர் மூலம் சந்தித்தார் . அவர் விரைவில் பிஸ்மிலுடன் நெருக்கமாகப் பழகி , ஒத்துழையாமை , ஸ்வராஜ் கட்சி மற்றும் இந்துஸ்தான் குடியரசுக் கட்சி சங்கம் தொடர்பான நடவடிக்கைகளில் அவருடன் இணைந்தார். பிஸ்மில் மற்றும் கான் இருவரும் கவிஞர்களாக இருந்தனர், கான் ஹஸ்ரத் என்ற புனைப்பெயரில் உருது கவிதைகளை எழுதினார்.

இந்துஸ்தான் குடியரசுக் கட்சி சங்கத்தில் உள்ள மற்றவர்களைப் போலவே, கானும் லெனின் மற்றும் ரஷ்யாவில் போல்ஷிவிக் புரட்சியால் வலுவாக ஈர்க்கப்பட்டார் . ஏழைகளின் விடுதலை மற்றும் முதலாளித்துவ நலன்களை நிராகரிப்பதில் அவர் நம்பிக்கைகளை வெளிப்படுத்தினார். மத வகுப்புவாதத்திற்கு எதிராகவும் அவர் பேசினார் , இந்திய மக்களைக் கட்டுப்படுத்தவும் இந்திய சுதந்திரத்தைத் தடுக்கவும் இது ஒரு பிரிட்டிஷ் கருவியாக அடையாளம் காட்டினார்.

ககோரி ரயில் கொள்ளையில் ஈடுபாடு

முதன்மைக் கட்டுரை: ககோரி சதி

இந்துஸ்தான் குடியரசுக் கட்சி சங்கத்தின் புரட்சியாளர்கள் ஆகஸ்ட் 8, 1925 அன்று ஷாஜஹான்பூரில் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளுக்கு நிதி திரட்டுவது எப்படி என்பதைத் தீர்மானிக்க ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தனர். ககோரி வழியாக அரசாங்க பணத்தை ஏற்றிச் செல்லும் ரயிலைக் கொள்ளையடிக்க அவர்கள் முடிவு செய்தனர். புரட்சிகர நடவடிக்கைகளுக்கு நிதியளிக்க கொள்ளையைப் பயன்படுத்தும் ரஷ்ய போல்ஷிவிக் நுட்பத்தால் ஈர்க்கப்பட்டு, HRA முன்பு இதேபோன்ற ரயில் கொள்ளைகளைச் செய்தது . அவர் முதலில் ககோரி ரயில் கொள்ளையை எதிர்த்தார் , ஆனால் இறுதியில் HRA இல் உள்ள மற்றவர்கள் இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் தெரிவித்தபோது பங்கேற்க ஒப்புக்கொண்டார்.

ஆகஸ்ட் 9, 1925 அன்று, கான் மற்றும் பிற புரட்சியாளர்களான ராம் பிரசாத் பிஸ்மில், ராஜேந்திர லஹிரி , சச்சிந்திர பக்ஷி , சந்திரசேகர் ஆசாத் , கேஷப் சக்ரவர்த்தி , பன்வாரி லால் , முராரி லால் குப்தா , முகுந்தி லால் மற்றும் மன்மத்நாத் குப்தா ஆகியோர் லக்னோவிற்கு அருகிலுள்ள ககோரியில் ஒரு அரசு ரயிலைத் தாக்கி கொள்ளையடித்தனர்.

கொள்ளைக்குப் பிறகு, குற்றவாளிகளைப் பிடிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு விரிவான புலனாய்வுப் பிரச்சாரத்தைத் தொடங்கியது. 1925 அக்டோபர் 26 அன்று காலை, பிஸ்மில் போலீசாரால் பிடிபட்டார் . பிடிபடுவதைத் தவிர்க்க கான் நேபாளத்திற்கு தப்பிச் சென்றார் . நேபாளத்திலிருந்து, அவர் கான்பூருக்கும் பின்னர் டால்டோங்கஞ்சிற்கும் பயணம் செய்தார் , அங்கு அவர் ஒரு புனைப்பெயரில் ஒரு பொறியியல் நிறுவனத்தில் எழுத்தராகப் பணியாற்றினார்.

கைது மற்றும் விசாரணை

இறுதியில், கான் தனது புரட்சிகர நடவடிக்கைகளைத் தொடர டெல்லிக்குச் செல்ல முடிவு செய்தார் . டெல்லியில் இருந்தபோது, ஷாஜகான்பூரில் தனக்குத் தெரிந்த ஒரு பதான் நண்பரைச் சந்தித்தார், அவர் தனது இருப்பிடத்தை ரகசியமாக காவல்துறைக்கு தெரிவித்தார். டிசம்பர் 7, 1926 அன்று காலை, கான் டெல்லி காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார். அவர் பைசாபாத்தில் உள்ள மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டார் , மேலும் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

ககோரி ரயில் கொள்ளையர்களின் விசாரணை லக்னோவில் ஒரு வருடத்திற்கும் மேலாக நடைபெற்றது, பொதுமக்களிடமிருந்து குறிப்பிடத்தக்க ஆர்வத்தைப் பெற்றது. 1925 ஆம் ஆண்டில் HRA ஒரு அதிகாரப்பூர்வ அறிக்கையை வெளியிட்டது, அவர்கள் தங்களை பயங்கரவாதிகளாகக் கருதவில்லை என்றும் , அதற்கு பதிலாக காலனித்துவ அரசாங்கத்தின் வன்முறையை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு வழியாக அவர்களின் புரட்சிகர நடவடிக்கைகளைக் கண்டதாகவும் கூறியது . சிறையில் இருந்தபோது, கான் இதேபோன்ற உணர்வை வெளிப்படுத்தும் ஒரு கடிதத்தை எழுதினார், HRA மூலம் வன்முறையைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை, ஆனால் இந்தியாவின் சுதந்திரத்தை மட்டுமே உறுதி செய்வதை மட்டுமே நம்புவதாக உறுதிப்படுத்தினார்.

இறப்பு மற்றும் பின்விளைவுகள்

ககோரி கொள்ளை வழக்கு பிஸ்மில், கான், லஹிரி மற்றும் ரோஷன் ஆகியோருக்கு மரண தண்டனை விதித்து முடிவுக்கு வந்தது. மற்றவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. கானுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு , 1927 டிசம்பர் 19 அன்று பைசாபாத் சிறையில் தூக்கிலிடப்பட்டார். இந்தியாவின் சுதந்திரத்திற்காக அவர் ஒரு தியாகியாகக் கருதப்படுகிறார்.

கான், பிஸ்மில், லஹிரி மற்றும் ரோஷன் தூக்கிலிடப்பட்ட பிறகு, HRA அவர்களின் பெயரை இந்துஸ்தான் சோசலிச குடியரசு இராணுவம் என்று மாற்றி, சோசலிச மற்றும் மார்க்சிய சித்தாந்தங்களை அதிகாரப்பூர்வமாக ஆதரிக்கத் தொடங்கியது.

பிரபலமான கலாச்சாரத்தில்

கான் மற்றும் அவரது சக நாட்டு மக்களின் செயல்கள் இந்தி திரைப்படமான ரங் தே பசந்தி (2006) இல் சித்தரிக்கப்பட்டுள்ளன , இதில் அவரது கதாபாத்திரத்தை குணால் கபூர் சித்தரிக்கிறார் . ஸ்டார் பாரத் தொலைக்காட்சி தொடரான சந்திரசேகர் இல் கானாக சேத்தன்யா அடிப் சித்தரித்தார் . 2014 ஆம் ஆண்டு டிடி உருதுவில் ஒளிபரப்பான இந்திய தொலைக்காட்சி தொடரான முஜாஹித்-இ-ஆசாதி - அஷ்பகுல்லா கான் , கௌரவ் நந்தா தலைப்பு வேடத்தில் நடித்தார்.



# தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்க தேர்தல்



தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத் தேர்தல் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும். அதன்படி 2026-2029 ஆண்டுகளுக்கான நிர்வாகிகளை தேர்வு செய்யும் தேர்தல் இன்று (பிப். 22) நடைபெற்றது.

சென்னை அண்ணா நகரில் உள்ள தனியார் கல்லூரியில் ஓய்வு பெற்ற நீதிபதி ராஜேஸ்வரன் மேற்பார்வையில் தேர்தல் நடைபெற்றது.

இதில் இராம நாராயணன் அணி, நலம் காக்கும் அணி என 2 அணிகள் போட்டியிட்டன. இந்த தேர்தலில் தயாரிப்பாளர் சங்க உறுப்பினர்கள் 1,524 பேர் பங்கேற்று வாக்கு செலுத்தினர்.

வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் நலம் காக்கும் அணி சார்பில் போட்டியிட்ட GKM தமிழ்குமரன், 788 வாக்குகள் பெற்று தலைவர் பதவிக்கு தேர்தெடுக்கப்பட்டுள்ளார். மேலும் நிர்வாகிகளும் தேர்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய பொறுப்பாளர்களின் பதவி காலம் வருகின்ற ஏப்ரல் மாதத்துடன் நிறைவடையும் நிலையில் புதிய தலைவர் 2029 வரை தலைமையில் இருப்பார்.



நம்ம வீட்டு பொண்ணு, தங்கமகள் போன்ற விஜய் டிவியின் சீரியல்களில் நடித்து இருப்பவர் அஸ்வினி அனந்திதா.

சீரியல்கள் மட்டுமின்றி அவர் விஜய் டிவியின் பல ஷோக்களிலும் கலந்துகொண்டு இருக்கிறார். அஸ்வினி சீரியல்களில் ஹோம்லியாக தான் தோன்றுகிறார். ஆனால் நிஜத்தில் அப்படியே அப்போசிட். அவர் ஷார்ட் உடையில் செம ஹாட் ஆக போஸ் கொடுத்து ஸ்டில்களை வெளியிட்டு வருகிறார்.

அவரது லேட்டஸ்ட் ஹாட் போட்டோஷூட் இதோ.

# ‘தாய் கிழவி’ டிரெய்லர் வெளியீடு!




அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கத்தில், நடிகை ராதிகா சரத்குமார் நடித்துள்ளப் படம் தாய் கிழவி. ராதிகாவை மையக்கதாபாத்திரமாக கொண்டு நகைச்சுவை பாணியில் படம் உருவாகி உள்ளது. இப்படத்தில் சிங்கம் புலி, அருள்தாஸ், பாலசரவணன், முனிஷ்காந்த், இளவரசு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படத்தை நடிகர் சிவகார்த்தியேன் மற்றும் பேஸன் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்துள்ளனர்.

நிவாஸ் கே. பிரசன்னா படத்திற்கு இசையமைத்துள்ளார். சிவகார்த்திகேயன் முதல்பாடலை பாடியுள்ளார். படம் வரும் 27 அன்று திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்நிலையில் இப்படத்தின் டிரெய்லர் நாளை வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரம்மயுகம்’ படத்திற்காக Filmfare விருது



70வது ஃபிலிம்ஃபேர் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று (பிப். 21) கேரளா மாநிலத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், தென்னிந்திய திரையுலகின் சிறந்த திரைப்படங்கள், இயக்குநர், நடிகர் உள்பட பல்வேறு பிரிவுகளின் கீழ் வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு ஃபிலிம்ஃபேர் விருது வழங்கப்பட்டது.

இதில், ‘பிரம்மயுகம்’ படத்திற்காக சிறந்த மலையாள நடிகருக்கான Film-fare விருதை மம்மூட்டி வென்றார்.

ஃபிலிம்ஃபேர் விருது விழாவில் அமரன் திரைப்படம் 8 விருதுகளை வென்றது குறிப்பிடத்தக்கது.



தென்னிந்திய அளவில் பிரபலமான நடிகையாக வலம் வருபவர் பிரியங்கா அருள் மோகன். இவர் தமிழில் வெளிவந்த டாக்டர், டான், எதற்கும் துணிந்தவன் போன்ற படங்களில் நடித்துள்ளார். அடுத்ததாக இவர் நடிப்பில் Made in Korea திரைப்படம் வெளிவரவுள்ளது.இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் பிரியங்கா மோகன், தற்போது மஞ்சள் நிற சேலையில் எடுத்துக்கொண்ட போட்டோஷூட் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார்.

## ஜனநாயகன் பற்றிய ஆதங்கத்தை கொட்டித்தீர்த்த விஷால்



தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத் தேர்தல் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும். அதன்படி 2026-2029 ஆண்டுகளுக்கான நிர்வாகிகளை தேர்வு செய்யும் தேர்தல் இன்று (பிப். 22) நடைபெற்றது. சென்னை அண்ணா நகரில் உள்ள தனியார் கல்லூரியில் தேர்தல் நடைபெற்றது.

இந்த தேர்தலுக்கு ஓய்வு பெற்ற நீதிபதி ராஜேஸ்வரன் தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தத் தேர்தலில் வாக்களித்த நடிகர் விஷால் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய விஷால் ஜனநாயகன் திரைப்பட விவகாரம், தணிக்கை வாரியம் பற்றி கருத்து தெரிவித்தார்.


தொடர்ந்து பேசிய அவர், “ஜனநாயகன் விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளது. எனக்கு கே.வி.என். ப்ரொடக்ஷன்ஸ் பற்றி தெரியாது. இதுபோன்ற பிரச்சினையின் போது ஒருவேளை தயாரிப்பு நிறுவனம் தயாரிப்பாளர் சங்கத்திற்கு வந்திருந்தால், இந்த வவிகாரத்தில் ஏதாவது நடந்திருக்கலாம். வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும் போது, நீதிபதியை எப்படி கேள்வி கேட்க முடியும்.

தயாரிப்பாளர் சங்கத்தை விட பெரிய அமைப்பு தணிக்கை வாரியம். கிட்டத்தட்ட கோடிக்கணக்கான மக்கள் எதை பார்க்க வேண்டும் எதை கட் செய்ய வேண்டும் என்பதை நான்கு அல்லது ஐந்து பேர் கொண்ட அமைப்பு முடிவு செய்கிறது. உண்மையை சொல்லப் போனால், எனக்கு இதில் துளியும் உடன்பாடு இல்லை. எனினும், விதிமுறைகள் என இருக்கும் போது அதற்கு ஏற்பதான் நடந்து கொள்ள வேண்டும்,” என்றார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY OR SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


ஆட்கள் தேவை
CNC டர்னிங் ஆப்பரேட்டர்
பெயிண்டர்
ஹெல்பர்
நல்ல சம்பளம் வழங்கப்படும்
Southern Heat Exchangers, Coimbatore
99444 40560


WANTED
MARKETING MANAGER
ACCOUNTANT
CNC LATHE MILLING OPERATOR & PROGRAMMER
PLASMA & BENDING OPERATOR
LATHE MILLING MACHINERY OPERATOR
AMBATTUR TAPSTIA,KATTUR
Contact: 95660 61750


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


LOW COST MATRIMONY WEBSITE
CALL: 7789951009


MLMPERFECT.COM
Start Any MLM Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by 1000+ satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247


WANTED EXPERIENCED SOCIAL MEDIA CONTENT CREATORS
94386 10756


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்







## உயிர்த்தமிழே!

நேரிசை வெண்பா!

தமிழே உயிரே
தகவே அருளே
அமுதே அழகே
அறிவே..கமழும்
நிறைவே நலமே
நினைவே பயிரே
இறையேநீ என்றும் இனிது!

கலையே கனிவே
கருணையே காணும்
நிலவே இளமையே
நேர்ந்த...புலமை
உயர்வே உணர்வே
மணமே மலரே
வியப்பேநீ என்றுமே வீறு!

மூத்த தமிழே
முதன்மைத் தமிழேநீ
யாத்த பனுவல்
அருமையே..ஏத்திப்
புகழ்ந்தேனே உன்னை
பொலிவே
புதிரே
வகையான
வண்ணமே
வாழ்!



முனைவர்
இராம.
வேதநாயகம்
திருவண்ணாமலை.

நிலைமாற்றி...
புகைப்படத்தையோ...
தன்படத்தையோ...
கேட்பதில்லை...
உன்னிடம்...

உணர்வாகவே...
உன்னை
ரசிப்பதால்...



தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி

## செயற்கை நுண்ணறிவு

மனித சிந்தையின் புதிய
ஒளி. மின்னொளியில்
மலரும் அறிவுக் கூர்மை.
தரவுத் துளிகளில்
தேடி உண்மை காணும்
விஞ்ஞானம். தவறாத
கணக்கில் தீர்வு
சொல்லிவிடும்.
சில நேரங்களில் பொய்
தகவல்களைத் தரும்.
இதுவும் சில காலத்திற்குள்
நீங்கும். மூளையின்
மொழியை எண்ணிமத்
தரவாக மாற்றி,
முயற்சியின் பலனை
வேகத்தில் காட்டி
உலகம் முழுவதும்
இணைக்கும் பாலம்.
உயிரும் இயந்திரமும்
சேர்ந்திடும் காலம்.
அறிவின் விதையை
விதைக்கும் தோழன்.
அடுத்த சகாப்தத்தை
வடிவமைக்கும் புதிய நுட்பம்.
மென்மேலும் வளர்ந்து
அறிவியலின்
உச்சத்தை
அடையட்டும்.



உ.மு.ந.ராசன்
கலாமணி
கோயம்புத்தூர்.

## ஹைக்கூ

மலை ராணியின் தலையில்
பின் வளைவுகள்.

2.நீ காலி செய்த வீட்டில்
உன் நினைவுகள்
குடி வந்து இருக்கிறது.

3.போர்வையை
உதறினேன்
உருண்டோடியது.
கனவுகள்.



ஜயந்தி
சிவக்குமார்.
திருச்சி.

## தாய்மொழி காப்போம்!

எண்சீர் மண்டிலம்.

தமிழ்நாட்டில் பிறந்தபின்னே
தமிழ்ப்பெயரே வைக்காமல்
தகாதபெயர் வைத்திடுதல்
ஏன்தானோ சொல்லிடுவீர்!
கமழ்கின்ற தமிழ்ப்பெயர்கள்
காலமெலாம் வாழவைக்கும்!
கருத்தினிலே வைத்தேதான்
பார்த்திடுங்கள் தெரியவரும்!
இமைக்கின்ற
கண்களும்தான்
இன்தமிழைக்காண்கையிலே
ஈடில்லாத்தமிழ்ப்பெயரை
வைக்காமை ஏன்தமிழா!
அமைகின்ற அழகான
தமிழ்ப்பெயர்கள்
ஈங்கிருக்க அர்த்தந்தான்
இல்லாத பெயர்களையே
எதற்குவைப்பீர்!

அம்மாவை அப்பாவை
அழகாய்த்தான்நாமும்
அன்றாடம் அழைப்பதிலே
என்னதான்நீர் காணுகின்றீர்
சும்மாவா அம்மாவும்
அப்பாவும் கூறுங்களேன்.
சொந்தத்தை பந்தத்தை
எல்லாரும் தமிழ்ப்பெயரை
இம்மண்ணில்வைத்திடுவோம்
நந்தமிழில் பேர்கொள்வோம்
இம்மையிலே வைத்திடுவோம்
ஒருசடங்கு என்றுணர்வீர்
செம்மாந்து தமிழ்ப்பெயரைக்
கூறுகையில் எஞ்ஞான்றும்
செழிப்பான நந்தமிழே

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.



## செல்லம் !

நீ.. அப்பா செல்லமா அம்மா
செல்லமா என்று கேட்டேன்
குழந்தையிடம்...
குழந்தை டக்கென பதில்
சொன்னது...
நான் ...
'செல்ஃபோன்
செல்லம் !"



எம்.பி.
தினேஷ்
கோவை

## தமிழே.. அமிழ்து.!

எழுதி எழுதி.. எழுதி எழுதி..
எழுதிப் பழகுவேன்.!
அமுத தமிழை தினமும்
எழுதி வணங்கி மகிழுவேன்.!

தொழுது தொழுது தூயத்
தமிழை தொடர்ந்து
எழுதுவேன்! துயரம் யாவும்
மாற்றும் தமிழைப் பணிந்து
மகிழுவேன்.!

உழுது உழுது எனது
நிலத்தில் தமிழை
ஊன்றுவேன்.. உலகம்
முழுதும் தமிழின் விதையை
விதைத்து வணங்குவேன்.!

விழுது விழுது ஆலமரத்து
விழுது ஆகுவேன்.. பொழுது
மலர புதிய தமிழில் கவிதை
வழங்குவேன்!

அமிழ்து அமிழ்து
தமிழே அமிழ்து..
அள்ளிப்பருகுவேன்! பழுது
நீக்கும் அமுதக் கவிகள்
படைத்து மகிழுவேன்.!

வே.கல்யாண்குமார்.

## அப்பா சம்பாத்தியம்

என் "அப்பா" உழைத்த
சம்பாத்தியத்தில் !
என் "அம்மா" உணவை
சமைத்ததில் !
எனக்கு "அன்பும்
அரவணைப்பும்
ஆரோக்யமும்" கிடைத்தது !

எனக்கு "பசி" என்ற
நிலையும் ஒரு நாள்
"இருந்ததில்லை" அப்போ
நான் சம்பாதிக்கவில்லை !
இப்போ நான்
சம்பாதிக்கிறேன் ஆனால்
ஒவ்வொரு நாளும்ஒவ்வொரு
நொடியும் "பசி" என்ற
நிலையிலேயே வாழ்கிறேன் !

அம்மா
அப்பாவிடம்
கிடைத்த
"அன்பான
உணவிற்கு"
விலை மதிப்பே
இல்லை !



G.A.கோவிந்தராஜ்
(எ)சுரேஷ்குமார்
திருப்புவனம் புதூர்



தாகம் தீராமல்
ஓடிக் கொண்டிருந்தது நதி.
காதல் செய்ய மறுத்து
மேகங்களை
விரட்டியது காற்று.
எப்போதும்
போல
நெருப்பின்
அணைப்பில்
முடங்கிக்
கிடக்குது
மனசு.



ரிஷபன்



பூனை மயிர் மண்டிய
உன் கால்களில் பூக்கிறது
ஆண்மை வருடும்
வெட்கத்தில் நிழலை
தேடுகிறது பெண்மை
பொருந்திய என் கைகள்!

முகம் பார்த்து பேசத் தான்
அகத்தின் ஆசையடி ஏனோ
இதுவரை முடியாமலே
போனது பிரமிக்க வைக்கும்
பிரமீடுகளின் அழகிற்கு
முன்னால்?!

என் கர்வமெல்லாம்
உன் காலடியில் ஏனோ
காணாமலே போனது.
இதற்கு பெயர் தான்
காதலா என தெரியவில்லை
தெரிந்து கொள்ளவும்
விரும்ப வில்லை
உன் கை வருடும்
அந்த பூனையை போலவே
வாழ விரும்புகிறேன்

லி.நௌஷாத் கான்

## முதலுதவி

கனிமரங்கள் நிழல்கொடுக்கும் சாலை தன்னில்
காலைநேரம் தந்தையொடு மகனும் சேர்ந்தே
இனிமையான இயற்கையினைச் சுவைத்தவாறு
இன்பமுடன் உரையாடிச் செல்லும் போது
தனியாக மாட்டுவண்டி சேற்றுப்பள்ளம்
தனில்சிக்கி நின்றிருக்க வண்டியோட்டி
குனிந்ததனை நகர்த்துதற்கும் முயன்றிடாமல்
குரல்கொடுத்தே உதவிகேட்டு நின்றிருந்தான் !

வண்டியோட்டி உதவிகேட்டும் உதவிடாமல்
வரும்தந்தை பின்னாலே மகனும் சென்றான்
கண்முன்னே அடுத்ததொரு வண்டி நிற்கக்
கால்சேற்றில் பதிந்துநின்று வண்டியோட்டி
மண்சேற்றில் புதைந்திருக்கும் சக்கரத்தை
மனஉறுதி யோடுதூக்கும் காட்சி கண்டு
தன்கரத்தால் அழைக்குமுன்னே உதவி செய்த
தந்தையினைக் கண்டுமகன் வியந்து கேட்டான் !

உதவியெனக் கேட்டவனை ஒதுக்கி விட்டே
உதவிகேளா அவனுக்கேன் செய்தீ ரென்றான்
உதவியெனக் கேட்டவன்தன் முயற்சியின்றி
உழைக்காமல் நின்றிருந்தான்; அடுத்திருந்தோன்
உதவிக்காய் நில்லாமல் சக்கரத்தை
உடல்வளைத்துத் தூக்குதற்கே முயற்சி செய்தான்
முதலவனோ சோம்பேறி; உழைப்போர்க்கேநாம்
முதலுதவி செய்யவேண்டும் என்றார் தந்தை !



பாவலர் கருமலைத்தமிழாழன்

## கல்லும் கதைப் பேசும்.!

ஒருமலையில் வெட்டியெடுத்த
இரு கற்கள்.. ஒன்றோடு
ஒன்று பேசியதை நான்
கேட்டேன்.!

ஒரு கல்.. படிக்கல்..
உள்ளே கருவறை கல்..
படிக்கல் பேசியதை
பாவலன் யான் கேட்டேன்!

என்னடா என்ன இது..
எல்லோரும் மிதித்திட
கண்ணீர் வருகிறதே..
என் கதை சோகக் கதை!

மனது வலிக்கிறது..
மழை வெயில் என்மீது
மனிதன் காலின் கீழ்..
மரண வேதனைகள்!

உள்ளே இருக்கும் கல்லே..
உன்னை கடவுள் என்றே
பாலூற்றி பூசை செய்து
பார்த்துக் கை கூப்பி..

எல்லோரும் வணங்கிடவே
பூ வைத்துப் பொட்டிட்டு
முன் விழுந்து பணிந்து
போற்றும்படி இருக்கின்றாய்!

கல்லிலே உன் நிலையோ
காண்பதற்கு பெரியது..
கடவுளே.. உன் வடிவம்
புண்ணியம் செய்தாயோ?

எனக்கும் உனக்கும்
இடையில் ஏன்
வேறுபாடு?
உன்னை வணங்குகிறார்..
என்னையோ மிதிக்கின்றார்..!
உள்ளிருந்த கல் சிரிக்கும்..
உள்ள நிலை உரைக்கும்!
அன்றொருநாள்
உளியொன்று.. ஓங்கி
அடிக்கயிலே
ஒரு அடிக்கே நீ விழுந்தாய்.!

படிக்கல்லாய் கிடக்கின்றாய்..
என்னைப் பார்! எனக்கு
எத்தனை அடிப் பட்டேன்!
கண்ணை செதுக்கி..
கை..கால்கள் செதுக்கி..
வைத்துச் செய்ததனால்
வாங்கிய அடிகள் கோடி!

உளி அடிகள் பட்டதனால்
ஒரு அடிக்கே நீ விழுந்தாய்.
காலில் மிதிப்பட்டாய்..
கதையினை கூற வந்தாய்!

உளி கொடுத்த
வலியேற்றேன்..
வழிபடும் சிலையானேன்!
வலி ஏற்றதாலே நான்
வாழ்வு பெற்றேன்!
வாழ்க்கைப் பாடம் இது!
வையகம் உணர்ந்திடுமோ!

இரண்டு கற்கள் பேசியது..
என் காதால்
கேட்டதனால்..
கேட்டதையேப்
பாட்டாக்கித்
தருகின்றேன் ஏற்பீரோ!



வே.கல்யாண்குமார்.

# நூல் விமர்சனம்

நூல்: இறையன்பு
புத்தகத் திருவிழாப்
பேருரைகள்
நூல் ஆசிரியர் :
முதுமுனைவர் வெ.
இறையன்பு, இ.ஆ.ப.
நூல் மதிப்புரை :
கவிஞர் இரா.இரவி
வெளியீடு:நியூ செஞ்சுரி புக்
ஹவுஸ் (பி) லிட்.,
41 பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், அம்பத்தூர்,
சென்னை–600 050.
செல் : 044 – 26251968,
26258410
பக்கங்கள்:556
;விலைரூ.550

இந்த நூலை முதுமுனைவர் வெ.இறையன்பு அவர்கள் அண்மையில் மறைந்த அவரது அப்பா அ.வெங்கடாஜலம் அவர்களுக்கு காணிக்கையாக்கி உள்ளார்கள். அதில், அவா எழுதியுள்ள "என் கரம்பிடித்து எழுதவும், வாய்திறந்து பேசவும் கற்றுத்தந்த முதல் ஆசானாகத் திகழ்ந்த அப்பா அ.வெங்கடாஜலம் அவர்களுக்கு நன்றியுடன்" என்கிற இந்த வரிகளைப் படித்தபோது, பேச்சு, எழுத்து என இரண்டு துறையிலும் தனக்கென தனிமுத்திரை பதித்து வெற்றிக்கொடி நாட்டி வருகின்ற நூலாசிரியர், 'இதற்கு காரணம் என் அப்பா' என்று வெளிப்படையாக குறிப்பிட்டு அப்பாவுக்கு நன்றி உரைத்தது கண்டு நெகிழ்ந்து போனேன். மகன்கள் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டிய நன்றி உணர்வு.

இறையன்பு ஐயா அவர்களை, புத்தகத் திருவிழா உரை கேட்டு முடித்தவுடன், இந்த அற்புத உரைகளை நூலாகக் கொண்டு வாருங்கள் என்று நான் உள்பட, பல நண்பர்கள் வேண்டுகோள் வைத்தோம். எங்கள் வேண்டுகோளின்படி தாமதமாக வந்தாலும்







மிகத்தரமாக, வரலாற்று ஆவணமாக வந்துள்ளது. பொதுவாக புத்தகத் திருவிழாவில் பேசும் பிரபலமானவர்கள் இலட்சக்கணக்கிலும், பிரபலமற்றவர்கள் ஆயிரக்கணக்கிலும் சன்மானம் பெற்று வருகிறார்கள். ஆனால் இறையன்பு ஐயா அவர்கள் புத்தகத் திருவிழாவில் பேசுவதற்கு சன்மானம் வாங்குவதே இல்லை. மதுரையில் பேசி முடித்ததும், இரண்டு இலட்சம் ரூபாய் கொண்டு வந்து கொடுக்க முற்பட்டார்கள், ஆனால் அதை பெற்றுக்கொள்ள மறுத்து விட்டார், நான் உள்பட, நண்பர்கள் பலர், ஐயாவிடம் உரைக்கான சன்மானம் பெற்றுக்கொள்ளலாமே, நீங்கள் அறக்கட்டளை வைத்து பல்வேறு உதவிகள் செய்து வருகிறீர்கள்,

அதற்குக்கூட பயன்படுத்தலாமே என்றோம். அதற்கும் அவர், பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டு, இங்கு மட்டுமல்ல, அரசு மட்டும் அனைத்து புத்தகத் திருவிழாவிலும், அரசுப்பள்ளி, கல்லூரிகளில் நடைபெறும் விழாக்களில் பேசும் உரைக்கும் சன்மானம் பெறுவதே இல்லை. இது கொள்கை முடிவு.

அரசு தலைமைச் செயலாளராகப் பணியாற்றி, பணிநிறைவு பெற்று விட்டு, அரசிடமிருந்து சன்மானம் பெறுவது முறையல்ல, நெறியல்ல. என் அம்மா ஆசிரியராகப் பணியாற்றியவர், என் தந்தையும் அறவழி வாழ்ந்தவர். பெற்றோரின் போதனையை மறக்கவில்லை என்றார். இந்தக்காலத்தில் இப்படி ஒரு மனிதரா? என வியந்து போனேன். அறநெறி பேசுவது, எழுதுவது மட்டுமன்றி வாழ்விலும் கடைப்பிடித்து வரும் மாமனிதர் இறையன்பு.

புத்தகத் திருவிழாப் பேருரைகளின் தொகுப்பு நூல் இது என்பதால் கண்ணில் கண்ட உண்மையை இதில் எழுதி உள்ளேன். இந்த நூல் போட்டித்தேர்வு எழுதும் மாணவர்கள் அனைவரும் படிக்கவேண்டிய அற்புத நூல், பல்வேறு தகவல்கள் நிரம்பப்பெற்ற தகவல் களஞ்சியமாக உள்ள நூலை தொகுத்த இறையன்பு ஐயா அவர்களை 'நடமாடும் என்சைக்ளோபீடியா' என்றே சொல்லலாம். அவ்வளவு தகவல்கள். இவை அனைத்தையும், நீண்ட நெடிய உரை முழுவதையும் கையில் எந்தவித குறிப்பும் இன்றி, மடைதிறந்த வெள்ளமென, தெளிந்த நீரோடை போல உரையாற்றுவார். கேட்போரின் கவனத்தை முழுவதாகவும் ஈர்த்து விடுவார்.

எல்லோருடைய உரையையும் நூலாக்க முடியாது. அவ்வளவு தரமாக உரை இருக்காது.

அப்படியே நூலாக்கினாலும் ஒப்பனை, திருத்தங்கள் செய்துதான் நூலாகும். ஆனால் இந்த நூலில் விழாத் தலைமை, வரவேற்பு, பங்குபெற்றவர் அனைவரின் பெயர்களுடன் உரை அப்படியே ஆவணமாக இடம்பெற்றுள்ளது. பெரிய பேச்சாளர்கள் கூட குறைந்தபட்சம் அழைப்பிதழை கையில் வைத்துக்கொண்டுதான் பேசுவார்கள். ஆனால் இறையன்பு அவர்கள், அழைப்பிதழைக் கூட கையில் வைத்துக்கொள்ள மாட்டார். ஒருமுறை பார்த்தவுடன் விழியில் படம்பிடித்த மூளைக்குள் ஏற்றி விடுகிறார்.


'எந்திரன்' திரைப்படத்தில் வரும் 'ரோபோ' போல, கண்ணால் பார்த்ததும் தாளில் எழுதியுள்ளவை அவர் மனதில் பதிந்து விடுகிறது. சங்கப்பாடல் வரிகளை, பாடம் நடத்தும் பேராசிரியர்கள் கூட பார்த்துத்தான் வாசிப்பார்கள், ஆனால் ஐயா பார்க்காமல் பாடல்வரிகளை சொல்வார், அவருடைய நினைவாற்றல் கண்டு பிரமித்துப் போனேன்.

என் வாழ்நாளில் இப்படி ஒரு ஆற்றல்மிக்க மனிதராக, வேறு யாரையும் சந்தித்தது இல்லை. இதை நான் மட்டும் கூறவில்லை. புத்தகத் திருவிழாவில் உரை கேட்க வரும் பலரும் குறிப்பிட்டுள்ளனர். வானதி பதிப்பகம் வானதி இராமநாதன் அவர்கள், இறையன்பு அவர்களின் ஒரு உரையைக் கேட்டுவிட்டு வியந்துபோய் என்னிடம் பலமுறை பாராட்டினார். சென்னையில் நடக்கும் இறையன்பு அவர்களின் விழாக்களில் உரைகேட்க தவறாமல் சென்று வருகிறார். அவர் மட்டுமல்ல, அவர் உரைகேட்க மிகப்பெரிய ரசிகர் படையே உண்டு. புத்தகத் திருவிழாவில் இறையன்பு அவர்கள் பேசுகிறார் என்றால், எல்லா ஊரிலும் பெருங்கூட்டம் கூடி விருகின்றது.

அப்படி ரசித்த ரசிகர்களுக்கு, உரைகளை படித்து மகிழ, திரும்பத் திரும்ப வாசித்து அறிவாற்றலை வளர்த்துக் கொள்ள, பல புதிய தகவல்களை தெரிந்துகொள்ள உதவிடும் ஒப்பற்ற நூல் இது. வாங்கிப் படித்துப் பாருங்கள் உண்மையை உணருவீர்கள். இதில் சில உரைகளை நான் நேரடியாக கேட்ட அனுபவம் உண்டு. அவற்றை அசை போட்டுப் பார்த்தேன், 16 உரைகள் தொகுப்பாக வந்துள்ளது. எல்லா மாவட்டங்களிலும் புத்தகத் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றது. தமிழ்நாடு அரசு, பபாசியுடன் இணைந்து அறிவுத் திருவிழா நடத்தி வருவது வரவேற்புக்குரியது, அதனால் வந்தது தான் இந்த அரிய நூல்.

சங்க இலக்கியப் பாடல்கள் மட்டுமல்ல, 'வரவு எட்டணா, செலவு பத்தணா' திரைப்படத்தில் வந்த அந்தப் பாடல் வரிகள் முழுவதும் நூலில் உள்ளது. இந்த வரிகளே வாழ்வியலை கற்றுத்தரும் வரிகள். இன்றைக்கு இளையதலைமுறையினர் பலர் கடன் தருகிறார்கள். கடன் மேளா என்று சொல்லி வழங்கிவிட்டு மாதாமாதம் EMI என்ற முறையில், சிறிய உயிரியான அட்டைப்பூச்சி நம் உடலில் உள்ள இரத்தத்தை உறிஞ்சி நம்மை செயலிழக்கச் செய்வது போல, மக்களின் வருமானத்தை உறிஞ்சி அவர்களின் நிம்மதியான வாழ்வை நிலைகுலையச் செய்கின்றனர். அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய பாடல் வரிகள் அவை. பதச்சோறாக மேற்குறிப்பிட்ட ஒன்றை மட்டுமே கூறியுள்ளேன், இதுபோன்ற பயனுள்ள தகவல்கள் நூல் முழுவதும் நிறைந்து உள்ளன.

ஒருமுறை படித்துவிட்டு வைத்துவிடும் சராசரி நூல் அல்ல இது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் திரும்ப வாசித்து தெரிந்து கொள்ள உதவிடும் நூல். இவ்வளவு தகவல்கள் இதுவரை நாம் அறியாமல் இருந்துள்ளோமே என வியப்பில் ஆழ்த்தும் நூல். தகவல் களஞ்சியமாக நூல் உள்ளது. வீட்டு நூலகத்தில் அவசியம் இடம்பெற வேண்டிய நூல் இது. முதுகலை மாணவர்களுக்கு பாடத்திட்டத்தில் இடம்பெறச் செய்யலாம். அறிவார்ந்த சமுதாயம் உருவாகிட உதவிடும் நூல். நூலாசிரியர் இறையன்பு அவர்களின் நூல்கள் வரவர அவரது முந்தைய நூல்களின் பிரமிப்பை வெல்லும்வண்ணம் அடுத்தடுத்த நூல்களும் வருகின்றன. பாராட்டுகள்.



## இனிய காதல் நல்வாழ்த்துகள்

வெண்டைக்காயை உடைத்துப்
பார்த்தும் சுண்டைக்காயை
உருட்டிப் பார்த்தும் வாங்கும்
நீ அவ்வளவு சுலபமாக
என்னை நிமிர்ந்து பார்த்து
விடுவாயா என்ன?!
ஒன்றை மட்டும் தெரிந்து
கொள்! ஒவ்வோரு நொடியும்
உன்னை உற்று நோக்கிக்
கொண்டிருக்கும் என்னைத்
தவிர வேறு யார் அழகா(ன)
க உனக்கு இனிய காதல்
நல்வாழ்த்துகளை
சொல்லி விட இயலும்!
ரோஜாவிலிருந்து தான்
குல்கந்து செய்கிறார்கள்
அதை விட இனிக்கும்
உன் இ த ழ் க ளி ன்
ர ச த் தி ற் கு என்ன பெயர்
வைப்பது அன்பே?!

## கண்மணி

உன்னை ஓர்
ஒற்றைப் பூ என தான்
நினைத்தேன்!
உன்னைத்தொடர்ந்து
வாசம் முகர்ந்த
பின்னரே தெரிந்தது!
நீ ஓர் அழகிய நந்தவனம்
என்று! உன்னைத்
தொட்டணைத்த பின்னே தான்
நீ மலர் வனம் என்ற
உண்மை தெரிந்தது!
கண்மணி உன் மீது நான்
கா த லா கி ப்போன பிறகோ
நீ கிடைத்தற்கரிய முத்தாரம்
எனத் தெரிந்தது!
நீ எழுதியதையெல்லாம்
வாசித்து மலர்ந்த பின்
உணர்ந்தேன்!
நீ எனக்குக்கிடைத்த
கலைமகள் என்று!
உனக்கென(வே) நான்
ஓர் இதழ் தொடங்கினால்
இதயம் பேசுகிறது
என்றே பெயர் சூட்டுவேன்!
என் உள்ளத்தின் இல்லத்தின்
சாவியை உன்னிடம்
கொடுத்த பின்நான்
இன்னமும் உனக்குக்
குங்குமம்தராதிருந்தால்
அது உனக்கும் எனக்கும்
ஏன் கா த லு க் கே
கூட அழகல்ல!



முத்து ஆனந்த்
வேலூர்




அனுதினம் துயிலில்
இருந்து மீள்வது ஒரு
பிறப்பே மீளாத்துயிலில்
ஆழ்வது இறப்பே
இடைப்பட்ட காலத்திலேனும்
இறைவனை நினைப்பது
சிறப்பே....

**ஸ்ரீகாந்த்**

## வாழ்க்கை

உலகம் இனிமையானதுதான்,
சந்தேகமே இல்லை.
ஆனால் ஒன்றே ஒன்று:
நம்முடைய இனிமையைக்
கொஞ்சமாவது
காட்டவேண்டும்.



அப்போதுதான்
அது
இனிமையாக
இருப்பதே
புரியும்
நமக்கு!

**கே. பி. ஜனார்த்தனன்**

வட்டலுடன் உட்கார்ந்து
இருப்பவனைக் கண்டும்
காணாமலும் போகிறேன்.
அன்பைத் தவிர என்னிடம்
ஒன்றுமே இல்லையே.
எனக்கே எதற்கும்



உதவாதன்பு
அவனுக்கு
மட்டும் என்ன
செய்துவிடும்.

**துங்கன்**
(கோயம்புத்தூர்)

1. பணத்திற்கு ஏற்றார் போல்
கிடைப்பது பொருட்கள்
மட்டுமல்ல இன்றைய
கல்வியும் தான்

2. உச்சியை தொட
பாரத்தை குறை
உயர்வைத் தொட
கவலையை குறை

3. மருந்து சீட்டு
போலத்தான் வாழ்க்கையும்
என்ன எழுதி இருக்கிறது
என்பது படைத்தவனுக்கு
மட்டுமே வெளிச்சம்

4. கஷ்டப்படுவதற்கு
பயந்துவிட்டால்இஷ்டப்பட்டதை
அடைய முடியாது

5.புழுவிற்கும்அதே பசி தான்
மீனுக்கும் அதே பசி தான்
யார் ஏமாறுகிறார்கள்
என்பதே விதி

6.ஒருவரின் பசி என்ற நோய்
உன்னால் நீங்கினால்
நீதான் கடவுள்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

1. ஒரு மனிதனின் ஆயுள்
நூறாண்டு அல்ல அவன்
மூச்சு விடும் நேரம் மட்டுமே

2. ஒரு பெண்ணிற்கு நீ
கொடுக்கும் மரியாதை
உன் தாய் உன்னை வளர்த்த
விதத்திற்கு கொடுக்கப்படும்
சான்று

3.திருவிழாக்களில்
தொலைந்த குழந்தைகளை
விடதிருவிழாக்களை
தொலைத்த
குழந்தைகள் அதிகம்

4.பிரச்சனைகளை
இருக்கக்கூடாது என்பவன்
சாதாரணமானவன்
பிரச்சனைகளை தீர்வுகளை
நோக்கி நகர்த்துபவன்
சாதனையாளன்

5.செய்த உதவியை மறக்க
வேண்டும் பெற்ற உதவியை
மறக்கக்கூடாது

6. சிரிப்பு விற்பனைக்கு



என்று
இருந்தால்
அனைவரின்
முகமும்
மலர்ந்து
இருக்கும்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## காத்திருப்பு !

இலவு காத்த கிளி கதையாக
இங்கே காத்திருந்து
ஏமாந்தோர் அதிகம் !

பழம் என்று காத்திருந்து
பஞ்சானது கண்டு பச்சைக்
கிளி வருந்தியது போலவே !

பலர் நடக்காது என்று
தெரிந்திருந்தும்
பொறுமையோடு காத்திருந்து
ஏமாறுகின்றனர் !

பேருந்திற்காகக்
காத்திருக்கும் பயணி
பேருந்து வந்ததும்
பயணிக்கிறான் !

பெண்ணிற்காகக்
காத்திருந்து பலர்
பொன்னான வாழ்கையை
இழந்தனர் !

காத்திருந்த காலத்தில்
செயலாற்றினால்
கடமையில் புகழ்
சேர்ந்திருக்கும் !

பொன்னை விட மேலானது
நேரம் பொன்னை வாங்கலாம்
நேரத்தை வாங்கமுடியாது !

வினாடியின் மதிப்பு
விளையாட்டு வீரன்
அறிவான் நிமிடத்தின் மதிப்பு
விமானப்பயணி அறிவான் !

அர்த்தமுள்ள அளவான
காத்திருப்பு நன்று
அர்த்தமற்ற அளவற்ற
காத்திருப்பு நன்றன்று !

அளவிற்கு மிஞ்சினால்
அமுதமும் நஞ்சு
அர்த்தமற்ற அளவற்ற
காத்திருப்பும் நஞ்சு !



பொருளற்ற
காத்திருப்பு
விவேகமன்று
பொழுதை
மதித்தவன்
சிறப்பான் !

**கவிஞர் இரா .இரவி !**



## நீ..நான்..நிலா.!

நீயென் மார்பில்
சாய்ந்திருக்க..
நிலவே நீ..சாட்சி.!
நீலக் கடலின் ஓரத்திலே
நிலவே நீ..சாட்சி.!

தேனும் பாலும் இதழிருக்கும்..
அவள் இடையில் ஓடை
வழிந்திருக்கும்! ஆடை
அதனை மறைத்திருக்கும்.!
அதற்கும் நிலவே நீ..சாட்சி!

வெள்ளித்தட்டு
ஒன்றிருக்கும்.. அதில்
விருந்து இரவில் தான்
நடக்கும்..! கவ்வும் கண்கள்
சிவந்திருக்கும்.!.அவை
காதல் கவிதை தந்திருக்கும்!
அதற்கும் நிலவே..நீ சாட்சி.!

மணல்வெளி மஞ்சமாகிறது..
அந்த மலைகள் குளுங்கி
அசைகிறது.! உலைபோல்
பார்த்ததும் கொதிக்கிறது!
உடனே வியர்த்து வழிகிறது.!
அதற்கும் நிலவே நீ..சாட்சி.!

விடியும் வரைக்கும்
கூடல்கள்.. இங்கு
விடிந்ததும் ஆசையில்
ஊடல்கள்.. இன்பத்தின்
எல்லைத் தேடல்கள்..
அவை இயம்பிடும் காதல்
பாடல்கள்.!
அதற்கும் நிலவே நீ..சாட்சி.!

**வே.கல்யாண்குமார்.**

## முயற்சி திருவினையாக்கும்


விழிகள் மூடிப் படுத்திருந்தால்
விடியல் விழிக்குத் தெரியாது
விழித்த விழிக்கே இருள்விரட்டி
விடிந்த ஒளியின் எழில்தெரியும்
வழியா வியர்வை உடலிருந்தால்
வாழ்க்கை இருளில் போய்முடியும்
பொழியும் வியர்வை உடலுக்கே
பொலியும் அழகு வாழ்வமையும் !

மண்ணில் காலை ஊன்றுதற்கு
மனத்தில் அச்சம் கொண்டிருந்தால்
மண்ணில் நிற்க முடியாது
மாற்றம் செய்ய இயலாது

எண்ணம் செயலாய் உருபெறவே
எழுச்சி நெஞ்சில் ஏற்றிவிட்டால்
விண்ணும் கைக்குள் அடங்கிவிடும்
வியக்கும் உயர்வும் உனையடையும் !

வெல்லும் முயற்சி இல்லாமல்
வெற்றி உன்னில் விளையாது
புல்லும் உனக்கு வில்லாகும்
புதிய முயற்சி உனக்கிருந்தால்
அல்லும் பகலும் சோராமல்
ஆற்றும் உறுதி தளராமல்
சொல்லும் செயலும் ஒன்றானால்
சொர்ணம்போல வாழ்வொளிரும் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



இனிமையான தனிமை கூட
நரகம் தான்
நீயில்லாத போது!!

கண்களை மூடிக்கொண்டு
கவிதைகளையெல்லாம்
என்னிடம் கேட்காதே!

என் கவிதைகள் பிறப்பதே
உன் கண்களால் தானடி!

நித்தம் துடிக்கும் இதயத்திடம்
எப்படி சொல்வேன்?
மொத்தமாய் முத்தத்தோடு
அவளுக்குள்
முழுமையாய் புதைந்திட
வேண்டுமென்று!

உன் ஒற்றைக்கண் பார்வை
ஓராயிரம் அர்த்தம்
சொல்லுமடி அர்த்தம்
தேடி,தேடியே என்
அகராதியே அலைந்தடி
விளக்கம் சொல்லத் தான்
தமிழ் வள்ளுவன்
வருவானோ?!

இல்லாத போதும் இம்சை
செய்யும் உன் நினைவுகளை
எப்படி கொல்வது?

எவ்வளவு அடி தான் படுவது
இத்தனைக்கு பிறகும்
நீ குறை மட்டுமே சொல்வாய்

உன்னிடம் அன்பு
தொலைந்த பிறகு
அந்த காதலை
எங்கு போய் தேடுவது?!

**1. விலையேறிய தங்கம்**
நகைக்கடையை
கடக்கும் போதெல்லாம்
மனைவி கேட்டு விடுவாளோ
என அச்சப்படுகிறது
ஆண் மனசு!


**2 விடுகதை**
கேள்விகள் மட்டுமே
நிறைந்திருக்கும் வாழ்க்கை
புரியாத புதிர் தான்!

**3 அம்மா**



பசித்திருந்த
போதும்
அம்மாவின்
கரங்கள்
அட்சயப்பாத்திரம்
தான்!

**நௌஷாத் கான் .லி**



## வாழ்வோம் வா கண்ணே

வார்தெடுத்த
வார்த்தைகளை
கோர்த்து ~ கவி
புனைகின்றேன்
கண்ணே,,,
நேற்றுவரை
சிரித்துப்பேசி
கிறங்கடித்தவள்
இன்று ஏனோ
முகம்திருப்பி
நகம் கடித்து நடைக்கூட்டி
இடையாட்டிச்செல்கிறாய்,,,?!
காதல் உணர்ச்சி களைவதல்ல
உணர்வின் வெளிபாடு
இதுயென்ன கோவில்
விழாக்களில் நடக்கும்
கயிறு இழுக்கும் போட்டியா,,?
பலத்தை பரிசோதனைச்
செய்ய,,,!

காதலும் கவிதையும்
சொல்லிவருவதல்ல~அது
உணர்வின் வெளிப்பாடு
காதலும் வீரமும்கலந்த



தமிழனின் பண்பாடு காக்க
உண்மையாய் காதலிப்போம்
வன்மம் மறந்து
மென்மையாய்
வாழ்வோம்,,,!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

## இலக்கியத்தோழியே

அன்பால் ஆக்ரமித்து~என்
அணுக்களில் கலந்து
இரத்த நாளங்களில்
சத்தமின்றி ஓடுகிறாய்
சின்னப்புன்னகையில்
என்னை ஆளுகிறாய்
உன் சோகங்கள்
எதுவானாலும்
எனைத்தாக்காமல்
பார்த்துக்கொண்டு
அன்பை மட்டுமே
அள்ளிக்கொடுக்க
உன்னால் மட்டுமே முடியும்
என் இனிய
இலக்கியத்தோழியே,,,!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

## ஒப்பந்தம்

மேலுக்கு புன்னகை
புரிந்திடுவர் அகத்தில் நச்சு
பொதிந்திருக்கும்
உறவுகளின் நடிப்புப் பட்டறை

இக்கால இளசுகளின் ரவுசு
பொது இடங்களில் உரசல்
முகஞ் சுளிக்க செய்திடும்
சில வாரங்களுக்குப் பின்
காதலி விழிகளில் ஜலம்


பின்னர் புதிய காதலன்
மீண்டும் ஒட்டி உறவாடல்
அணைப்பு முத்த பரிமாற்றம்

நகரங்களில் இது சகஜம்



உன் முந்தைய
கதையை
நானாகக்
கிளற
மாட்டேன்
அதே
மாதிரி நீ
என்னையும்..

**பி. பழனி, சென்னை.**



அவள் ஒற்றைப் பார்வை,
ஓராயிரம்
அணுகுண்டுகளுக்கு சமம்.



அவள் ஒருநாள்
தரிசனம்,
என் ஆயுள்
முழுவதும்
சமர்ப்பணம்.

**மை எழுத்து கனகராஜ்**
கோயம்புத்தூர்

## பேராசையைக் கொல்!

ஆசையைக் கொள்வோம்..பே
ராசையைக் கொல்வோம்!
நேசமே கொள்வோம்..என்றும்
நீசமே கொல்வோம்!
பாசமே கொள்வோம்..
செய்யும்பாவமே கொல்வோம்!
காசினைக் கொள்வோம்..
நம்மில் கயமையைக்
கொல்வோம்!

நன்மையைக் கொள்வோம்..
நம்மில் நாசமே கொல்வோம்!
அன்பினைக் கொள்வோம்..
நம்மில் ஆத்திரம்
கொல்வோம்! பண்பினைக்
கொள்வோம்..பிறரில்
பகையினைக் கொல்வோம்!
இன்பினைக் கொள்வோம்..
வாழ்வில் இழிவினைக்
கொல்வோம்!

## சிந்தனைசெய் மனமே!

(சாரணர் நாள்)
நேரிசை வெண்பா!


உணவை திறனை
உருவாகும் நோயை
இணைந்து தீவிரமாய்
இன்றே..கனிந்திடக்
கண்டறிந்து சாரணப்
பெண்களைக் கண்டேதான்
வண்ணமாய் நோக்கல்
வளம்!

சிந்தனை செய்வோம்
செயல்களைச் செய்வமே
முந்தியே நாமும்தான்
முன்னேறி..விந்தை
வழிசெய்வோம் வண்ணமிகு



சாரணர்
தம்மின்
வழியிலே
செய்திடுவோம்
வா!

**முனைவர் இராம. வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## கண்களுக்கு மகிழ்ச்சி கனவு

தொல்லைகள் இல்லா
கனவு எல்லைகளுக்குள்
இருப்பதில்லை.

எவனும் எதிரி இல்லை.
எமனும் எதிரில் இல்லை.

ஏற்றத்தாழ்வு இல்லை. ஏன்
என்று கேள்வி இல்லை.

நிகழ்ந்ததைச் சொல்வதற்கு
பயமில்லை.

சாத்தியமில்லை என்றாலும்
சந்தோசம் குறையவில்லை.

வம்பு இல்லை வாதம் இல்லை
வண்ணம் களைவதில்லை.

வந்தால் வருத்தம் இல்லை
போனால் தேடவில்லை.

கனவில் கை சேரலாம்
காணாமல் போகலாம்.

பிடித்தவர்கள் வரலாம்,
பிடிக்காதவர்கள் போகலாம்.

பிழைகள் இன்றி கணநேரம்
கண்ணில் தோன்றும் கனவே



நீ
கணவனாலும்
கவலையில்லை.

**வீ.கருப்பையா**
பாவை
கட்டிக்குளம்




## அம்மா

அம்மா என்பது அன்பின்
முதல் மொழி.
பசு கூட அம்மா என்று
கத்துவது வியப்பன்றோ...
அம்மா இங்கே வா
வா என்ற தமிழ்
பாரம்பரிய பாடல்
அந்தக் காலத்திலேயே
எழுதப்பட்டு குழந்தைகள்
பள்ளி செல்லும் முன்பே
அம்மாவால் அறியப்பட்ட
எளிய பாடல் என்பது
அம்மாவுக்குத் தனிச்
சிறப்பன்றோ..
குழந்தையைத் தாலாட்டுப்
பாடி தூங்க வைப்பதும்,
துன்பம் வந்தால் தழுவிக்
காப்பதும் அம்மா தானே.
குழந்தையின் கண்ணீர்த்
துளியை காற்றாய் துடைத்து
கனவுப் பாதையில்
கைபிடித்து
நடத்தியாள்வதும் அம்மா.
பசி வந்த நேரம் உணவு
கொடுத்து பயம் வந்த
வேளை துணிவாய் நின்று
உலகம் முழுதும் மாற்றம்
கண்டாலும்,அம்மா
அன்பு என்றும் மாறாதது
தனிச்சிறப்பன்றோ..
நமக்கு எவ்வளவு
வயதானாலும் அம்மா
என்று ஆசையாக



அழைப்பது
பாசம் கலந்த
சுகந்தானே..

**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.




சக்கரை இருந்தும்
இனிக்கவில்லை
நோயானதால்....

அப்பாவின் வாரிசென
சத்தமின்றி சொன்னது
" நீரிழிவு நோய்"

**ஸ்ரீகாந்த்** திருச்சி



## அவள் பெயர் !

அலங்கரிக்கப்பட்ட
வார்த்தைகள் இல்லை...
மூன்றே எழுத்தில் மாயாத
ஒரு கவிதை எழுதினேன்...
நான் இறக்கும் வரை அது
மாயப்போவதில்லை. என்



நெஞ்சில்
பச்சை
குத்தப்பட்ட
அவள் பெயர் !

**எம்.பி. தினேஷ்.**
கோவை



## கண்ணாடித் தாத்தா.!

கண்ணாடி தாத்தா
காணாமல் போயி..
இன்னியோட ஒருமாசம்
ஆச்சு..!

என்னாச்சு அவருக்கு
எங்கேதான் போனாரோ?
கண்ணாடிக்குப் பூசையும்
போட்டாச்சு!

முன்னாடித் திண்ணையில்..
கம்பீரமாக இருந்த நாள்
ஓடிப் போயாச்சு!
என்னாடி கூத்து? எங்கே
நம் தாத்தா..சாலையோர
மெல்லாம் தேடியாச்சு!

பெத்தப் பிள்ளைகளை
தூக்கிச் சுமந்த அந்த
தாத்தா.. பெயரன்
பேத்திக்கு அனா
ஆவன்னா சொல்லிக்
கொடுத்த அந்த தாத்தா..!

சுமைதாங்கியே சுருண்டு
கிடந்தவர் சொல்லாம
கொள்ளாமப் போனாரே!
முதியோரை மதியாத
உலகத்திலே முதியோர்
இல்லத்துக்குச்
சென்றாரோ..!

என்னடா வாழ்க்கை?
எங்கடா அன்பு? தேடித்தேடி
தாத்தா போனாரோ..!
கண்ணாடி இங்கே தாத்தா
எங்கே? காணாமல் எங்கே
போனாரோ?

**வே.கல்யாண்குமார்.**

ரோஜாக்கள் போலவே...



கண்ணில்...
தென்படுகின்றன
.
இணையத்தில்
நீ அனுப்பும்...
பதில்கள்..

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி




## இயக்கம்

" விண்ணில் சுற்றும்
எண்ணற்ற கோள்கள்
விஞ்ஞானம் என்றாலும்
அவைகளின் சுழற்சி
இறைவனின் இயக்கம்..."

எத்தனையோ
தொலைவுக்கு அப்பால்
யாருடைய இணைப்போ
அனைப்போ இல்லாமல்
சுழல்வது எப்படி ...?"

அவைகளின்
இயக்கங்களின் தாக்கம்
பூமியில் மனிதர்கள் உடலில்
எதிரொலிப்பது எப்படி ....?"

கடல் அலைகள் ஏறி
இறங்குவது கோள்களின்
தாக்கம் ..."

அமாவாசை பௌர்ணமி
கணத்த நாளாக இருப்பது
கோள்களால் ..."

வானிற்கும் பூமிக்கும் ஈர்ப்பு
தான் பூவிஈர்ப்பு விசை
என்கிறார்கள் ..."

வேற்று கிரக வாசிகள்
உண்டு ஏலியன்ஸ் உண்டு
என்பதும் கோள்களின்
இயக்கமே ... "

விண்ணுலகம்
மண்ணுலசத்தை புரிந்து
கொண்டு துணையாய்
இருக்கும் போது ..."



மனிதன்
மட்டும்
சுயநலமாய்
எதிர்ப்பாய்
எதிரியாய்
இருப்பது
ஏனோ ...?"

**ஆர். சீதாராமன்**
சீர்காழி

முனீஸ்வர் துணை
RG
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

RG
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
20% OFF
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget <> We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website | Real Estate Website | E. Commerce Website
Restaurant Website | Shopping Website | News Website
MLM Binary Website | MLM Level Website | MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY
For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80% OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai | Real Choice Chennai | Real Choice Chennai

WANTED
MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED
Managers: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000
Telecaller -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000
Call/wapp: 9438610756

Vilambaram
GET... SET..... SHOOT
YOUR SALES WITH SOCIAL MEDIA
ASK US HOW ?
CONTACT US TODAY!
+91-7789941009
www.vilambaram.com

AUTHORISED கருடவேகா INTERNATIONAL COURIER
GARUDAVEGA
A Brand of NexGen Logistics Pvt-Ltd
International Courier Service
ஆண் / பெண் வேலைக்கு தேவை
கல்வி தகுதி : 10th Std முதல்
Ganapathy, Thudiyalur.
88866 56211

WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp 94386 10756

START YOUR OWN EPAPER WEBSITE TODAY!
CALL 7789941009

Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com

Wanted REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக நிருபர்கள் தேவை
PRESS
பேப்பர்பாய்
8122664699

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

TAMIL TELECALLER JOB FOR WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009

UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com



# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்

# பற்களையும்,எலும்பையும் வலுப்படுத்த எளிமையான வழி



சேப்பங்கிழங்கு செடியினத்தைச் சேர்ந்தது. இது வழவழப்பான தன்மையுடையதாக இருக்கும். சேப்பங்கிழங்கில் பற்களையும், எலும்பையும் வலுப்படுத்தக்கூடிய பாஸ்பரஸ் மற்றும் கால்சியம் சத்துகள் அதிகம் உள்ளது.

100 கிராம் சேப்பங்கிழங்கில் 97 கலோரி உள்ளது. அதுமட்டுமின்றி இதில் இரும்புச்சத்து, புரதச்சத்து மற்றும் வைட்டமின் ஏ, பி போன்ற சத்துகள் உள்ளன.

சேப்பங்கிழங்கு வெட்டை நோயைக் குணமாக்கவும், கண்பார்வைத் திறனை அதிகரிக்கவும் உதவுகிறது.



இதில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால் கழிவு மண்டலத்தில் அழுக்குகள் தேங்குவதைத் தடுப்பதுடன் மலச்சிக்கலையும் தடுக்கிறது.

மேலும் இது நரம்புத் தளர்ச்சியைப் போக்கும் குணமுடையது. இக்கிழங்கை ஆண்மைக் குறைவு உள்ளவர்கள் சாப்பிட்டு வந்தால் இப்பிரச்சனையை போக்கலாம்.

கட்டிகளுக்கும், புண்களுக்கும் சிறந்த மருந்தாகவும் இது பயன்படுகிறது. சேப்பங்கிழங்கை அரைத்து கட்டிகள் மற்றும் புண்களின் மேல் பற்றாகப் போட்டால் விரைவில் குணமடையும். குடல் புண்களை விரைவில் குணப்படுத்தும் தன்மை உடையது. மேலும் தோல் சம்பந்தமான நோய்களுக்கு இது சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது.

இதிலுள்ள பொட்டாசியம் சத்து இரத்த ஓட்டத்தை சீராக வைத்துக்கொள்ள உதவுகிறது.

இக்கிழங்கிலிருந்து குழந்தைகளுக்கான சத்துணவுப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. இக்கிழங்கின் மாவு குழந்தைகளுக்கான மற்ற சத்துணவுப் பொருள்களில் முக்கிய மூலப்பொருளாகவும் பயன்படுகிறது.

குறிப்பு : சேப்பங்கிழங்கு வாதத் தன்மையை அதிகரிக்கும் குணமுடையது. எனவே வாத நோயால் அவதிப்படுபவர்கள் இக்கிழங்கை உணவாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இக்கிழங்கு மருந்துகளின் வீரியத்தை மட்டுப்படுத்தும் தன்மை உடையதால், நோய்க்குச் சிகிச்சைப் பெற்று வருபவர்களும் இதைச் சாப்பிடாமல் இருப்பது நல்லது.

A s Govinda rajan
Kodambakkam, Chennai







# பொன்மொழிகள்



(1)
வாளினால் ஏற்படும் காயத்தைவிட நாவினால் ஏற்படும் காயம் கடுமையானது. ஏனெனில் வாளின் காயம் உடலை மட்டும் பாதிக்கும், பின்னதோ ஆன்மாவையே பாதித்துவிடும்.

- பித்தாகரஸ்

(2)
இழிந்த லட்சியத்தில் வெற்றி பெறுவதைவிட உயர்ந்த லட்சியத்தில் தோல்வியடைவது எவ்வளவோ மேல்

- ராபர்ட் ப்ரௌனிங்

(3)
நன்மை ஒரு நல்ல வைத்தியன். ஆனால் தீமை சில சமயங்களில் அதைவிட மிக நல்ல வைத்தியன்

- எமர்சன்

(4)
அகமகிழ்வு இல்லாமல் செய்யும் சேவையிலும் செய்பவருக்கும், பெறுபவருக்கும் பலனொன்றுமில்லை

- மஹாத்மா காந்தி

(5)
காரியங்களைக் கடினமாக்குவது சோம்பேறித்தனம், அதை சுலபமாக்குவது உழைப்பு

- ஃபிராங்க்ளின்



-ஆர்.ஹரிகோபி,
புது டெல்லி



# விடுகதை

| | |
|---|---|
| என்னங்க ஏன் அடிக்கடி சமையல் ரூம் பக்கம் போறீங்க? | டாக்டர் தான் சுகர் இருக்கானா அடிக்கடி செக் பண்ண சொன்னாரு. |
| தானத்தில் பெரிய தானம் எது? | மைதானம். |
| ஏன்டா நாய் படம் வரைந்து விட்டு வாய் மட்டும வரையாமல் வச்சி இருக்க? | அது வாயில்லா பிராணி சார். |
| டாக்டர் இவ்வளவு மாத்திரையும் இரண்டு நாள்ல சாப்பிட்டு முடிக்கும் என்று சொன்னிங்களே ஏன்? | இரண்டு நாட்களுக்கு அப்புறம் எக்ஸ் ஸ்ப்ரே முடிந்துவிடும். |
| கும்பகர்ணன் மாத கணக்கில் தூங்கினான் அது என்ன காலம்? | கொசுவே இல்லாத காலம். |

# ஜோக்ஸ்



ஆசிரியர் மாணவர் ஜோக்ஸ்

பத்து நாளா கிளாஸுக்கு வரதில்லை?

ஒரே இடத்துக்கு அடிக்கடி போன மரியாதை இருக்காதுனு, எங்க அப்பா சொல்லி இருக்கார். அதான் சார் வரல!

கடி ஜோக்ஸ்:

டேய் ராமு! காலில் முள் குத்தியது இது என்ன காலம்?

கஷ்டகாலம், சார்.

வள்ளுவருக்கு அதிகாரம் செய்வது என்றால் ரொம்ப பிடிக்குமா சார்?

ஏன் அப்படி?

1330 குறலையும் 133 “அதிகாரமா” எழுதியிருக்காரே அதான் கேட்டான்.

உங்க ஆசிரியர் ஒரு மாதத்தில் சுமாராய் எத்தனை பாடங்கள் நடத்துவார்?



எல்லா பாடங்களையும் “சுமாராய்” தான் நடத்துவார்!

இந்தியாவில் எங்கெல்லாம் பெட்ரோல் கிடைக்கும்?

எல்லா பெட்ரோல் பங்கிலும் கிடைக்கும், சார்!

ஏன்டா பரிட்சை எழுத வந்துட்டு தூங்குற?


கேள்விக்கு பதில் தெரியலனா சும்மா “முழிச்சு”க்கிட்டு இருக்க கூடாதுன்னு எங்க அப்பா தான் சொன்னாங்க சார்.



# பன்முகம்



## ஆரோக்கியமாக வாழ்வதற்கான உணவு முறைகள்



நம் உணவு முறையில் ஒரு நாளைக்கு இரண்டு முறை உண்பதே போதுமானது. எனினும் பழக்கத்தை மாற்ற இயலாதவர்கள் மூன்று முறை உண்ணலாம். சாப்பிட்ட சாப்பாடு வெளிவரும் வண்ணம் வயிறு முட்டச் சாப்பிடக்கூடாது. வயிற்றில் பாதியளவு உணவு, கால்பகுதி தண்ணீர், அடுத்த கால்பகுதி காற்றின் வருகைக்கு ஏற்றபடி வயிற்றில் இடம்விட்டுச் சாப்பிடுவதே மிதஉணவுப் பழக்கமாகும்.

அதிக அளவிற்கு உண்டால் நோய் வரும். ஆயுள் குறையும். எனவே எப்போதும் வயிறு புடைக்க, மூச்சு முட்ட உண்ணக்கூடாது. அளவிற்குக் குறைவாக உண்டாலும் உடலில் சக்தி குறையும். எனவே தேவையான அளவு அதாவது அதிகமாகவும் இல்லாமல், குறைவாகவும் இல்லாமல் உண்ண வேண்டும். நமக்குப் பசியே இல்லாத பொழுது கடனே என்று, மேலும் மேலும் உண்ணக்கூடாது. பசித்தே புசிக்க வேண்டும். பகலில் உணவு சிறப்பான விருந்தென்றால் இரவில் எதுவும் உண்ணக்கூடாது. மன உழைப்பு அதிகம் உள்ளவர்கள் அரிசி உணவு குறைவாகவும், கோதுமை, பால், வெண்ணெய், தேன், பாதாம் பருப்பு, முந்திரிப்பருப்பு, தக்காளிச்சாறு, ஆப்பிள், திராட்சை, மாதுளை, ஆரஞ்சு, பசலைக்கீரை, புடலங்காய், பாகற்காய், ஆகிய ஊட்டச்சத்துக்களையும், புதிய காய்கறிகளையும் நிறைய உண்ண வேண்டும்.


உடல் உழைப்பு உள்ளவர்களுக்கு, உணவு அதிகம் தேவை. இவர்கள் அரிசி, கோதுமை, நெய், தயிர், உருளைக்கிழங்கு, முட்டைக்கோசு, நிலக்கடலை, நல்லெண்ணெய் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

உடல் உழைப்பின்றி நாற்காலியில் அமர்ந்து பகல் முழுவதும் வேலை பார்ப்பவர்கள் உணவைக் குறைக்க வேண்டும். உடல் உழைப்பு இல்லாததால் உண்ணும் உணவானது உடலில் கசடுகளாகத் தங்கி துன்பம் விளைவிக்கும். அதனால் நாள் முழுதும் நாற்காலியில் அமர்ந்து வேலை செய்பவர்கள் எளிதில் செரிக்கக் கூடிய காய்கறிகள், பழங்கள் மற்றும் ஒரு கப் அளவான சாதம் எடுத்துக் கொண்டு அரை வயிற்றுக்குச் சாப்பிட்டு கால் வயிற்றுக்கு நீர் குடித்தாலே சரியானது. இது மேலும் இவர்கள் கொழுப்பு சார்ந்த எண்ணெய் பொருட்கள், பால், தயிர், வெண்ணெய், நெய், தேங்காய் போன்றவற்றில் தயாரான உணவுப் பொருட்களைக் குறைத்தால் வீணாக உடலில் கூடும் கொழுப்புகளைக் குறைத்து ஆரோக்கியமாக வாழலாம்.

மூன்று வேளையும் அதிக உணவுகளை உண்பவர்கள் தம் உடலில் தேவை இல்லாத நோய் வளரத் தானே காரணமாக அமைந்துவிடுகின்றனர். இவ்வாறு அதிகம் உண்பதால் இரைப்பையின் உறுதித்தன்மை குறைந்து தொப்பை உண்டாகிறது. வயது முதிர்ந்த பொழுது, பாதியளவே உண்பவர்கள் நீண்டகாலம் வாழ்கின்றனர்.

இதில் சர்க்கரை வியாதி உடையவர்கள் வயிறு புடைக்க உண்ணாமல் மூன்று வேளை உணவை நான்கு அல்லது ஐந்து வேளைகளில் உண்ணலாம்.

## உறவுக்குள் நெருக்கத்தை அதிகப்படுத்தும் அம்சங்கள்



குடும்ப உறுப்பினர்கள், நெருங்கிய உறவினர்கள், இளம் தம்பதியர்கள், நட்பாக பழகி குடும்ப இன்ப, துன்பங்களில் பங்கெடுக்கும் அளவுக்கு உரிமை கொண்டிருப்பவர்கள் என உறவு வட்டத்துக்குள் இருப்பவர்களுக்குள் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் மனஸ்தாபம் ஏற்படலாம். அது உறவுக்குள் விரிசலை உண்டாக்குவதற்கு வித்திடலாம். அதற்கு இடம் கொடுக்காமல் ஆரம்ப நிலையிலேயே முற்றுப்புள்ளிவைத்து, உறவுக்குள் நெருக்கத்தை அதிகரிக்க செய்வதற்கு செய்ய வேண்டிய விஷயங்கள் பற்றி பார்ப்போம்.

### உடல் ரீதியான அன்பு

தம்பதியரை பொறுத்தவரை நெருக்கம் என்பது உடல் தொடுதலால் மட்டுமே நிர்ணயிக்கப்படாது. அன்பான தொடுதல், அரவணைப்பு, கைகளை பற்றி ஆதரவு அளித்தல், அருகில் அமருதல், ஆறுதலாக பேசுதல் போன்றவை உறவை நெருக்கமாக வைத்திருக்க உதவிடும். மற்ற உறவுகளை பொறுத்தவரை அடிக்கடி உரையாடுவது, அன்பை வெளிப்படுத்துவது உறவை வலுப்படுத்தும்.

### திறந்த மனம்

தம்பதியரில் ஒருவருக்கொருவர் உணர்வுகளை பகிர்வதற்கு சிரமப்பட்டாலோ, குடும்ப உறுப்பினர்கள், உறவினர்களிடம் ஏதேனும் முக்கியமான விஷயத்தை கூட பகிர்வதற்கு தயக்கம் கொண்டாலோ உறவுக்குள் நெருக்கம் குறையும்.

தம்பதியரை பொறுத்தவரை தங்களின் ஆசைகள், கடந்த கால அனுபவங்களை பகிர்ந்து கொள்ள பாதுகாப்பான சூழல் இருந்தால்தான் உண்மையான நெருக்கம் உண்டாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அந்த சூழலை உருவாக்குவதற்கு திறந்த மனதுடன் பேச வேண்டும். தம்பதியர் மட்டுமல்ல மற்ற உறவுகளும் திறந்த மனதுடன் செயல்பட்டால்தான் உறவுக்குள் நெருக்கம் அதிகரிக்கும்.

### தகவல் தொடர்பு

சிறந்த தகவல் தொடர்பு திறன்தான் உறவுக்குள் நெருக்கத்தை பேணுவதற்கு அடிப்படையானது. அதற்காக எப்போதும் பேசிக்கொண்டே இருக்க வேண்டும் என்பதல்ல. நீண்ட நாட்கள் பேசாமல், தொடர்பு கொள்ளாமல் இருப்பதுதான் தவறானது. குடும்பத்தினரை தவிர உறவினர்களுடன் நிலையான தகவல் தொடர்பை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

வெளியூரில் வசிப்பவர்களாக இருந்தால் வாரம் ஒருமுறையோ முடியாதபட்சத்தில் மாதம் ஒருமுறையாவது அவர்களுடன் தொடர்பு கொண்டு பேசி நலம் விசாரிக்கும் பண்பை வளர்த்துக்கொள்ள வேண்டும். யார் முதலில் பேசுவது என்ற ஈகோவுக்கு இடம் கொடுக்கக்கூடாது. முதல் அடியை எடுத்து வைப்பது நீங்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் உறவுக்குள் நெருக்கம் மேம்படும்.

### பரஸ்பர மரியாதை

நம்மை மதிக்கிறார்கள், நம் பேச்சுக்கு உரிய மரியாதை கொடுக்கிறார்கள் என்ற உணர்வே உறவை வலுப்படுத்தும். உறவுக்குள் யாரேனும் உங்களுக்கு சின்ன உதவி செய்தாலும் கூட தவறாமல் 'நன்றி' கூற மறக்காதீர்கள். என்றென்றும் நன்றிக்கடன் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

எந்த விஷயமாக இருந்தாலும், அவர்களின் செயல்பாடு சிறப்பாக இருக்கும் பட்சத்தில் 'நீங்கள் சிறப்பாக செயல்படுகிறீர்கள்', 'உங்கள் யோசனை எனக்கு பிடிக்கும்' என்பன போன்ற சிறிய பாராட்டுகள் கூட உறவுக்குள் நெருக்கத்தை அதிகரிக்கும்.

### ஒரே இலக்கு

தம்பதியரை பொறுத்தவரை ஒரே கனவுகள், இலக்குகள் கொண்டு செயல்படுதல் உறவை வளர்க்கும். அதனை நோக்கி ஒருசேர திட்டமிட்டு செயல்பட வழிவகை செய்யும். உறவுக்குள் நெருக்கத்தை பலப்படுத்தும்.

## எதைச் சாப்பிட்டு எதைத் தவிர்க்க வேண்டும்?



1. தேனும், நெய்யும் சம அளவில் கலந்தால் நஞ்சாகிவிடும். எனவே இரண்டையும் சேர்த்து உண்ணக்கூடாது. இவற்றில் ஏதாவது ஒன்றை ஒரே நேரத்தில் சாப்பிடவேண்டும்.
2. வாழைப்பழத்தைத் தயிர், மோருடன் கலந்து சாப்பிடக்கூடாது. வாழைப்பழம் சாப்பிட்ட உடனும், தயிர், மோர் சாப்பிடக்கூடாது.
3. பழங்களைத் தனியேதான் சாப்பிட வேண்டும். சாப்பாட்டுடன் சேர்ந்து சாப்பிடக்கூடாது. அதன் தாதுச்சத்து உணவுடன் கலந்து பலனற்றுப் போய்விடும்.
4. வெண்ணெயுடன் காய்கறிகளைச் சேர்த்துச் சாப்பிடக்கூடாது.
5. மீன், கருவாடு சாப்பிட்ட உடன் பால், தயிர் சாப்பிடக்கூடாது. அவ்வாறு மீறி உண்டால் "வெண் மேகம்" போன்ற நோய்கள் வர வாய்ப்பு உள்ளது.
6. உடல் மெலிந்தவர்கள், புழுங்கலரிசி சாதம் சாப்பிட வேண்டும்.
7. உடல் பருத்தவர்கள் கோதுமை உணவு உண்பது நல்லது.
8. ஆஸ்துமா உள்ளவர்கள், சளி அதிகம் உள்ளவர்கள் தக்காளி, பூசணிக்காய், முள்ளங்கி ஆகியவற்றைச் சாப்பிடக்கூடாது.
9. மூல நோய் உள்ளவர்கள் முட்டை, அதிக காரம், மாமிச உணவு ஆகியவற்றை உண்ணக்கூடாது.
10. நெய்யை வெண்கலப் பாத்திரத்தில் வைத்து உபயோகிக்கக்கூடாது.
11. காலையில் வெறும் வயிற்றில் காப்பி, டீ குடிக்கக்கூடாது. ஒரு டம்ளர் தண்ணீர் குடித்துவிட்டுப் பின்னர், காப்பி, டீ போன்றவைகளைக் குடிக்கலாம்.
12. அல்சர் உள்ளவர்களும், மஞ்சள் காமாலை உள்ளவர்களும் மிளகாய், ஊறுகாய் ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது.
13. பெண்கள் வீட்டிற்குத் தூரமான நாட்களில் கத்தரிக்காய், எள், அன்னாசி, பப்பாளி ஆகியவற்றைச் சேர்த்து கொள்ளக்கூடாது.
14. தோல் நோய் உள்ளவர்கள் கத்தரிக்காய், புடலங்காய், நிலக்கடலை, மீன், கருவாடு, அதிக காரம், அதிக புளிப்பு, கொத்தவரங்காய், பீன்ஸ் ஆகியவற்றைச் சாப்பிடக்கூடாது.
15. கோதுமையை நல்லெண்ணெயுடன் சமைத்துச் சாப்பிடக்கூடாது.
16. மூட்டுவலி, வாத நோயாளிகள், அசைவ உணவுகள், முட்டை, கிழங்கு வகைகளைச் சாப்பிடக்கூடாது.

## மாரடைப்பு ஆபத்தை தடுக்கும் ரம்புட்டான் பழம்



ரம்புட்டான், ஒரு சுவையான மற்றும் சத்தான பழம். இது மருத்துவ ரீதியாகவும் பல வகைகளில் பயன்படுத்தப்படுகிறது. இந்த பழத்தின் வெளித்தோற்றம் முள் போன்று கரடுமுரடாக இருந்தாலும், உள்ளே இருக்கும் பழம் இனிப்பு மற்றும் புளிப்பு சுவை கலந்து ருசியாகவே இருக்கும். இந்த பழத்தின் தாயகம் மலேசியா மற்றும் இந்தோனேஷியா. தமிழ்நாட்டிலும் குறிப்பிட்ட பகுதிகளில் விளைகிறது. ரம்புட்டான் பழம், காயாக இருக்கும் போது பச்சை நிறத்திலும், பழுத்த பிறகு சிவப்பு அல்லது மஞ்சள் நிறமாகவும் மாறும்.


ரம்புட்டான் பழத்தில் கலோரி, வைட்டமின் சி, இரும்புச்சத்து, ஆண்டி ஆக்சிடென்ட், பொட்டாசியம், மெக்னீசியம், பாஸ்பரஸ், கார்போஹைட்ரேட், புரதம் ஆகிய சத்துக்கள் நிறைந்துள்ளன. உடல் பருமனால் அவதிப்படுவோர், ரம்புட்டானை அடிக்கடி சாப்பிடலாம். இதில் நீர்ச்சத்து அதிகம் இருப்பதால், நாக்கு வறண்டு போவதையும் தடுக்கும். இப்பழத்தில் உள்ள கார்போஹைட்ரேட், புரதம் ஆகிய சத்துக்கள், உடல் உழைப்புக்கு தேவையான ஆற்றலை அதிகரிக்க உதவும். உடல் சீரான வளர்ச்சி பெறவும் முக்கிய பங்காற்றும். ஆஸ்துமா மற்றும் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும். கண் ஆரோக்கியத்தையும் காக்கும். உடலில் கெட்ட கொழுப்பை சேரவிடாமல் தடுக்கவும் செய்யும். இதனால், மாரடைப்பு அபாயம் குறைகிறது.

ரம்புட்டான் பழத்தை அடிக்கடி சாப்பிடுவதால், தலைமுடி, தோல் மற்றும் கை, கால் நகங்கள் பளபளப்புடன் இருக்கும். எலும்பு மண்டல வளர்ச்சிக்கு உதவக்கூடிய கால்சியம், பாஸ்பரஸ் போன்ற சத்துக்களும் இதில் உள்ளன. இரண்டு ரம்புட்டான் பழங்களை உட்கொள்வதன் மூலம் தினசரி வைட்டமின் சி தேவையை பூர்த்தி செய்ய முடியும். இதில் பாஸ்பரஸ் இருப்பதால் சிறுநீரகத்தில் இருந்து தேவையற்ற கழிவுகளை வெளியேற்ற உதவும். மேலும் திசுக்கள் மற்றும் உடல் உயிரணுக்களின் வளர்ச்சி, புத்துணர்ச்சி மற்றும் பராமரிப்பு போன்ற செயல்களில் இந்த பழம் முக்கிய பங்கு வகிக்கிறது.

ரம்புட்டானில் கலோரிகள் குறைவாகவும், நார்ச்சத்து அதிகமாகவும் உள்ளது. அதனால் நீண்ட நேரம் வயிறு நிரம்பிய உணர்வைத் தரும். அதிகமாக சாப்பிட தோன்றும் எண்ணத்தையும் குறைத்துவிடும். இந்த பழத்தில் உள்ள கரையக்கூடிய நார்ச்சத்து தண்ணீரில் கரைந்து குடலில் ஜெல் போன்ற ஒரு பொருளை உருவாக்குகிறது. இந்த ஜெல் போன்ற பொருள் செரிமானத்தையும் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சுவதையும் மெதுவாக்க உதவுகிறது, இதனால் பசி உணர்வு குறைகிறது.

இந்த பழம், பல ஆரோக்கிய நன்மைகளைக் கொண்டிருந்தாலும், உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள், சர்க்கரை நோயாளிகள், கர்ப்பிணிகள் மருத்துவரின் ஆலோசனைப்படி தான் சாப்பிட வேண்டும். வழுவழுப்பான இந்த பழத்தை குழந்தைகள் சாப்பிடும் பொழுது தொண்டையில் சிக்கிக் கொள்வதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. இதனை கருத்தில் கொண்டு கவனத்துடன் குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும்.

## வாக்குவம் கிளீனரை வாங்கும்போது கவனிக்க வேண்டியவை...



வீடுகளை சுத்தப்படுத்தும் வாக்குவம் கிளீனர்களை வாங்குவதாக இருந்தால், ஒருசில விஷயங்களை கவனத்தில் கொண்டு வாங்க வேண்டும். குறிப்பாக உங்கள் வீட்டுத் தேவைகளை முதலில் கருத்தில் கொள்ள வேண்டும். குப்பையை உறிஞ்சும் திறன், உங்கள் வீட்டின் தளம் (டைல்ஸ், தரைவிரிப்புகள், மரம்) போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு கிளீனரின் வகையை (கம்பியில்லா, தரைவிரிப்புக்கான, ரோபோடிக்) தீர்மானிக்க வேண்டும். கூடுதலாக, சக்கரங்கள், நீளமான வயர், குறைந்த சத்தம் மற்றும் நீடித்து உழைக்கும் தன்மையுடன் கூடிய சக்கரங்கள் போன்ற வசதிகளையும் கவனிக்க வேண்டும். அப்படி நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டியவை:

*** தரை வகைகள்**

உங்கள் வீட்டின் தரைப்பகுதியானது, எப்படி கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை பொறுத்துதான், வாக்குவம் கிளீனரை தேர்வு செய்யமுடியும். தரைவிரிப்புகள், டைல்ஸ், மரம் சார்ந்த தரை வேலைப்பாடுகள் என மாறக்கூடிய கட்டமைப்புகளுக்கு ஏற்ப, அவற்றை சுத்தமாக்கக்கூடிய வாக்குவம் கிளீனரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

*** பயன்பாட்டு வகைகள்**

வயர் இணைப்பு கொண்ட வாக்குவம் கிளீனர், வயர் இல்லாத கையடக்க கிளீனர், தூசியை மட்டும் சுத்தம் செய்யும் கிளீனர், தூசியுடன் சேர்த்து அசுத்த நீரையும் உறிஞ்சி எடுக்கும் கிளீனர் என பல வகைகள் இருக்கின்றன. சமீபகாலமாக ரோபோட்டிக் வகையிலான, தானாக நகரும் வாக்குவம் கிளீனர்களும் உள்ளன. நம்முடைய தேவையும், வீட்டின் கட்டமைப்புதான், வாக்குவம் கிளீனரை தீர்மானிக்கின்றன.

*** உறிஞ்சி திறன்**

750 வாட்ஸ், 1000 வாட்ஸ், 1250 வாட்ஸ் என தூசியையும், அசுத்த தண்ணீரையும் உறிஞ்சக்கூடிய மோட்டார்களும், ஒவ்வொரு வாக்குவம் கிளீனருக்கு ஏற்ப மாறுபடும். அதனால், நீங்கள் தேர்ந்தெடுக்கக்கூடிய வாக்குவம் கிளீனர்கள், அதிகமாக உறிஞ்சும் திறனை பெற்றிருக்க வேண்டும்.

*** சுலபமான பயன்பாடு**

வாக்குவம் கிளீனர்களை கொண்டு, வீட்டின் எல்லா அறைகளையும் சுத்தம் செய்ய இருந்தால் சில விஷயங்களை கவனித்து வாங்க வேண்டும். அதாவது, சக்கரங்கள் இருக்கக்கூடியதாக, நீளமான மற்றும் பல்வேறு வடிவங்களை கொண்ட உறிஞ்சு குழாய் இருக்கக்கூடிய வாக்கும் கிளீனரை தேர்வு செய்வதன் மூலம் விரும்பிய இடங்களில் சுலபமாக நகர்த்தலாம், சுத்தம் செய்யும் பணிகளை மேற்கொள்ளலாம். மேலும் சிறு குழந்தைகள் இருக்கும் வீடுகளாக இருந்தால், சத்தமில்லாத வாக்குவம் கிளீனர்களை தேர்ந்தெடுப்பது நல்லது.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## பொன்னப்ப நாடார் திருவுருவ சிலை



நாகர்கோவில் வேப்பமூடு சந்திப்பில் குமரி கோமேதகம் பொன்னப்ப நாடார் திருவுருவ சிலையை முதல்வர் திறந்து வைக்கிறார். விழா முன்னேற்பாடு பணிகளை மேயர் மகேஷ் ஆய்வு செய்தார்.

## தில்லையாடி வள்ளியம்மை சிலைக்கு மாலை



மயிலாடுதுறை மாவட்டம் தில்லையாடி வள்ளியம்மை மணிமண்டபத்தில் வள்ளியம்மை சிலைக்கு நேற்று கலெக்டர் ஸ்ரீகாந்த் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

## சிவப்பு புத்தக வாசிப்பு தின பேரவை கூட்டம்



நாகர்கோவில் மாநகர சிபிஎம் சார்பில் சிவப்பு புத்தக வாசிப்பு தின பேரவை கூட்டம் நடந்தது.

## தெருமுனைப் பிரசாரம்



கோவை குனியமுத்தூரில் நடந்த தெருமுனைப் பிரசாரத்தில் முன்னாள் அமைச்சர் வேலுமணி வாக்கு சேகரித்தார்.

## தமிழ்நாடு முத்தமிழ்ச் சங்கத்தின் விருது வழங்கும் விழா



தமிழ்நாடு முத்தமிழ்ச் சங்கத்தின் சார்பில், "எழுத்தாணியின் அரியாசனம் 2025" விருது வழங்கும் விழா 21.02.2026 அன்று ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வெகு சிறப்பாகநடைபெற்றது. செய்தி: குடந்தை பரிபூரணன்.

## சக்திவேல் முருகன் கோவிலில் கும்பாபிஷேகம்



மன்னார்குடி காளவாய்க்கரை சக்திவேல் முருகன் கோவிலில் நேற்று கும்பாபிஷேகம் நடந்தது.

## முதல்வர் ஸ்டாலினுக்கு செங்கோல்



மதுரையில் நடந்த தென் மண்டல வாக்குச்சாவடிக் குழு உறுப்பினர்களுக்கான 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' பயிற்சி மாநாட்டில் முதல்வர் ஸ்டாலினுக்கு செங்கோல் வழங்கப்பட்டது.

## பட்டினி போராட்டம்



நாகர்கோவில் அறிஞர் அண்ணா விளையாட்டரங்கம் முன் அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர் அலுவலர் கூட்டமைப்பு சார்பில் பட்டினி போராட்டம் நடந்தது.

## மோடி முகாம்



கோவை சுண்டபாளையம் பகுதியில் மோடி முகாம் நிகழ்வை பாஜக மாநில துணைத் தலைவர் கே.பி. ராமலிங்கம், வானதிசீனிவாசன் எம்எல்ஏ துவக்கி வைத்தனர்.

## மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



திருவள்ளூரில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் நாசர், கலெக்டர் பிரதாப் வழங்கினர்.

## பட்டிமன்ற உலகில் 50 ஆண்டுகளை நிறைவு




பட்டிமன்ற உலகில் 50 ஆண்டுகளை நிறைவு செய்து பொன்விழா கண்டுள்ள திண்டுக்கல் லியோனிக்கு திருச்சி தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட செயலாளர்-அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி கணையாழி அணிவித்து கவுரவித்தார்.

## திமுக ஆலோசனைக் கூட்டம்



சென்னை தெற்கு மாவட்ட திமுக ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.

## போதை ஒழிப்பு கண்டன ஆர்ப்பாட்டம்



தேனி மாவட்டத்தில் பாஜக இளைஞர் அணி சார்பில் போதை ஒழிப்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது

## மோடி கபடி லீக் போட்டி



நாமகிரிப்பேட்டையில் பா.ஜ.க பழங்குடியினர் அணியின் சார்பாக நடந்த 'மோடி கபடி லீக்' போட்டியை இளைஞர் அணித் தலைவர் சூர்யா துவக்கி வைத்தார்.

## யாகசாலை பூஜை



பணகுடியில் ராமலிங்கசுவாமி உடனுறை சிவகாமி அம்பாள் ஸ்ரீ நம்பிசிங்க பெருமாள் திருக்கோவிலில் நடந்த யாகசாலை பூஜையில் பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் பங்கேற்றார்.

## வீரமங்கை வேலுநாச்சியார் திருவுருவச் சிலைக்கு துணை ஜனாதிபதி மாலை



சிவகங்கையில் வீரமங்கை வேலுநாச்சியார் திருவுருவச் சிலைக்கு துணை ஜனாதிபதி சிபி ராதாகிருஷ்ணன், பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## ரவுசு மணி

பல பேர்களை வைத்து பேசி முடிவுக்கு வராத பிரச்சனைகள் பணத்தை வைத்து பேசும்போது முடிவுக்கு வருகின்றன



ராஜகோபாலன்.J
பெங்களூரு

## குடமுழுக்கு பெரு விழா



ஈரோடு திண்டல், அருள்மிகு வேலாயுத சுவாமி திருக்கோயிலில் நேற்று நடந்த குடமுழுக்கு பெரு விழாவில் அமைச்சர்கள் முத்துசாமி, சேகர்பாபு கலந்து கொண்டனர்.

## தெப்போத் ஸவம்



ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் (ஸ்ரீராமர்) தெப்போத் ஸவம் குளக்கரை புறப்பாடு தெப்பத்திற் கெழுந்தருளல்

## பிரம்மோத்சவம்



துவஜாரோஹனம் @ அப்பர் அஹோபலம் 22.02.2026
அஹோபலம் பிரம்மோத்சவம் - 2026

## மாசிமகத் திருவிழா கொடியேற்றம்



கும்பகோணம் சக்கர பாணி சுவாமி கோவிலில் நேற்று மாசிமகத் திருவிழா கொடியேற்றம் நடந்தது.

# சுற்றுலா: புலிகாட் (பழவேற்காடு) சுற்றுலா: தவறவிடக்கூடாத முக்கிய இடங்கள்!

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் டச்சு மக்கள் வியாபாரம் செய்வதற்காக இந்தியா வந்தடைந்தனர். பின்னர் அவர்கள் வியாபாரத்தை மேம்படுத்துவதற்காக டச்சுகிழக்கிந்தியாகம்பெனிஒன்றை இந்தியாவில் நிறுவினார்கள். டச்சு மக்களும் நிறைய பேர் வந்து இந்தியாவில் குடிப்பெயர ஆரம்பித்தார்கள். இதனையடுத்து பிரிட்டிஷ் அரசு இந்தியாவை ஆட்சி செய்ய ஆரம்பித்தது.



அந்தச் சமயத்தில் ஃப்ரென்ச் மக்கள் பாண்டிச்சேரியிலும், போர்ச்சுகீஸ் மக்கள் கோவாவிலும், டச்சு மக்கள் தரங்கம்பாடியிலும் இடங்களைப்பிரித்து வாழ்ந்தார்கள். அதன் பின்னர் டச்சு அரசு கோரமண்டல், கோல்கோண்டா, மச்சிலிப்பட்டினம் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய இடங்களைத் தன் வசம் ஆக்கினார்கள். அப்போதுதான் புலிகாட் டச்சு கட்டுப்பாட்டில் வந்தது.

அந்தக் காலக்கட்டத்தில் போரின்போதுநிறையகோட்டைகள் சேதமடைந்தன. அவற்றை இன்னும் இந்திய அரசும் டச்சு அரசும் மறுக்கட்டுமானம் செய்யும் முனைப்பில் இருந்து வருகின்றனர். அந்த இடங்கள் பார்வையாளர்களுக்காக திறந்து வைக்கப்படுகின்றன. அந்தவகையில் புலிகாட்டில் நாம் சுற்றிப்பார்க்க வேண்டிய இடங்களைப் பற்றி பார்ப்போம்.



புலிகாட் ஏரி: இது மிகவும் புகழ்பெற்ற ஏரி. இதனை பழவேற்காடு ஏரி என்றும் அழைப்பார்கள். அரானி ஆறு, கலங்கி ஆறு, ஸ்வர்னமுகி ஆறு ஆகிய மூன்றும் இணைந்ததுதான் புலிகாட் ஏரி. இங்கு ஏராளமான மீன்கள், பறவை வகைகள் மற்றும் ஊர்வன வகைகளைப் பார்க்கலாம்.

புலிகாட் பறவைகள் சரணாலயம்:

புலிகாட் சரணாலயம் மொத்தம் 481 கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்கு பலவகையான இறால், பாலிசீட் புழுக்கள், அதிகப்படியானபறவைகள் ஆகியவற்றைப்பார்க்கலாம். மேலும் பூநாரை, நீர்க்கோழி வகைகள், கடல் காளைகள், பெரியவகைகொக்குகள், நிறைய வகையான வாத்துகள் ஆகியவற்றையும் பார்க்கலாம். இங்கு நீங்கள் வாரம் முழுவதும் காலை ஆறு மணி முதல் மாலை ஆறுமணிவரை சுற்றிப்பார்க்கலாம். அனுமதிகட்டணம் எதுவும் இல்லை.

கோட்டை ஜெல்ட்ரியா:

இந்தக் கோட்டை டச்சு அரசால் 1613ம் ஆண்டு கட்டப்பட்டது. பல ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு போரினால் ஜெல்ட்ரியா கோட்டை சேதமானது. இது ஒரு வரலாற்று சிறப்புமிக்க இடமாக இருந்து வருகிறது. ஜெல்ட்ரியா கோட்டை அனைவரும் கட்டாயம் சென்று பார்க்க வேண்டிய ஓர் இடம்.

பாலிஸ்வரர் கோயில்:

புலிகாட்டிற்கு 9 கிலோமீட்டர் தொலைவில் திருபாலைவனத்தில் உள்ள ஒரு சிவன் கோயில். இது சோழர்களால் கஜப்ருஷ்த கட்டடக் கலையில் கட்டப்பட்டது. இங்கு காலை 7 மணியிலிருந்து 11 மணி வரையே செல்ல முடியும்.

ஸ்ரீ ஆதி நாராயண கோயில்:

இது விஜயநகர பேரரசால் 13வது நூற்றாண்டில் கட்டப்பட்டது. இது ஒரு சிறப்புமிக்க விஷ்ணு கோயில். மாலை 5 மணி முதல் 7 வரை மட்டுமே தரிசனம்.

ஜதராயர் கோயில்:

இக்கோயில் ஐநூறு வருடங்கள் பழைமையான ஒரு சிவன் கோயில். புலிகாட்டிலிருந்து இந்தக் கோயிலுக்குச் செல்ல ஒரு மணி நேரமாகும்.

சிந்தா மாந்தீஷ்வரர் கோவில்:

கருங்காலி என்ற கிராமத்தில் உள்ள ஒரு சிவன் கோயில். இது கடலுக்கும் காட்டிற்கும் இடையில் உள்ள ஒரு கோயில். சிந்தா மாந்தீஷ்வரர் கோயில் 1500 ஆண்டுகளுக்கு முன்னர் சோழ அரசால் கட்டப்பட்டது என அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

டச்சு சிமிட்டரி:

புலிகாட் சுற்றிப்பார்க்க செல்பவர்கள் நிச்சயம் இந்த இடத்திற்குச் சென்று பார்க்க வேண்டும். இது டச்சு அரசின் தொல்லியல் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இது 1622ம் ஆண்டிலிருந்து புகழ்வாய்ந்த ஒரு இடமாக இருந்து வருகிறது. இங்கு வாரத்தில் ஏழு நாட்களும் காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை செல்லலாம்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### பஞ்சாப் நேஷனல் வங்கியில் 5,138 அப்ரண்டிஸ் பயிற்சி




அரசு வங்கிகளில் ஒன்றான பஞ்சாப் நேஷனல் வங்கி (PNB) 5 ஆயிரத்து 138(தொழில் பழகுநர்) பயிற்சி பணியிடங்களை நிரப்பவுள்ளது. இதற்கான அறிவிப்பு (Advt No: HRD / Apprentice / 202526) வெளியிடப்பட்டுள்ளது. கல்வித் தகுதி - ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு (Degree) முடித்திருக்க வேண்டும். ஜனவரி 1, 2026 தேதி யின்படி வயதுவரம்பு மற்றும் கல்வித் தகுதி ஆகியவை கணக்கிடப்படும்.

வயது வரம்பு - குறைந்தபட்சம் 20 வயது முதல் அதிகபட்சம் 28 வயது வரை. எஸ்.சி./எஸ்.டி 5 ஆண்டுகள், ஓ.பி.சி 3 ஆண்டுகள், மாற்றுத் திறனாளிகள் 10 ஆண்டுகள் என தளர்ச்சி நிர்ணயிக்கப்படுகிறது. தேர்வு முறை - ஆன்லைன் வழி எழுத்து தேர்வு, நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தகுதியானவர்கள் அப்ரண்டீஸ் பயிற்சிக்கு தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பக் கட்டணம் - பொது, ஓ.பி.சி பிரிவினர்களுக்கு ரூ.800. எஸ்.சி., எஸ்.டி., முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், பெண்கள் ஆகியோருக்கு ரூ.200 கட்டணம்.

விண்ணப்பிக்கும் முறை: விண்ணப் பதாரர்கள் கல்வித் தகுதி பற்றி விபரங்களை www.apprenticeship.india.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும்.

எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் அடிப்படை யில் தகுதியானவர்களைத் தேர்வு செய்வார்கள். பாடப்பிரிவுகள், தேர்வுக்கான பாடத்திட்டம், கட்டணம் உள்ளிட்ட முழு விபரங்களுக்கு www.pnb.bank.in.Recruitment என்ற இணையதளத்தைப் பார்வையிட்டு ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க லாம். விண்ணப்பிப்பதற்கான கடைசித் தேதி பிப்ரவரி 24 ஆகும்.

## 800க்கும் மேற்பட்ட விசைப்படகுகள்

**ராமேஸ்வரம், பிப்.23:**

ராமேசுவரத்தில் இருந்து கடந்த 18-ந் தேதி 3 விசைப்படகுகளில் மீன்பிடிக்க சென்ற 18 மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர். அதேபோல் மண்டபத்தை சேர்ந்த ஒரு படகில் மீன்பிடிக்க சென்ற 4 மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கைது செய்தனர். இந்த 22 மீனவர்களும் தற்போது இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டு உள்ளனர். மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிக்க மத்திய-மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவ அமைப்புகள் கோரிக்கை விடுத்து உள்ளன.

இந்நிலையில் வாழ்வாதாரத்திற்காக மீன்பிடிக்க செல்லும் மீனவர்களை தொடர்ந்து கைது செய்து வரும் இலங்கை கடற்படையை கண்டித்து ராமேஸ்வரத்தில் விசைப்படகுகள் இன்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்லவில்லை. 800க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடற்கரையில் நிறுத்தப்பட்டுள்ளது.

## காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயில் மாசித் திருவிழா: இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது

**காஞ்சிபுரம், பிப். 23:**

மகாசக்தி பீடங்களில் ஒன்றான காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயிலில் ஆண்டு தோறும் மாசித் திருவிழா சிறப்பாக நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான மாசித்திருவிழா தொடக்க நிகழ்வையொட்டி காமாட்சி அம்மன் உருவம் பொறித்த கொடிப் பட்டம் ஆலயத்தின் சுற்றுப்புற வளாகத்தில் பல்லக்கில் வைத்து கோவில் ஸ்தானிகர்களால் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து திருக்கோவில் அலங்கார மண்டபத்தில் இருந்து லட்சுமி சரஸ்வதி தேவியருடன் உற்சவர் காமாட்சி அம்மன் கொடிமரம் அருகே உள்ள மண்டபத்திற்கு எழுந்தருளினார். சிறப்பு தீபாராதனைகளும் நடைபெற்றன. பின்னர் காமாட்சி அம்மன் உருவம் பொறித்த கொடியானது கோவில் தங்க கொடிமரத்தில் ஏற்றப்பட்டு கொடிமரத்துக்கு சிறப்பு தீபாராதனைகள் நடைபெற்றன. கொடியேற்றத்தின் போது வண்ண மலர்கள் தூவப்பட்டன. வாண வேடிக்கைகளும் நடைபெற்றன. இதைத் தொடர்ந்து வெள்ளி ரிஷப வாகனத்தில் அம்மன் ராஜ வீதிகளில் வீதியுலா வந்தார். கொடியேற்ற விழா காஞ்சிபுரம் சங்கர மடத்தின் இளைய பீடாதிபதி சத்திய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது. மாசித் திருவிழாவையொட்டி, நாள்தோறும் காலை, மாலை வெவ்வேறு வாகனங்களில் அம்மன் எழுந்தருளி நகரின் ராஜ வீதிகளில் வீதியுலா வரவுள்ளனர்.

விழாவில் காஞ்சிபுரம் சங்கர மடத்தின் மூத்த மேலாளர் ந.சுந்தரேச ஐயர், மேலாளர் அரவிந்த் சுப்பிரமணியன், காஞ்சி காமாட்சி சங்கரமட வரவேற்பு குழு ஒருங்கிணைப்பாளர் காஞ்சி. ஜீவானந்தம் உள்பட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான வெள்ளித் தேரோட்டம் மார்ச் 1 ஆம் தேதி நடைபெறுகிறது. மார்ச் 4- ஆம் தேதி விஸ்வரூப தரிசனமும், அதனைத் தொடர்ந்து விடையாற்றி உற்சவமும் நடைபெறுகிறது. விழாவிற்கான ஏற்பாடுகளை கோயில் ஸ்தானிகர்கள் சங்கர மடத்தின் நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

## ஊட்டி மலை ரயில் கட்டணம் உயர்வு

**மேட்டுப்பாளையம், பிப்.23:**

ஊட்டி மலைரெயில் கட்டணம் திடீரென உயர்த்தப்பட்டுள்ளது.



கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் இருந்து நீலகிரி மாவட்டம் ஊட்டிக்கு மலை ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த ரெயில்களின் சேவை 3 வகையாக நடைமுறையில் உள்ளது. அதன்படி தினமும் 8 பயணங்கள் கொண்ட சாதாரண கட்டண சேவை, கோடை விடுமுறை, பிற விடுமுறைகள், வார இறுதிநாட்கள் மற்றும் பண்டிகைகளில் இயக்கப்படும் சிறப்பு ரெயில் சேவை, திருமணம், குடும்ப விழா, நிறுவன விழா மற்றும் சந்திப்பு நிகழ்ச்சிக்காக முழு ரெயிலையும் தனியாக வாடகைக்கு எடுப்பது (சார்ட்டர்டு சிறப்பு ரெயில்) என்று மூன்று வகைகளில் இயக்கப்பட்டு வருகிறது. ஊட்டி மலை ரெயிலில் சாதாரண கட்டண ரெயில்களில் பயணிக்க முதல் வகுப்பில் மேட்டுப்பாளையம் முதல் குன்னூருக்கு ரூ.500, 2-வது வகுப்பில் பயணிக்க ரூ.250 கட்டணம் வீதம் வசூலிக்கப்படுகிறது. குன்னூர்-ஊட்டி இடையே முதல் வகுப்பில் பயணிக்க ரூ.290, 2-வது வகுப்பில் பயணிக்க ரூ.150 மற்றும் மேட்டுப்பாளையம்-ஊட்டி இடையே முதல் வகுப்பு கட்டணம் ரூ.1000, 2-வது வகுப்பு கட்டணம் ரூ.550 வீதம் வசூலிக்கப்படுகிறது. இந்த நிலையில் அந்த ரெயில்களின் கட்டணம் தற்போது 5 சதவீதம் உயர்த்தப்படுவதாக ரெயில்வே நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து தென்னக ரெயில்வே வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:-

ஊட்டி மலை ரெயிலில் சாதாரண கட்டணம் கடைசியாக 2020-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ந்தேதி உயர்த்தப்பட்டது. அதன்பிறகு அதிகரிக்கப்படவில்லை. ஆனால் மேட்டுப்பாளையம்-குன்னூர், குன்னூர்-ஊட்டி மற்றும் மேட்டுப்பாளையம்-ஊட்டி இடையேயான மலை ரெயிலின் இயக்க செலவுகள், பராமரிப்பு செலவு மற்றும் பணியாளர்களின் ஊதியம் ஆகியவை கணிசமாக உயர்ந்து உள்ளன. இதனை ஈடுகட்டும் வகையிலும், வருவாய் இழப்பை சமாளிக்கும் வகையிலும் நீலகிரி மலை ரெயில் பிரிவில் சாதாரண ரெயில்களின் அடிப்படை கட்டணம் 5 சதவீதம் உயர்த்தப்படுகிறது.

மேலும் இந்த புதிய கட்டண நடைமுறை இன்று முதல் அமலுக்கு வருகிறது. அதன்படி சாதாரண ரெயில்களுக்கான அடிப்படை கட்டணம் மட்டுமே 5 சதவீதம் உயர்த்தப்படும். மற்றபடி முன்பதிவு கட்டணம், கூடுதல் கட்டணங்கள் போன்றவற்றில் எந்த மாற்றமும் இல்லை. மேலும் ஏற்கனவே பழைய கட்டணத்தில் வழங்கப்பட்ட பயணச்சீட்டுகள் செல்லுபடியாகும். அதற்கு கூடுதல் கட்டண வித்தியாசம் வசூலிக்கப்படாது.

## புத்தொழில் முனைவோர்களுக்கு மானியம்: அமைச்சர் வழங்கினார்

**சென்னை, பிப்.23:**


சென்னை நந்தனம் StartUP-TN நிறுவனத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், புத்தொழில்முனைவோர்களுக்கு ரூ7.21 கோடி மதிப்பில் மானியங்களையும் நிதியுதவிகளையும் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் 23 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு ரூ.2 கோடியே 90 லட்சம் ஆதார நிதியும், கிராம் தோறும் புத்தொழில் திட்டத்தின் கீழ் கிராமப் பகுதிகளில் இயங்கும் 62 புத்தொழில் முனைவோருக்கு தலா ரூ.1 லட்சம் வீதம் ரூ.62 லட்சம் மானியத்திற்கான ஒப்புதல் ஆணைகளும், தொழில்நுட்ப பரிமாற்ற நிதி உதவி திட்டத்தின் கீழ் 5 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு ரூ.2 லட்சத்து 44 ஆயிரத்திற்கான நிதி ஒப்புதல் ஆணைகளும்,

தொழில் வளர் காப்பக நிதி உதவி திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் 2 மற்றும் 3 ம் நிலை நகரங்களில் 39 தொழில் வளர் காப்பகங்கள் அமைக்க தலா ரூ.7 லட்சத்து 50 ஆயிரம் வீதம் ரூ.2 கோடியே 92 லட்சத்து 50 ஆயிரம் நிதி ஒப்புதல் ஆணைகளும், தொழில் வளர் காப்பக வளர்ச்சி திட்டத்தின் கீழ் 15 தொழில் வளர் காப்பக மேம்பாட்டிற்காக தலா ரூ.5 லட்சம் வீதம் ரூ. 75 லட்சத்திற்கான நிதி ஒப்புதல் ஆணைகளும் என 144 புத்தொழில் முனைவோருக்கு ரூ. 7 கோடியே 21 லட்சம் மானியம் மற்றும் நிதி வழங்கப்பட்டது.

ஆதாரநிதி: கடந்த 5 ஆண்டுகளில் 238 ஸ்டார்ட் அப் நிறுவனங்களில், ரூ. 82 கோடியே 99 லட்சம் தமிழக அரசு முதலீடு செய்துள்ளது.

டான்பண்ட் இணைப்புத் தளம் மூலம் 43 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு ரூ. 199 கோடி தனியாரிடமிருந்து முதலீடுகள் பெறப்பட்டுள்ளது. "கிராமம்தோறும்புத்தொழில்" திட்டத்தின் கீழ் 62 புத்தொழில் குழுக்களுக்கு தலா ரூ.1லட்சம் வீதம் ரூ.62 லட்சம் மானியத்திற்கான ஒப்புதல் ஆணைகள் வழங்கி இந்த திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 2 மற்றும் 3ம் நிலை நகரங்களில் சென்னை, மதுரை. ஈரோடு, திருநெல்வேலி, ஓசூர், சேலம், கடலூர், தஞ்சாவூர், கோவை, திருச்சி, தூத்துக்குடி ஆகிய 11 நகரங்களில் வட்டாரப் புத்தொழில் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த நகரங்களில் Pre Incubation Centres அமைக்க 87 தொழில் வளர் காப்பகங்களுக்கு ரூ. 6 கோடியே 52 லட்சமும், வழங்கப்பட்டுள்ளது.

## பிப். 23, 24-ல் மழைக்கு வாய்ப்பு!



**சென்னை, பிப்.23:**

இன்று (பிப். 23) மற்றும் நாளை (பிப். 24) மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தென் கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்துள்ளது. புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவியது.

எனினும் தற்போது, தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இன்று (பிப். 23) மற்றும் நாளை மறுநாள் (பிப். 24) மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலகத் தாய்மொழி நாளையொட்டி தமிழ்த்தாய் திருவுருவப் படத்திற்கு அமைச்சர்கள் மரியாதை

**சென்னை, பிப்.23:**

உலக தாய்மொழி நாளை முன்னிட்டு தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் ஆவடியில் உள்ள மகாலட்சுமி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், சா.மு.நாசர் ஆகியோர் தமிழ்த்தாய் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதைச் செலுத்தினர். அப்போது அவர்கள் கூறியதாவது:

உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21 ஆம் நாளான்று உலக தாய்மொழி நாள் கொண்டாடப்படுகிறது. 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் உலகத் தாய்மொழி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டார்கள். அதேபோல 2025 ஆம் ஆண்டு நடைப்பெற்றது. அதே நேரத்தில் 2025ஆம் ஆண்டு ஒவ்வொரு மாவட்ட கலெக்டர் அலுவலகத்திலும், பள்ளி, கல்லூரிகளிலும் இந்த நாள் இந்த உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்படுகிறது. உலகில்பயன்பாட்டில் உள்ள பலமொழிகளை மேம்படுத்துவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் மொழி மற்றும் பண்பாடு பன்மையை காக்கும் விதத்தில் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகிறது என்று தேசபக்தி பாடல்களை பாடிய நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை இசைத்தமிழ் என்னும் நூலில் தாய்மொழி என்னும் தலைப்பில் எழுதியிருக்கும் கட்டுரையில் தாய்மொழி என்றால் தாயார் புகட்டிய மொழி. தாயின் உடலில் இருந்துதான் உடல் உண்டாகிற்று அவள் ஊட்டிய அமுதத்தில் இருந்துதான் உடல் வளர்ந்தது. அவள் சொன்ன சொற்களில் இருந்து நமக்கு அறிவு ஆரம்பித்தது. பின்னால் நாம் எத்தனை மொழிகளை படித்தாலும் அவற்றில் உள்ள அறிவுகளை தாய்மொழியில் சொன்ன பிற்பாடு தான் புரிந்து கொண்டோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# அமெரிக்க-இந்திய வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்வதற்கான பேச்சுவார்த்தை தேதி பின்னர் அறிவிக்கப்படும்: மத்திய அரசு

**புதுடெல்லி, பிப்.23:**

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்டு டிரம்ப், பதவியேற்ற பின்னர் சீனா, கனடா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளுக்கும் கடந்த ஆண்டில் கூடுதல் வரிகளை விதித்து உத்தரவிட்டார். இதில், இந்திய பொருட்களுக்கு 10 சதவீதம் என இருந்த வரியை 25 சதவீதம் என்றும் பின்னர், கூடுதலாக 25 சதவீத அபராத வரி என கூறி மொத்தம் 50 சதவீதம் என்றும் உயர்த்தினார்.

ரஷிய எண்ணெய்யை இந்தியா வாங்குகிறது என்றும், அதனால், போர் தளவாடங்கள் வாங்க அந்த நிதியை ரஷியா பயன்படுத்தி கொள்கிறது என குற்றம் சாட்டியும் இந்தியாவுக்கான வரியை அமெரிக்கா அதிகரித்தது. இதனால், இந்திய ஏற்றுமதி சந்தை கடுமையான பாதிப்பை சந்தித்தது.

இந்நிலையில், அமெரிக்கா மற்றும் இந்தியா இடையே வரி குறைப்புக்கான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடந்தது. அதில், வரியை குறைப்பது தொடர்பான அறிவிப்பும் இருக்கும் என கூறப்பட்டது.

இதனை தொடர்ந்து, இந்தியாவுக்கான இறக்குமதி வரி 18 சதவீதம் ஆக குறைக்கப்பட்டு உள்ளது என்று டிரம்ப் கூறினார். ரஷிய எண்ணெய்யை இந்தியா வாங்காது என உறுதி அளித்து உள்ளது என கூறி இந்த வரி குறைப்பை டிரம்ப் அறிவித்து உள்ளார். எனினும், இந்த ஒப்பந்தம் இன்னும் இறுதி செய்யப்படாத நிலையில் உள்ளது.

இந்த நிலையில், அமெரிக்கா மற்றும் இந்தியா இடையே வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்வதற்கான பேச்சுவார்த்தை தேதி பின்னர் அறிவிக்கப்படும் என மத்திய அரசு அறிவித்து உள்ளது. இதுபற்றி மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்ட தகவலில், அமெரிக்க-இந்திய வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்வதற்கானபேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக இந்தியாவில் இருந்து தலைவர் மற்றும் அவருடைய குழுவினர் அந்நாட்டுக்கு செல்வதற்கான தேதி முடிவு செய்யப்படும்.

சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள் பற்றி ஆய்வு செய்து, பின்னர் இரு தரப்பிலும் வசதியான ஒரு தேதியை முடிவு செய்து பேச்சுவார்த்தைக்கான கூட்டம் நடைபெறும் என தெரிவித்து உள்ளது.

ஏனெனில், டிரம்ப்பின் வரி விதிப்புகளுக்கு அமெரிக்காவிலேயே எதிர்ப்பு கிளம்பியது. சில வணிகநிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதுதொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது. அதில், டிரம்ப்பின் வரி விதிப்புகள் செல்லாது என நீதிபதிகள் தங்களுடைய தீர்ப்பில் தெரிவித்தனர். எனினும், இரவோடு இரவாக இந்த வரியை 10 சதவீதத்தில் இருந்து 15 சதவீதம் ஆக உயர்த்தி, டிரம்ப் நேற்றிரவு அறிவிப்பு வெளியிட்டு உள்ளார்.

சுப்ரீம் கோர்ட்டு ஒருபுறம் இருந்தபோதிலும், வரிவிதிப்பதற்கு என ஜனாதிபதி டிரம்ப்புக்கு பிற பரவலான அதிகாரங்கள் உள்ளன. இதன்படி வர்த்தக சட்டம் 1974, பிரிவு 122-ன் கீழ் 10 சதவீத வரி விதிப்புக்கான உத்தரவில் டிரம்ப் கையெழுத்திட்டு உள்ளார். இந்த சட்ட பிரிவின்படி, கட்டணம் செலுத்துதலில் ஏற்படும் பற்றாக்குறையை ஈடுகட்டும் வகையில் 150 நாட்களுக்கு இறக்குமதி வரியை உயர்த்த டிரம்புக்கு (அதிகபட்சம் 15 சதவீதம்) அதிகாரம் உள்ளது. இந்த அடிப்படையில், அவர் வரியை 15 சதவீதம் என்ற அளவுக்கு உயர்த்தி அறிவித்து இருக்கிறார்.

அடுத்தடுத்த இந்த நடைமுறைகளால், அமெரிக்க-இந்திய வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்வதற்கான பேச்சுவார்த்தை தொடர்பான தேதி பின்னர் அறிவிக்கப்படும் என மத்திய அரசு தெரிவித்து உள்ளது.

## க்ரைம் கார்னர்

### சென்னை தனியார் நிறுவன பெண் ஊழியருக்கு பார்சலில் வந்த மனித மண்டை ஓடு, எலும்புகள்

**சென்னை, பிப்.23:**

பாரிமுனையில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் பெண் ஒருவருக்கு, அடை யாளம் தெரியாத நபர் கொடுத் தனுப்பிய பார்சலில் மனித மண்டை ஓடு மற்றும் எலும்புகள் இருந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை, வியாசர்பாடி, ராஜாஜி தெருவை சேர்ந்தவர் ஸ்ருதி(29), இவர் பாரிமுனை, அரண்மனைக்காரன் தெருவில் உள்ள ஒரு தனியார் டுல்ஸ் விற்பனை நிறுவனத்தில் கணக்காளராக பணியாற்றி வருகிறார். நேற்று முன்தினம் மாலை கடைக்கு வந்த அடையாளம் தெரியாத நபர் ஒருவர். அங்கிருந்த பாதுகாப்பு காவலர் கிருஷ்ணாலால் என்பவரிடம், ஸ்ருதி பெயருக்கு ஒரு பார்சல் வந்திருப்பதாகக் கூறி ஒப்படைத்து விட்டுச் சென்றுள்ளார். காவலாளி அந்த பார்சலை ஸ்ருதியிடம் கொண்டு சென்றபோது, "நான் எந்தப் பொருளையும் ஆர்டர் செய்யவில்லை, இது என்னுடையது அல்ல" என அவர் கூறியுள்ளார். இதனால் சந்தேகமடைந்த காவலாளி, அந்தப் பார்சலைத் திறந்து பார்த்தார். அந்த பார்சலில், ஒரு மனித மண்டை ஓடு, மூன்று எலும்புத் துண்டுகள், ஒரு விபூதி பொட்டலம் ஆகியவை இருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த எஸ்பிள னேடு போலீஸார், அங்கிருந்த மண்டை ஓடு மற்றும் எலும்பு களைக் கைப்பற்றி ஆய்வுக்கு அனுப்பியுள்ளனர். மேலும், கடையைச் சுற்றியுள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்து, பார்சலை கொடுத்துச் சென்ற மர்ம நபரை போலீஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர். மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில், பட்டப்பகலில் நடந்த இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### நோயாளி பெயரில்... 135 கிராம் தங்கத்தை விழுங்கி கடத்த முயன்ற விமான பயணி



**ஆமதாபாத், பிப்.23:**

குஜராத்தின் ஆமதாபாத் நகருக்கு அபுதாபியில் இருந்து ஏர் அரேபியா விமானம் (எண் 3எல் 111) ஒன்று வந்து சேர்ந்தது. அதில், ஷாருக் என்ற ஆண் பயணி இறங்கியுள்ளார். நோயாளியாக வந்திறங்கிய அவரை சந்தேகத்தின்பேரில் மறித்து சுங்க அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

அப்போது அவர், உலோக பொருட்களை விழுங்கி இருக்கிறேன் என விசாரணையின்போது அதிகாரிகளிடம் உண்மையை ஒப்பு கொண்டிருக்கிறார். தொடர்ந்து, நகர தலைமை ஜுடிசியல் மாஜிஸ்திரேட்டின் முன் ஆஜர்படுத்தி அவருடைய உத்தரவின்படி, அந்த விமான பயணியை பாதுகாப்பாக கொண்டு போய் ஆமதாபாத் அரசு மருத்துவமனையில் அதிகாரிகள் சேர்த்து விசாரணை நடத்தினர். அதில், மஞ்சள் வடிவில் 3 சிலிண்டர் வடிவ கேப்சூல்களும், ஸ்டீல் நிறத்தில் உருண்டை வடிவ பந்து போன்ற பொருளும் ஷாருக்கின் வயிற்றில் இருந்தது. இதனை டாக்டர்கள் கண்டறிந்தனர்.

இதன்பின்னர், அவருடைய மலக்கழிவில் இருந்து 3 உருளை வடிவ கேப்சூல்களில் 135.2 கிராம் எடை கொண்ட 999.0 தூய 24 கேரட் தங்கம் இருப்பது தெரிய வந்தது. அவற்றின் மதிப்பு ரூ.21.89 லட்சம் ஆகும். 4-வது கேப்சூலில் விலை மதிப்பில்லாத உலோகம் இருந்துள்ளது.

இதனால், அந்த விமான பயணி அபுதாபியில் இருந்து இந்தியாவுக்கு உடலில் தங்கம் மறைத்து வைத்து, கடத்த முயன்றது தெரிய வந்துள்ளது. அவரிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

## விளையாட்டு செய்திகள்

### விளையாட்டு உலகில் நட்சத்திரமாக ஜொலித்த ஜிம்பாப்வே

**அடிலெய்டு, பிப்.22:**

கிரிக்கெட் உலகில் இரண்டாம் நிலை அணியாக இருப்பது ஜிம்பாப்வே ஆகும். அடிக் கடி உலகக்கோப்பை போட்டிகளில் நட்சத்திர அணிகளுக்கு அதிர்ச்சி தோல்வி அளிக்கும் அணிகளில் ஒன்று. அதுவும் ஒரு போட்டியில் மட்டும். ஆனால் தற்போது நடைபெற்று வரும் டி-20 உலகக்கோப்பை தொடரில் முன்னெப்போதும் இல் லாத வகையில் லீக் சுற்றில் ஆஸ்தி ரேலியா, இலங்கை உள்ளிட்ட சாம்பி யன் அணிகளை வீழ்த்தி தோல்வியை சந்திக்காமல் (மழையால் ஒரு ஆட்டம் கைவிடப்பட்டது - அயர்லா ந்து) 'சூப்பர் 8' சுற்றுக்கு முன்னேறி யது. அதுவும் முதலிட அந்தஸ்து டன். ஜிம்பாப்வே அணியின் அசத்த லான செயல்பாட்டால், முன்னாள் சாம்பியனான ஆஸ்திரேலிய அணி உலகக்கோப்பை தொடரை விட்டே வெளியேறியுள்ளது. இதனால் ஜிம் பாப்வே அணியை கிரிக்கெட் உலகம் மட்டுமின்றி ஒட்டுமொத்த விளை யாட்டு உலகமே கொண்டாடி வருகிறது. குறிப்பாக உலகின் முன்னணி விளையாட்டுச் செய்தி நாளிதழ்கள் ஜிம்பாப்வே அணியின் சிறப்பான செயல்பாட்டுக்கு முதல் பக்கத்தில் பிரம்மாண்ட படங்களு டன் செய்தி வெளியிட்டு, அங்கீகா ரத்துடன் பாராட்டு தெரிவித்துள்ளன. இதனால் விளையாட்டு உலகில் ஜிம்பாப்வே ஆடவர் கிரிக்கெட் அணி நட்சத்திரமாக ஜொலித்துள் ளது.

### குளிர்கால ஒலிம்பிக்கில் ஐரோப்பா ஆதிக்கம்

25ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் இத்தாலி நாட்டின் மிலன், கார்டினா நகரில் நடைபெற்று வருகிறது. தற்போது இந்த தொடர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், வழக்கம் போல பதக்கப்பட்டியலில் ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த நாடுகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. முதல் 10 இடங்களில் 8 இடங்கள் ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த நாடுகள் (நார்வே, இத்தாலி, ஜெர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரியா, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, சுவீடன்) என்ற நிலையில், அமெரிக்கா (வட அமெரிக்கா), ஜப்பான் (ஆசியா) ஆகிய 2 நாடுகள் மட்டுமே வேறு கண்டத்தைச் சேர்ந்த நாடுகள் ஆகும். அதே போல மொத்தப் பட்டியலில் (28 இடங்கள்) 19 நாடுகள் ஐரோப்பிய கண்டங்களைச் சேர்ந்தவை என்பது குறிப்பி டத்தக்கது.

### பாகிஸ்தான் வீரர்கள் இல்லையென்றால் அவமானம்

இங்கிலாந்து நாட்டின் 'தி ஹண்ட்ரட்' லீக் தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் இல்லையென்றால் அது அவமானமாக கருதப்படும் என இங்கிலாந்து அணியின் டி-20 கேப்டன் ஹாரி ப்ரூக் தெரி வித்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறுகையில்,"உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், ஏலம் தொடர்பானது எங்களுடைய வேலை அல்ல. எனினும், நான் என்ன சொல்கிறேன் என்றால், கடந்த சில வரு டங்களாக பாகிஸ்தான் கிரிக்கெட் நாடாக இருந்து வருகிறது.

50 முதல் 60 வீரர்கள் விளையாடுவதற்கான ஏலத்தில் பங்கேற்க விண்ணப்பிப்பார்கள். அவர்களை 'தி ஹண்ட்ரட்' லீக் தொடரில் பார்க்க முடியவில்லை என்றால் அது அவமானம்" என அவர் தெரிவித்துள்ளார்.

# 18 வயது மாணவனின் ஆசைக்கு பலியான பெண் கம்ப்யூட்டர் என்ஜினீயர்

**பெங்களூரு, பிப்.23:**

பெங்களூரு ராமமூர்த்தி நகரில் 26 வயதான கம்ப்யூட்டர் பெண் என்ஜினீயர் வசித்து வந்தார். இவர் மங்களூருவை சேர்ந்தவர். இந்தநிலையில் பெண் என்ஜினீயர் கடந்த மாதம் 16-ந் தேதி அவர் குடியிருந்த வீட்டில் மர்மமான முறையில் இறந்துகிடந்தார். படுக்கை அறை முழுவதும் தீப்பிடித்து எரிந்து இருந்தது. அதனால் முதலில் போலீசார் அவர் தற்கொலை செய்து கொண்டதாக சந்தேகித்தனர். பின்னர் அவரது பிரேத பரிசோதனை அறிக்கையில் அவர் கொலை செய்யப்பட்டு இருந்தது தெரிந்தது.

அதன்படி விசாரணையை தொடர்ந்த போலீசார் பெண் என்ஜினீயரை கொலை செய்ததாக அவரது பக்கத்து வீட்டுக்காரரான குரேசி (வயது 18) என்ற வாலிபரை கைது செய்து விசாரித் தனர். அதில் பெண் என்ஜினீயர் குரேசியை பார்க்கும் போது சிரிப்பாராம். இதன்காரணமாக தன்னை பெண் என்ஜினீயர் காதலிப்பதாக குரேசி கருதியுள்ளார். இதனால் அவரை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றபோது மறுப்பு தெரிவித்ததாகவும், அப்போது தள்ளிவிட்டதில் ஷோபாவில் தலை மோதி பெண் என்ஜினீயர் இறந்துபோனதாகவும் குரேசி தெரிவித்திருந்தார்.

இதையடுத்து அவர் மீது கொலை வழக்கு பதிவு செய்த போலீசார் அவரிடம் கிடுக்கிப்பிடி விசாரணையை தொடர்ந்தனர். இதில் பல திடுக்கிடும் தகவல்கள் தெரியவந்துள்ளது. சம்பவத்தன்று குரேசி பெண் என்ஜினீயர் தங்கிருக்கும் அடுக்குமாடி குடியிருப்புக்கு சென்றுள்ளார். பின்னர் அவர், பின்னால் இருந்து பெண் என்ஜினீயரை இறுகப் பிடித்து பாலியல் பலாத்கா ரம் செய்ய முயன்றுள்ளார். இதில் இருந்து தப்பிக்க முயன்ற அவரை குரேசி கீழே தள்ளிவிட் டுள்ளார்.

அதில் பெண் என்ஜினீயரின் தலை வீட்டில் இருந்த சோபாவில் மோதி பலத்த காயமடைந்து ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடியுள்ளார். ஆனாலும் விடாத குரேசி அவரை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றுள்ளார். பெண் என்ஜினீயர் மண்டை உடைந்து ரத்தம் கொட்டியதால் அவர் அணிந்திருந்த ஆடைகளை கழற்றி அந்த துணிகளை தண்ணீரில் கழுவியுள்ளார்.

அதன்பிறகு பீரோவில் இருந்த மற்றொரு உடையை எடுத்து அவருக்கு அணிவித்து உள்ளாடைகளை படுக்கையறையில் இருந்த கட்டிலில் மறைத்து வைத்துள்ளார். இதற்கிடையே பெண் என்ஜினீயர் உயிரிழந்துள்ளார். பெண் என்ஜினீயர் பிணமான பிறகும் குரேசியின் பாலியல் வக்கிர ஆசைவிடவில்லை. அவரை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதும் போலீஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும் அவர், கொலையை மறைக்க தடயங்களை அழிக்க படுக்கை அறைக்கு தீவைத்துள்ளார். அத்துடன் பெண் என்ஜினீயரின் செல்போனை தூக்கிச் சென்றுள்ளார். இதனால் அவர் போலீசில் சிக்கியதும் தெரியவந்துள்ளது.

ஒட்டு மொத்தத்தில் 18 வயது மாணவனின் சல்லாபத்துக்கு ஒரு கம்ப்யூட்டர் என்ஜினீயர் பலியான சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சாக்லெட் வாங்கி தருவதாக கூறி.. சிறுமிகளை பலாத்காரம் செய்த 64 வயது முதியவர்

**பெங்களூரு, பிப்.23:**

கர்நாடக மாநிலம் பெங்களூரு புறநகர் மாவட்டம் ஆனேக்கல் போலீஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வசித்து வருபவர் கிருஷ்ணமூர்த்தி என்கிற கிட்டி (வயது 64). இவர் தான் தங்கியிருக்கும் பகுதியில் சிறுமிகளை குறிவைத்து பாலியல் பலாத்காரம் செய்து வந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பள்ளிக்கு சென்று வந்த 2-ம் வகுப்பு சிறுமி ஒருவரின் வீட்டில் ஆள் இல்லாததை அறிந்த முதியவர் சிறுமியை சாக்லெட் வாங்கி கொடுக்க அழைத்து சென்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்.

இதனால் பாதிக்கப்பட்ட சிறுமி நேற்று முன்தினம் இரவு வீடு திரும்பிய தனது பெற்றோரிடம் தனக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமை சம்பவம் பற்றி அழுதபடி கூறியுள்ளாள். இதைகேட்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர் உடனடியாக



ஆனேக்கல் போலீசில் முதியவர் கிருஷ்ணமூர்த்தி மீது புகார் அளித்தனர். அதன் பேரில் போலீசார் கிருஷ்ணமூர்த்தியை கைது செய்தனர்.

அவரிடம் நடத்திய விசாரணையில், மேலும் 2 சிறுமிகளை அவர் சாக்லெட் தருவதாக கூறி பாலியல் பலாத்காரம் செய்த அதிர்ச்சி தகவலும் தெரியவந்தது. குறிப்பாக பெற்றோர் வேலைக்கு சென்ற நிலையில் பள்ளி முடிந்து வீட் டில் தனியாக இருக்கும் சிறுமிகளிடம் அவர் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதும் தெரியவந்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர் மீது போக்சோ சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, முழுமையான விசாரணைக்குப் பிறகு நீதிமன்றக் காவலில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மூத்த காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

# கோழிக்கோடு: சாப்பிட்ட உணவுக்கு பணம் கேட்டதால் உணவகம் மீது தாக்குதல்

**புதுடல்லி, பிப்.23:**

கோழிக்கோட்டில் சாப்பிட்ட உணவுக்கு பணம் கொடுக்க மறுத்ததோடு மூன்று பேர் கொண்ட கும்பல் உணவகத்தையும் அடித்து நொறுக்கி சேதப்படுத்தியுள்ளனர்.



கேரள மாநிலம், கோழிக்கோட்டில் துரித உணவகத்தில் சாப்பிட மூன்று பேர் கொண்ட கும்பல் சனிக்கிழமை இரவு சென்றுள்ளனர். பின்னர் அவர்கள் ரூ.600 மதிப்பிலான உணவை உட்கொண்டுள்ளனர். உணவு சாப்பிட்டு முடித்ததும், உணவக ஊழியர்கள் சாப்பிட்டதற்கான ரசீதைக் கொடுத்துள்ளனர். ஆனால், அந்தப் பகுதியில் உள்ள எந்த உணவகமும் எங்களிடம் பணம் வாங்குவதில்லை என்று கூறி 3 பேரும் பணம் கொடுக்க மறுத்துள்ளனர். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வாக்குவாதத்தில், ஆத்திரமடைந்த கும்பல் இரும்புத் தடியால் உணவகத்தைத் தாக்கியது. இதில் உணவகத்தின் பெயர்ப் பலகை மற்றும் உணவுப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த கண்ணாடி அலமாரி ஆகியவை அடித்து நொறுக்கப்பட்டன. இந்தத் தாக்குதலில் உணவக ஊழியர் ஒருவரும் காயமடைந்தார். சமீபத்தில் தொடங்கப்பட்ட உணவகத்துக்குஏற்பட்ட மொத்த சேதம் சுமார் ரூ.1.2 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், மற்ற இருவர் மீதும் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் போலீஸ் அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர். தப்பியோடிய மற்ற இரண்டு குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர், அவர்களையும் கைது செய்வதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. குற்றம்சாட்டப்பட்டவர்கள் கடந்த காலங்களில் பல குற்ற வழக்குகளில் ஈடுபட்டுள்ளனர் என்று போலீஸார் மேலும் தெரிவித்தனர்.

## வணிகச் செய்திகள்

### ஏஐ வரவால் 40% வேலைவாய்ப்புகள் பாதிக்கும்: சர்வேதச நிதியத்தின் தலைவர் கருத்து



**புதுடெல்லி, பிப்.23:**

சர்வேதச நிதியத்தின் (ஐஎம்எஃப்) தலைவர் கிறிஸ்டலினா ஜார்ஜிவா செய்தி நிறுவனமொன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது:

ஏஐ மற்றும் அது தொடர்பான தொழில்நுட்பங்களால் உலகளவில் 40 சதவீத வேலைவாய்ப்புகள் பாதிக்கப் படும். ஆரம்பநிலை பணியிடங்கள் ஏஐ வரவால் பாதிப் புக்கு ஆளாக நேரிடும்.

இது முதல் வேலையைத் தேடும் இளம் பட்டதாரி களுக்குப் சவாலாக அமையும். மேம்பட்ட பொருளாதார நாடுகளில் இந்த பாதிப்பு 60 சதவீதம் வரை இருக்கலாம். ஆனால், இந்தியாவில் இது 26 சதவீதமாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# பயங்கரவாத அச்சுறுத்தல்: டில்லியில் மத, பாரம்பரிய தளங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு

**புதுடெல்லி, பிப்.23:**

பயங்கரவாத அச்சுறுத்தல் இருப்பதாக உளவுத்துறை தகவல்கள் தெரிவிப்பதைத் தொடர்ந்து, செங்கோட்டையைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் சாந்தினி சௌக்கின் சில பகுதிகள் உள்பட தில்லியில் உள்ள முக்கிய மத மற்றும் பாரம்பரிய தளங்களில் சனிக்கிழமை பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாக காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது: பாகிஸ்தானை தளமாகக் கொண்ட பயங்கரவாத அமைப்பான லஷ்கா-இ-தொய்பா (எல். இ. டி) இந்தியாவின் முக்கிய மத இடங்களை குறி வைத்திருப்பதாக மத்திய புலனாய்வு அமைப்புகள் சுட்டிக்காட்டியதை அடுத்து, ஒரு முக்கிய சுற்றுலாத் தலம் மற்றும் உயா பாதுகாப்பு மண்டலமான செங்கோட்டைக்கு அருகே அச்சுறுத்தல் குறித்து பாதுகாப்பு அமைப்புகள் எச்சரிக்கை விடுத்தன. சாந்தினி சௌக் பகுதியில் உள்ள ஒரு கோயில் சாத்தியமான இலக்குகளில் ஒன்றாக இருக்கலாம் என்று குறிப்பிட்ட தகவல்கள் தெரிவிப்பதாக வட்டாரங்கள் தெரிவித்தன. உளவுத்துறை தகவல்கள் சரிபாா்க்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படும்போது, முக்கியமான மத இடங்கள் மற்றும் நெரிசலான பொதுப் பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு மேம்பட்ட வெடிக்கும் சாதனம் (ஐ. இ. டி) அடிப்படையிலான தாக்குதலை நடத்த முயற்சிக்கக்கூடும் என்று புலனாய்வு அமைப்புகள் சுட்டிக்காட்டின. பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் உள்ள ஒரு மசூதியில் பிப்ரவரி 6 ஆம் தேதி நடந்த குண்டுவெடிப்புக்கு பழிவாங்க பயங்கரவாதக் குழு மேற்கொண்ட முயற்சிகளுடன் இந்த திட்டம் தொடா்புடையதாக கூறப்படுகிறது. சி. சி. டி. வி கண்காணிப்பு, வாகன சோதனைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய இடங்களில் கூடுதல் பணியாளா்களை நிறுத்துதல் ஆகியவற்றின் மூலம் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. வெடிகுண்டு அகற்றும் குழுக்கள், மோப்ப நாய் பிரிவு மற்றும் விரைவுப் படைகளும் முக்கியமான இடங்களில் தயாா் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. நவம்பா 10,2025 ஆம் தேதி வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோட்டைக்கு அருகே நடந்த கொடிய காா் வெடிப்பின் பின்னணியில் இந்த எச்சரிக்கை வந்துள்ளது, இதில் குறைந்தது 13 போ உயிரிழந்தனா் மற்றும் 20 க்கும் மேற்பட்டோா் காயமடைந்தனா். செங்கோட்டை மெட்ரோ நிலையத்தின் கேட் எண் 1 க்கு அருகே வெடிபொருட்கள் ஏற்றப்பட்ட காா் வெடித்ததில், அருகிலுள்ள பல வாகனங்கள் தீப்பிடித்து, அடா்த்தியான மக்கள் தொகை கொண்ட பகுதியில் பீதியை ஏற்படுத்தியது.

மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும், சந்தேகத்திற்கிடமான பொருட்கள் அல்லது செயல்பாடு குறித்து உடனடியாக காவல்துறை அல்லது அவசர சேவைகளுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. இருப்பினும், பீதிக்கு எந்த காரணமும் இல்லை என்றும், இந்த நடவடிக்கைகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள். மேலும் உளவுத்துறை சேகரிப்பு மற்றும் உள்ளீடுகளின் சரிபாா்ப்பு நடந்து வருகிறது என்றாா் அவா்.

## சபரிமலை தங்கம் திருட்டு வழக்கு: தந்திரிக்கு எதிராக சாட்சியமில்லை - நீதிமன்றம் தகவல்

**கொல்லம், பிப்.23:**

ராஜீவருவின் ஜாமீன் மனு மீதான விசாரணை கொல்லம் குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. மனுவை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு ஜாமீன் வழங்கியது. விசாரணையின்போது நீதிமன்றத்தில் தந்திரியின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், “உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி 2018-ல் சபரிமலை ஐயப்பன் கோயிலில் பெண்கள் நுழைந்து தரிசனம் செய்ய கேரள மாநில அரசு அனுமதித்தது. இதற்கு அப்போது கண்டரரு ராஜீவரு கடும் எதிர்ப்பு தெரிவித்தார். அதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக இந்த தங்கத் திருட்டு வழக்கை கேரள அரசு அதிகாரிகள் தொடர்ந்துள்ளனர்” என்று தெரிவித்தார். இந்நிலையில்தான் ஜாமீனில் ராஜீவரு வெளியே வந்துள்ளார். மேலும் இந்த வழக்கில் கண்டரரு ராஜீவருக்கு எதிராக எந்தச் சாட்சியமும் இல்லை என்று கொல்லம் குற்றவியல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இது கேரள அரசியலில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது. கண்டரரு ராஜீவருவை வேண்டுமென்றே கேரள போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தியதாகவும், இது பழி வாங்கும் நடவடிக்கை என்றும் கேரளாவில் உள்ள எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. இந்த தங்கம் திருட்டு வழக்கில் முன்னாள் தேவஸ்வம் போர்டு அமைச்சர் கடக்கம்பள்ளி சுரேந்திரன் சம்பந்தப்பட்டுள்ளார் என்றும், அதை திசை திருப்பவே தந்திரி கண்டரரு ராஜீவருவை கேரள போலீஸார் கைது செய்துள்ளனர் என்றும் பாஜக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ள கண்டரரு ராஜீவருவை கைது செய்தது தொடர்பாக விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் என கூறியுள்ளன.

## 10 ஆண்டுகளாக சிறுவர்களை சீரழித்து 2 லட்சம் ஆபாச வீடியோக்களை விற்ற உ.பி. தம்பதிக்கு மரண தண்டனை

**பண்டா, பிப்.23:**

உத்தர பிரதேச மாநிலத்தின் நீர் வளத் துறையில் இளநிலை பொறியாளராகப் பணியாற்றியவர் ராம் பவன். இவரது மனைவி துர்காவதி. இருவரும் பண்டா மற்றும் சித்ரகூடம் பகுதியில் கடந்த 2010-ம் ஆண்டு முதல் 2020-ம் ஆண்டு வரையில் சிறிய அறையை வாடகைக்கு எடுத்து தங்கி வந்துள்ளனர். அந்த 10 ஆண்டுகளில் சிறுவர்களை தங்கள் வீட்டுக்கு அழைத்து வீடியோ கேம் விளையாட வைப்பது, அவர்களுக்கு சாக்லேட்டுகள் வழங்குவது, பரிசு வழங்குவது என பழக்கப்படுத்தி உள்ளனர். பின்னர் சிறுவர்களை ஆபாச படம் எடுத்துள்ளனர். இதுபோல் 33 சிறுவர்களை ராம்பவன் மற்றும் துர்காவதி இருவரும் ஆபாச படம் எடுத்து 40-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விற்பனை செய்து வந்துள்ளனர். ஒரு கட்டத்தில் இவர்களுடைய சட்டவிரோத செயல்கள் வெளியில் தெரிய வந்தது. போலீஸார் உடனடியாக களத்தில் இறங்கி விசாரணை நடத்தினர். அப்போது, அவர்கள் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட ஆபாச வீடியோக்கள் எடுத்ததும், அதில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் 18 வயதுக்கு குறைவானவர்கள் என்பதும் சிலர் 3 வயதுக்குட்பட்டவர்கள் என்பதும் தெரிய வந்தது. இதுதொடர்பாக அவர்கள் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. சிபிஐ அதிகாரிகளும் தீவிர விசாரணை நடத்தி வந்தனர். இந்த வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் பண்டா மாவட்ட சிறப்பு நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை 163 பக்கத்தில் தீர்ப்பளித்தது. இந்த வழக்கு அரிதிலும் அரிதானது என்று மாவட்ட கூடுதல் செஷன்ஸ் நீதிமன்ற நீதிபதி பிரதீப் குமார் மிஸ்ரா தெரிவித்தார். ராம் பவன் மற்றும் அவரது மனைவி துர்காவதிக்கு போக்சோ சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். அத்துடன் பாதிக்கப்பட்ட 33 சிறுவர்களுக்கும் உ.பி. அரசு தலா ரூ.10 லட்சம் நஷ்டஈடு வழங்க வேண்டும் என தெரிவித்தனர்.

# இந்தியாவில் நஷ்டம் அதிகரித்தாலும் முதலீட்டை அதிரிக்கும் ஸ்டார்பக்ஸ்!

**புதுடெல்லி, பிப்.23:**




இந்தியாவில் நிலவும் கடும் போட்டி மற்றும் அதிகரித்து வரும் நஷ்டத்துக்கு மத்தியிலும், டாடாவுடன் இணைந்து தனது வாத்தகத்தை விரிவுபடுத்துவதில் அமெரிக்காவின் ஸ்டாா்பக்ஸ் நிறுவனம் தீவிரம் காட்டி வருகிறது.

உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடான இந்தியாவில், லாபத்தைவிட சந்தை விரிவாக்கத்துக்கே தற்போது முன்னுரிமை அளிப்பதாக டாடா-ஸ்டாா்பக்ஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சுஷாந்த் தாஷ் தெரிவித்துள்ளாா்.

உலக அளவில் ஸ்டாா்பக்ஸ் நிறுவனத்தின் முக்கிய ஐந்து சந்தைகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்துள்ள நிலையில், இந்த அதிரடி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2024-25 நிதியாண்டில், டாடா ஸ்டாா்பக்ஸ் நிறுவனத்தின் நஷ்டம் இரண்டு மடங்கு அதிகரித்து ரூ.150 கோடியை எட்டியுள்ளது. இருப்பினும், வருவாய் 4.8 சதவீதம் உயா்ந்துள்ளதால் நிறுவனம் நம்பிக்கையுடன் உள்ளது.

இந்தியாவில் உள்நாட்டு நிறுவனங்களுடனான கடும் போட்டியை எதிா்கொள்ள, உள்ளூா் மக்களின் ரசனைக்கேற்ப தங்களின் விற்பனைப் பட்டியலில் (மெனு) ஸ்டாா்பக்ஸ் அதிரடி மாற்றங்களைச் செய்துள்ளது.

தற்போது இந்தியா முழுவதும் 81 நகரங்களில் 504 கிளைகளுடன் இயங்கி வரும் இந்நிறுவனம், மும்பையில் வடா பாவ் வகை பன்களையும், தென்னிந்தியாவில் மலபாா் முட்டை ரோஸ்ட் போன்ற உணவுகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்தகைய மாற்றங்களால், கடந்த 2 காலாண்டுகளின் நிறுவனத்தின் விற்பனை 3 சதவீதம் வளா்ச்சி கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# திடக்கழிவு மேலாண்மைக்கான விதிகளை வெளியிட்டது உச்ச நீதிமன்றம்!

**புதுடெல்லி, பிப்.23:**



திடக்கழிவு மேலாண்மை தொடா்பாக நாடு முழுமைக்கும் புதிய விதிகளை உச்ச நீதிமன்றம் வெளியிட்டுள்ளது.

போபால் மாநகராட்சியின் சுற்றுச்சூழல் விதிகளுக்கு எதிரான தேசிய பசுமைத் தீா்ப்பாயத்தின் 2 உத்தரவுகளை எதிா்த்து தாக்கலான 2 மேல்முறையீட்டு மனுக்கள், உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் பங்கஜ் மித்தல், எஸ். வி.என். பாட்டீ ஆகியோரை கொண்ட அமா்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு:

திடக்கழிவு விவகாரத்தில் அலட்சியமாக இருப்பது, நமது உடல் நலனை பாதிக்கும். நாட்டின் பொருளாதாரத்தையும் பாதிக்கும். சுத்தம் மற்றும் தூய்மையான சுற்றுச்சூழல் ஆகியவை வாழ்வதற்கான உரிமையில் பிரிக்க முடியாத அங்கமாகும். ஆதலால் திடக்கழிவு மேலாண்மை விவகாரத்தில் தற்போது நடவடிக்கை எடுக்கப்படவில்லையேல், இனி எப்போதும் எடுக்க முடியாமல் போய்விடும்.

எந்த நடவடிக்கையும் எடுக்காமல், நாம் இந்த பிரச்னை சரியாகிவிடும் என எதிா்பாா்ப்பது சரியாக இருக்காது. கழிவு இல்லாத சுத்தமான இந்தியாவை உருவாக்குவது நம் அனைவரின் கடமையாகும். சுற்றுச்சூழலை பாதுகாப்பதும், குடிமக்களின் நலனை காப்பதும் மாநில அரசின் கடமை என நீதிமன்றங்கள் திரும்பத் திரும்ப தெரிவித்து வருகின்றன. ஆட்சியா்கள் மூலம் ஆய்வு: திடக்கழிவு நிா்வகிப்பு தொடா்பாக மாவட்ட ஆட்சியா்கள் மூலம் ஆய்வு செய்யப்பட வேண்டும். அப்போது பிரச்னைகளை மாவட்ட ஆட்சியா்கள் கண்டறிந்து, அதற்கு தீா்வு காண எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை காலவாரியாக தலைமை செயலாளரிடம் அவா் அறிக்கை மூலம் தெரியப்படுத்த வேண்டும். மேலும் உள்ளாட்சி அமைப்புகளிடம் மாவட்ட ஆட்சியா்கள், திடக்கழிவு தொடா்பான விதிகளை 100 சதவீதம் கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்த வேண்டும். திடக்கழிவு தொடா்பான விதிகள் ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வருகிறது. இந்த விதிகள் தொடா்பான உச்ச நீதிமன்ற உத்தரவு நகலை, கழிவுகளை அதிகம் ஏற்படுத்துவோருக்கு உள்ளாட்சி அமைப்புகள் வழங்கி, மாா்ச் 31-ஆம் தேதிக்குள் அதற்கு கட்டுப்பட வேண்டும் என வலியுறுத்த வேண்டும்.

# திருப்பூரில் சதித் திட்டம்! டில்லி குண்டுவெடிப்பில் தொடர்புடையவர்களா? 8 பேரை கைது செய்த டில்லி போலீஸ்!!

**புதுடெல்லி, பிப்.23:**

திருப்பூரில் பயங்கரவாதச் சதித் திட்டம் தீட்டிய 8 பேரை தில்லி காவல் துறையினர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர்.

பாகிஸ்தானை மையமாகக் கொண்ட பயங்கரவாத அமைப்பான லஷ்கர்-இ-தொய்பா மற்றும் பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ, வங்கதேசத்தின் தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் எட்டு பேரை தில்லி காவல் துறையினர் தமிழ்நாட்டின் திருப்பூரில் கைது செய்தனர்.



கடந்தாண்டு நவ. 10 ஆம் தேதி வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோட்டைக்கு அருகே நடந்த கார் குண்டுவெடிப்பில் 13 பேர் பரிதாபமாகக் கொல்லப்பட்டனர். இதனையடுத்து, பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் உள்ள ஒரு மசூதியில் பிப். 6 ஆம் தேதி நடந்த குண்டுவெடிப்புக்கு பழிவாங்க பயங்கரவாதக் குழு மேற்கொண்ட முயற்சிகளுடன் இந்தியாவில் பயங்கரவாத சதித்திட்டத்தில் ஈடுபட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

நாட்டில் பயங்கரவாத சதித் திட்டம் தொடர்புடையதாக வெளியான தகவலின் அடிப்படையில், சி.சி.டி.வி கண்காணிப்பு, வாகன சோதனைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய இடங்களில் கூடுதல் பணியாளர் தீவிர கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், டில்லி பயங்கரவாதத் தாக்குதலில் தொடர்புடையதாகக் கருதப்படும் எட்டு பேரை டில்லி காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

இவர்கள், வெளிநாட்டில் உள்ளவர்களின் அறிவுறுத்தலின் பேரில் இந்தியாவில் ஒரு பெரிய பயங்கரவாத தாக்குதலை நடத்த திட்டமிட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் இருந்து மிசானுர் ரஹ்மான், முகமது ஷபாத், உமர், முகமது லிட்டன், முகமது ஷாஹித் மற்றும் முகமது உஜ்ஜால் என அடையாளம் காணப்பட்டுள்ள ஆறு பேரும், மேற்கு வங்கத்தில் இரண்டு பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் சிலர் வங்கதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் தங்கள் அடையாளங்களை மறைக்க போலி ஆதார் அட்டைகளைப் பயன்படுத்தியதாகவும் காவல் துறையினர் தகவல்கள் தெரிவித்தனர்.

## தெலுங்கானா பா.ஜ.க. தலைவர் வீட்டு காவலில் வைப்பு

**ஐதராபாத், பிப்.23:**

தெலுங்கானாவின் காமாரெட்டி நகரில் கடந்த 2 நாட்களாக பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் கட்சியின் தொண்டர்களுக்கு இடையே மோதல்கள் ஏற்பட்டன. இது வன்முறையாக மாறியது. ஒருவர் மீது ஒருவர் கற்களை வீசி தாக்கி கொண்டனர். இதில் ஆர்ப்பாட்டத்தின்போது, காங்கிரஸ் தலைவர் ஒருவரின் வாகனம் நேற்று கவிழ்க்கப்பட்டது. கற்கள் வீசப்பட்டதில் அக்கட்சி தொண்டர்கள் சிலர் காயமடைந்தனர். இதன்பின்னர், நடந்த சம்பவத்திற்கு பழி வாங்கும் வகையில், பா.ஜ.க. எம்.எல்.ஏ. கதிபள்ளி வெங்கட ரமணா ரெட்டியின் முகாம் அலுவலகம் மீது காங்கிரஸ் தொண்டர்கள் தாக்குதல் நடத்தி அடித்து, நொறுக்கினர். பன்ஸ்வாடா பகுதியில் பா.ஜ.க. தொண்டர்களும் கற்களால் வீசி தாக்கப்பட்டனர் என தகவல் தெரிவிக்கின்றது.

இந்த சம்பவங்களில் காயமடைந்த கட்சி தொண்டர்களை இன்று நேரில் சந்தித்து ஆறுதல் கூற தெலுங்கானா பா.ஜ.க. தலைவர் என். ராமசந்திர ராவ் திட்டமிட்டு இருந்துள்ளார். இதற்காக காமாரெட்டி நகருக்கு செல்லும் முடிவில் இருந்துள்ளார். இதனால், பதற்றம் அதிகரிக்க கூடும் என்ற நோக்கில் தடுப்பு நடவடிக்கையாக நேற்றிரவு அவரை போலீசார் வீட்டு காவலில் வைத்து உள்ளனர். இதனை அவர் தொலைபேசி வழியே நிருபர்களிடம் பேசும்போது தகவலாக தெரிவித்து உள்ளார்.

## துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் அடுத்த வாரம் காஷ்மீர் பயணம்

**ஸ்ரீநகர், பிப்.23:**

ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் ஸ்ரீநகரில் காஷ்மீர் பல்கலைக்கழகம் உள்ளது. இந்த பல்கலைக்கழகத்தில்கீழ் பல்வேறு கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றனர். இதனிடையே, காஷ்மீர் பல்கலைக்கழகத்தின் 21வது பட்டமளிப்பு விழா வரும் 26ம் தேதி நடைபெற உள்ளது. இந்த பட்டமளிப்பு விழாவில் காஷ்மீர் பல்கலைக்கழகம் மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள கல்லூரிகளில் கல்வி பயின்ற 59 ஆயிரத்து 558 மாணவ, மாணவியருக்கு வரும் 26ம் தேதி பட்டம் வழங்கப்பட உள்ளது.

இந்நிலையில், காஷ்மீர் பல்கலைக்கழத்தின் பட்டமளிப்பு விழாவில் துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார். இதற்காக அவர் அடுத்த வாரம் வியாழக்கிழமை (பிப். 26) காஷ்மீர் செல்ல உள்ளார். துணை ஜனாதிபதி வருகையையொட்டி காஷ்மீரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, காஷ்மீர் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் ஜம்மு-காஷ்மீர் கவர்னர் மனோஜ் சின்ஹா, முதல்-மந்திரி உமர் அப்துல்லா, பல்கலைக்கழக வேந்தர் நிலோபர் கான் உள்பட பலர் கலந்துகொள்ள உள்ளனர்.

## திருப்பதி லட்டு கலப்பட விவகாரம்; ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் திசைதிருப்புகிறது - சந்திரபாபு நாயுடு

**அமராவதி, பிப்.23:**

கடந்த 2024 ஆம் ஆண்டு ஆந்திராவில் நடந்த தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தின்போது, முந்தைய ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் ஆட்சியின்போது திருப்பது ஏழுமலையான் கோவிலில் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும் லட்டுகளை தயாரிப்பதற்கு தரமற்ற பொருட்கள், ரசாயனங்கள் மற்றும் விலங்கு கொழுப்புகளை பயன்படுத்தியதாக குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த குற்றச்சாட்டுகள் நாடு முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், கோடிக்கணக்கான இந்துகளின் உணர்வுகள் புண்படுத்தப்பட்டுள்ளதாக அப்போதைய ஆந்திர மாநில எதிர்க்கட்சிகள் கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்தன. இது தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டு சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணைக்கு உத்தரவிட்டது. அந்த குழுவினர் தங்கள் விசாரணையை நிறைவு செய்து அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர். இந்த நிலையில், திருப்பதி லட்டு கலப்பட விவகாரத்தில் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தங்கள் மீதான குற்றத்தை திசைதிருப்ப பார்க்கிறது என ஆந்திர மாநில முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வினுகொண்டா பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது;- “திருப்பதி லட்டு கலப்பட விவகாரத்தில் இருந்து தப்பிக்க, ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியினர் தங்கள் மீதான குற்றத்தை மற்றவர்கள் மீது திசைதிருப்ப பார்க்கிறார்கள். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. லட்டுகளை தயாரிப்பதற்கு திருப்பதி தேவஸ்தானத்திற்கு வழங்கப்பட்ட நெய் சுத்தமானது இல்லை என சி.பி.ஐ. தலைமையிலான சிறப்பு விசாரணைக் குழு கண்டறிந்தது. இந்த பிரச்சினை முந்தைய ஒய்.எஸ்.ஆர். அரசாங்கத்தின் பரம்பரைப் பிரச்சினை. ஏற்கனவே கடந்த 2019 முதல் 2024-க்கு இடைப்பட்ட காலத்தில் திருப்பதியில் கலப்பட லட்டுகள் பரிமாறப்பட்டன.” இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஜார்கண்டில் 2 சிறுமிகளை காரில் கடத்திச்சென்று பாலியல் வன்கொடுமை

**ராஞ்சி, பிப்.23:**

ஜார்கண்ட் மாநிலம் கும்லா மாவட்டம் அராரா கிராமத்தில் 2 சிறுமிகள் ஒரு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு, தங்கள் வீட்டுக்கு இருசக்கர வாகனத்தில் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது, காரில் வந்த 4 பேர். 2 சிறுமிகளையும் தடுத்து நிறுத்தி, அவர்களை வலுக்கட்டாயமாக காரில் கடத்திச் சென்றனர்.

அவர்களை ஆள்நடமாட்டம் இல்லாத பகுதிக்கு தூக்கிச்சென்று 4 பேரும் கூட்டாக கற்பழித்தனர்.

இதுதொடர்பான புகாரின்பேரில், 4 பேரையும் ‘போக்சோ’ சட்டத்தின்கீழ் போலீசார் கைது செய்தனர். 4 பேரும் ஜார்கண்ட் மாநிலம் சிம்டேகா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்கள் நீதி மன்ற காவலுக்கு அனுப்பப்பட்டனர்.

## அரச குடும்ப வாரிசுரிமை ஆண்ட்ரூவை நீக்க திட்டம்

**வாஷிங்டன், பிப்.23:**

பிரிட்டன் மன்னர் மூன்றாம் சார்லஸின் தம்பியும், முன்னாள் இளவர சருமான ஆண்ட்ரூ மவுண்ட்பேட்டன்-வின்சரை அரச வாரிசுரிமை வரிசையில் இருந்து நீக்குவதற்கான சட்டத்தைக் கொண்டுவர பிரிட்டிஷ் அரசாங்கம் ஆலோசித்து வருவதாக கூறப்படுகிறது. வர்த்தக தூதராக இருந்த போது அரசின் முக்கியத் தரவுகளை கொடும் குற்றவாளியான எப்ஸ்டீனுக்கு பகிர்ந்தது தொடர்பான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆண்டரூ விடுதலை செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் தான் அவரை வாரிசுரிமைப் பட்டிய லில் இருந்து நீக்கும் நடவடிக்கை நடந்து வருகிறது.

## ஈரானுடன் பதற்றத்திற்கு இடையே... மத்திய கிழக்கு பகுதிகளுக்கு படைகளை மாற்றி வரும் அமெரிக்கா

**வாஷிங்டன், பிப்.23:**



ஈரானுடன் பதற்றம் மற்றும் நேரடி ராணுவ மோதல் ஏற்பட கூடிய சாத்தியம் உள்ள சூழலில், மத்திய கிழக்கு பகுதிகளில் படைகளை அமெரிக்கா இடம் மாற்றி வருகிறது. எந்த திட்டம் என முன்னறிவிக்கப்படாமல், ஆனால் படையினரை பல்வேறு பகுதிகளில் நிலை நிறுத்தி வருகிறது.

இதன்படி, கத்தார் நாட்டின் அல் உதீத் படை தளத்தில் இருந்த 100-க்கும் மேற்பட்ட வீரர்களை இடம் மாற்றி கொண்டு சென்றுள்ளது. இதனை அமெரிக்காவின் பென்டகன் அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

இதேபோன்று, அமெரிக்காவின் ராணுவ தளங்களுக்கான நெட்வொர்க்கில் உள்ள பஹ்ரைன், ஈராக், சிரியா, குவைத், சவுதி அரேபியா, ஜோர்டான் மற்றும் ஐக்கிய அரபு அமீரக நாடுகளிலும் கூட ராணுவ அதிகாரிகள் மற்றும் ஆயுதங்களின் இடமாற்றம் நிகழ்ந்துள்ளது.

அவர்கள் எல்லோரும் வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளனர். இது எதற்காக என்ற தகவல் தெரிய வரவில்லை. ஒருவேளை போர் மூண்டால் இந்த 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் ஈரானின் தாக்குதலுக்கு இலக்காக கூடும் என தெரிகிறது.

ஏனெனில், 2025-ம் ஆண்டு ஜூனில் கத்தாரில் அமைந்த அமெரிக்க ராணுவ தளம் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. ஆனால், பெரிய பாதிப்பு ஏற்படுத்தும் அளவுக்கு அந்த தாக்குதலை ஈரான் நடத்தவில்லை. ஈரான் மீது நடத்தப்பட்ட அமெரிக்காவின் தாக்குதலுக்கு எச்சரிக்கை விடும் வகையிலேயே இந்த பதிலடி அமைந்தது.

ஆனால், அதன்பின்னர் ஐ.நா.வில் ஈரான் சார்பில் விடப்பட்ட எச்சரிக்கையில், அடுத்த முறை அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், பின்னர் அனைத்து அமெரிக்க தளங்கள், அமைப்புகள், கட்டிடங்கள் மீதும் கடுமையான பதிலடி தாக்குதல் கொடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு தனது வான் பாதுகாப்பு அமைப்புகளை, பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கையாக மத்திய கிழக்கு பகுதிகளுக்கு அமெரிக்கா மாற்றி உள்ளது என கூறப்படுகிறது.

தனுடன் தாக்குதலில் இருந்து தப்பும் வகையில், ஈரானில் இருந்து சற்று தொலைவில் அமெரிக்காவின் 2 விமானந்தாங்கி கப்பல்கள் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன. எனினும், தூதரக அளவிலான பேச்சுவார்த்தையில் முடிவு வராவிட்டால், டிரம்ப் அரசு ராணுவ தாக்குதல்களை தொடங்க தயாராகி வருகிறது என்றும் கூறப்படுகிறது.

## பசிபிக்கடல் பகுதியில் 3 பேரை கொலை செய்த அமெரிக்கா




கிழக்கு பசிபிக் பெருங்கடல் பகுதியில் சென்ற படகு போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் அடிப்படையில் அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் அந்தப் படகில் இருந்த மூன்று நபர்கள் கொலை யாகியுள்ளனர். படகில் பயணித்தவர்கள் போதைப்பொருள் கடத்தியதற் கான ஆதாரத்தை ராணுவம் வெளியிடவில்லை. கரீபியன் மற்றும் கிழக்கு பசிபிக் பகுதிகளில் போதைப்பொருள் கடத்தியதாக கூறி இதுவரை 43 முறை அமெரிக்கா குண்டு வீசியுள்ளது. இந்த தாக்குதலால் அப்பாவி மீனவர்கள் கொலை செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சோமாலியாவில் உணவு விநியோகம்: நிதிநெருக்கடியால் விரைவில் நிறுத்தம்? ஐ.நா. எச்சரிக்கை

**நியூயார்க், பிப்.23:**



ஆப்பிரிக்க நாடான சோமாலியாவில் நிலவும் கடும் வறட்சி மற்றும் உள்நாட்டுப் போர் காரணமாக, அங்கு வழங்கப்பட்டு வரும் உணவு மற்றும் ஊட்டச்சத்து உதவிகள் வரும் ஏப்ரல் மாதத்துக்குள் முழுமையாக நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா.வின் உலக உணவுத் திட்டம் அமைப்பு எச்சரித்துள்ளது.

சர்வதேச நாடுகளிடம் இருந்து போதிய நிதியுதவி கிடைக்கப் பெறாததே இந்த இக்கட்டான நிலைக்குக் காரணம் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

சோமாலியாவில் தொடர் வறட்சி மற்றும் அதிகரித்து வரும் மோதல்களால் சுமார் 44 லட்சம் மக்கள் உணவின்றித் தவிக்கின்றனர். இதில் சுமார் 10 லட்சம் மக்கள் ஒரு வேளை உணவுக்கே வழியின்றி உயிர் பிழைக்கப் போராடி வருகின்றனர்.

இவ்வாறு நிலைமை மோசமாக இருந்தாலும் போதிய நிதியுதவி கிடைக்காவிட்டால், மார்ச் முதல் ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில் மனிதாபிமானப் பணிகள் முற்றிலுமாக முடங்கும் என்று உலக உணவுத் திட்டத்தின் அவசரகாலப் பிரிவு இயக்குநர் ராஸ் ஸ்மித் கவலை தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு 22 லட்சம் பேருக்கு உணவு வழங்கப்பட்ட நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை வெறும் 6 லட்சமாகக் குறைந்துள்ளது. கர்ப்பிணி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஊட்டச்சத்து உதவிகள் 75 சதவீதம் வரை குறைந்துவிட்டன. உணவு விநியோகத்தைத் தடையின்றி தொடர, 9.5 கோடி டாலர் நிதியுதவி உடனடியாகத் தேவைப்படுவதாக ஐ.நா. கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 2022-இல், இதே போன்ற ஒரு சூழலில் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பால் பெரும் பஞ்சம் தவிர்க்கப்பட்டது. ஆனால், தற்போது சர்வதேச உதவிகள் குறைந்து வருவதால், சோமாலியா மீண்டும் ஒரு பெரிய பேரழிவைச் சந்திக்குமோ என்ற அச்சம் சமூக ஆர்வலர்களிடையே எழுந்துள்ளது.

## ஆப்கன் எல்லையில் பாகிஸ்தான் விமானப்படை தாக்குதல்! 15-க்கும் மேற்பட்டோர் பலி!!

**இஸ்லாமாபாத், பிப்.23:**

பாகிஸ்தானையொட்டியுள்ள ஆப்கானிஸ்தானின் எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் ஆயுதப்படைகள் நடத்திய தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உள்பட 15-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

சமீபத்திய காலமாகவே, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் இடையேயான எல்லைப்புற மோதல்கள் அதிகரித்து வருகின்றன. தலீபான்கள் தலைமையிலான ஆப்கானிஸ்தானின் நங்கர்ஹார் மற்றும் பாக்டிகா மாகாணங்களில் நடத்திய பயங்கரத் தாக்குதலில் 15-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து ஆப்கானிஸ்தான் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் கூறுகையில், "பாகிஸ்தான் ராணுவத்தினர் பெஹ்ஷூத் மாவட்டத்தில் ஒரு வீட்டை குறிவைத்து நடத்திய தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 23 பேர் கட்டட இடிபாடுகளுக்குள் புதைந்தனர்.

அவர்களில் இதுவரை நான்கு பேர் மட்டுமே மீட்கப்பட்டுள்ளனர். மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன" என்றார்.

தெஹ்ரிக்-இ தலிபான் பாகிஸ்தான் என்றழைக்கப்படும் பயங்கரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், உளவுத்துறையின் அடிப்படையில் தகவலின் அடிப்படையில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் பாகிஸ்தானைச் சேர்ந்த அமைச்சர் அத்தாவுல்லா தரார் தெரிவித்தார்.

## லெபனானில் இஸ்ரேல் தாக்குதல்: 11 பேர் படுகொலை

கிழக்கு லெபனானில் ஒரு அடுக்குமாடி கட்டடத்தின் மீது இஸ்ரேல் தொடர் வான் வழித்தாக்குதல் நடத்தியது. இத்தாக்குதல்களில் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பைச் சேர்ந்த மூன்று தளபதிகள் பொதுமக்கள் என 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 35 பேர் படுகாயமடைந்துள்ள தாகவும் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. ஹிஸ்புல்லா அமைப்பின் தளபதிகளுள் ஒருவரான ஹுசைன் முகமது யாகியிஇத்தாக்குதலில் கொலை செய்யப்பட்டதை ஹிஸ்புல்லா அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

## அமெரிக்காவிடம் இருந்து வரிப்பணம் திரும்பக் கிடைக்குமா? 17,500 கோடி டாலர் நிலுவை; எதிர்பார்ப்பில் நிறுவனங்கள்

**வாஷிங்டன், பிப்.23:**



அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விதித்த உலகளாவிய இறக்குமதி வரிகள் செல்லாது என அந்நாட்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், இதுவரை வசூலிக்கப்பட்ட சுமார் 17,500 கோடி டாலர் வரிப்பணம் மீண்டும் திரும்பக் கிடைக்குமா என்ற கேள்வி உலக வர்த்தகர்களிடையே எழுந்துள்ளது.

அமெரிக்க உச்சநீதிமன்றம் வரிகளை ரத்து செய்துள்ளதே தவிர, வசூலிக்கப்பட்ட பணத்தைத் திரும்ப வழங்குவது தொடர்பாக தெளிவான வழிகாட்டுதல்களை வழங்க வில்லை. இதனால், வரியைச் செலுத்திப் பாதிக்கப்பட்ட நிறுவனங்க ளுக்குப் பல சட்ட ரீதியான சிக்கல்கள் உருவாகியுள்ளன.

வரிப்பணத்தைத் திரும்பப் பெற, அமெரிக்க சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தில் ஒவ்வொரு நிறுவனமும் தனித்தனியாக வழக்குத் தொடர வேண்டும். ஏற்கெனவே 1,000-க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், இன்னும் ஆயிரக்கணக்கான புதிய மனுக்கள் தாக்கல் செய்யப்படும். எனவே, இந்த வழக்குகள் முடிந்து பணம் கைக்குவர பல ஆண்டுகள் வரை ஆகலாம் என்று கருதப்படுகிறது.

**எதிர்பார்ப்பில் நிறுவனங்கள்**

பெரிய நிறுவனங்கள் சிறந்த வழக்குரைஞர்களை வைத்து வாதாடி, தங்களது பணத்தை எப்படியாவது திரும்பப் பெற்றுவிடும். ஆனால், அதிக பணம் கொடுத்து வழக்குரைஞர்களை நியமிக்க முடியாத சிறிய இறக்குமதி நிறுவனங்கள், தங்களுக்கு நியாயமாக வர வேண்டிய பணத்தை விட்டுக்கொடுக்கும் நிலை ஏற்படலாம் என வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

'சட்டத்துக்குப் புறம்பாக வசூலித்த பணத்தை அரசு நீண்ட காலம் தன்னிடம் வைத்திருக்க முடியாது என்பது உண்மைதான். எனினும், நிர்வாக ரீதியாக பணத்தைத் திருப்பிச் செலுத்துவதில் உள்ள நிர்வாக சிக்கல்களை அரசு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும்' என்று வர்த்தகத் துறை வழக்குரைஞர்கள் குறிப்பிடுகின்றனர். இதனிடையே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பைக் கடுமையாக விமர்சித்த அதிபர் டிரம்ப், 'அமெரிக்காவுக்கு மட்டுமே முன்னுரிமை' எனும் தனது கொள்கையில் பின்வாங்கப்போவதில்லை என்று அறிவித்தார்.

அதன்படி, வேறு மாற்றுச் சட்டங்களின்கீழ், புதிய வரியை விதிக்க அதிபர் டிரம்ப் முனைப்பு காட்டி வருவது, இறக்குமதியாளர்கள் மத்தியில் மீண்டும் பெரும் குழப்பத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

## ஆப்கானிஸ்தான் மீது பாகிஸ்தான் வான்வழி தாக்குதல்; 17 பேர் பலி



**காபூல், பிப்.23:**

பாகிஸ்தானில் நடந்த தற்கொலை தாக்குதல்களுக்கு ஆப்கானிஸ்தானிய நில பகுதி பயன்படுத்தப்படுகிறது என பாகிஸ்தான் தொடர்ந்து குற்றச்சாட்டுகளை கூறி வருகிறது. இதனை நிறுத்தும்படியும் கூறி வருகிறது. சமீபத்தில் இஸ்லாமாபாத் நகரில் நடந்த தாக்குதல்களுக்கு அந்நாட்டை பாகிஸ்தான் குற்றம் சாட்டியது.

ஆனால், இதனை ஆப்கானிஸ்தான் மறுத்தது. இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் பல்வேறு மாகாணங்கள் மீது விமான படையை கொண்டு பாகிஸ்தான் இன்று தாக்குதல் நடத்தி உள்ளது. இதில், ஆப்கானிஸ்தானின் பக்திகா மாகாணத்தில் பெர்மால் மற்றும் ஆர்குன் மாவட்டங்களின் மீது பாகிஸ்தான் விமானங்கள், வான்வழியே தாக்குதல் நடத்தி உள்ளன.

பக்திகா மாகாணத்தில் மதகுருமார்களுக்கான கல்வி நிலையம் மீதும் தாக்குதல் நடந்தது. இதேபோன்று நங்கர்ஹார் மாகாணத்தில் கோகியானி பாசோத் மற்றும் கானி கேல் மாவட்டங்களின் மீதும் பாகிஸ்தானிய ஜெட் விமானங்கள் அதிரடியாக தாக்குதல் நடத்தின.

இதனை பாகிஸ்தானில் இருந்து வெளிவரும் ஊடக தகவல்கள் உறுதிப்படுத்தி உள்ளன. இதுபற்றி பாகிஸ்தானின் தகவல் அமைச்சகம் வெளியிட்ட செய்தியில், ரமலானின்போது சமீபத்தில் இஸ்லாமாபாத், பஜாவர் மற்றும் பன்னு நகரங்களில் நடந்த தற்கொலை தாக்குதல்களுக்கு பதிலடியாக துல்லிய தாக்குதல் நடத்த முடிவு செய்யப்பட்டது.

இதன்படி, பித்னா அல் குவாரிஜ் மற்றும் அதன் கிளை அமைப்புகள், டேயிஷ் கோரசான் புரோவின்ஸ் உள்ளிட்ட அமைப்புகளின் 7 முகாம்கள் மற்றும் பதுங்கு குழிகள் தாக்கி அழிக்கப்பட்டன என தெரிவித்துள்ளது.

ஆனால், இந்த தாக்குதலில் பொதுமக்களில் 17 பேர் பலியாகி உள்ளனர். இதில் மத பள்ளி ஒன்றும் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த தாக்குதலை ஆப்கானிஸ்தான் அரசின் செய்தி தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாகித் இன்று உறுதி செய்துள்ளார். அதில், பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்பட பலர் பலியாகி உள்ளனர். நிறைய பேர் காயமடைந்தும் உள்ளனர் என தெரிவித்து இருக்கிறார். இந்த தாக்குதலுக்காக பாகிஸ்தானின் எப்-16 ரக போர் விமானங்களும், ஜே.எப்.-17 தண்டர் விமானங்களும் பயன்படுத்தப்பட்டு உள்ளன. இதனை பாகிஸ்தான் உறுதிப்படுத்தி உள்ளது.

## ஹிட்லர் பிறந்த வீடு காவல் நிலையமாக மாறுகிறது



பாசிஸ்ட் ஹிட்லர் பிறந்த வீட்டை, காவல் நிலையமாக மாற்ற ஆஸ்திரிய அரசாங்கம் முடிவு எடுத்துள்ளது. ஜெர்மனி நாட்டின் எல்லைக்கு அருகில் உள்ள 'பிரானாவ் அம் இன்' என்ற ஊரில் ஹிட்லர் பிறந்த இல்லம் அமைந்துள்ளது. இந்த இடத்தை நாஜி ஆதரவா ளர்களோ அல்லது தீவிர வலதுசாரி அமைப்பினரோ ஒரு புனிதத் தலமாக மாற்றிவிடக் கூடாது என்பதில் ஆஸ்திரிய அரசு உறுதியாக உள்ளது. எனவே, அந்த இடத்தின் வரலாற்றுத் தாக்கத்தை "முடக்கும்" (NEUTRALIZE) நோக்கில், 2016-ஆம் ஆண்டு ஒரு சிறப்புச் சட்டம் இயற்றப்பட்டு, அந்த இல்லம் அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## வைரலாகும் குரங்குக் குட்டி! தனிமையில் வாடுவதற்கு மனிதர்களே காரணம்?

**டோக்கியோ, பிப்.23:**



ஜப்பான் விலங்கியல் பூங்காவில் தாயால் கைவிடப்பட்ட குரங்குக் குட்டி, பொம்மையை அரவணைத்தபடி இருக்கும் விடியோ இணையத்தில் பலரால் பகிரப்பட்டு வருகிறது.

பூங்காவில் மற்ற குரங்குகள் குட்டிக் குரங்கை ஏற்றுக்கொள்ள மறுத்ததால், பூங்கா நிர்வாகி பொம்மையைக் கொடுத்துள்ளார். அந்த குரங்கு பொம்மையிடம் தாயின் அரவணைப்பைத் தேடியவாறு, அதனுடன் குட்டிக் குரங்கு விளையாடி வருகிறது. பலரால் கைவிடப்பட்ட தனிமையின் வலி மிகவும் கொடூரமானது என இந்த விடியோ உலகம் முழுவதும் பலரால் பகிரப்பட்டு வருகிறது. ஜப்பானின் இச்சிகாவா நகரத்திலுள்ள பூங்காவில், 2026 ஜூலை 25 ஆம் தேதி குரங்கு ஒன்று பிறந்துள்ளது. இக்குரங்குக்கு பஞ்ச் எனப் பெயரிடப்பட்டது. இக்குரங்கின் தாய் முதல்முறை குட்டியை ஈன்றுள்ளது. இதனால் குட்டியைக் கையாளும் திறன், தாய் குரங்கிற்கு குறைவாகவே இருந்துள்ளது.

பொதுவாக குட்டிக்குரங்குகள் தாயை கட்டியணைத்தபடியே இருக்கும். தன்னுடைய தோல் வலுவடைவதற்காக குரங்குக் குட்டிகள் இவ்வாறு செய்கின்றன.

ஆனால், இச்சிகாவா நகரம் வழக்கத்தை விட அதிக வெப்பநிலை கொண்டதாக இருந்தது. கட்டடங்களும் நெருக்கமாக இருந்ததால், பகலில் உள்வாங்கப்பட்ட வெப்பம் இரவில் அனலாக வெளியேற்றப்பட்டுள்ளது. இதனால் இரவிலும் புழுக்கம் இருந்துள்ளது. இவை விலங்கியல் பூங்காவில் இருந்த உயிரினங்களையும் பாதித்துள்ளது.

வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருந்ததால், முதல் முறை குழந்தை ஈன்ற தாய் குரங்கு, நீரிழப்பு ஏற்பட்டு குட்டியைவிட்டுப் பிரிந்துள்ளது. தாயை இழந்த குட்டிக் குரங்கு, மற்ற குரங்குகளிடம் சென்றபோது, அவையும் ஏற்றுக்கொள்ள மறுத்து அடித்துள்ளன.

குரங்குகளுக்கு உணவளிக்கச் செல்லும்போது பூங்கா ஊழியரின் கால்களைப் பற்றிக்கொண்டு குட்டிக் குரங்கு இறங்க மறுத்துள்ளது. அப்போதுதான் மற்ற குரங்குகள், குட்டியை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, குட்டிக்கு குரங்கு பொம்மை ஒன்றை ஊழியர் அளித்துள்ளார். அந்த பொம்மையை தாய் என நினைத்து அதனை கட்டியணைத்தபடி குட்டி இருந்துள்ளது.

அதற்கு உயிர் இல்லை என்பதை உணராத குட்டி, தன்னை கட்டியணைக்கும்படி பொம்மையிடம் பல முயற்சிகளைச் செய்து தோல்வி அடைந்துள்ளது. எங்குச் சென்றாலும் பொம்மையை தன்னுடனேயே அழைத்துச் சென்றுள்ளது. இதனை பூங்கா பார்வையாளர்கள் விடியோ எடுத்துப் பதிவிட்டுள்ளனர். இந்த விடியோ இணையத்தில் பலரால் பகிரப்பட்டு வருகிறது.



# "ஏஐ உச்சி மாநாட்டில் காங்கிரஸ் செய்தது கண்ணியமற்ற அரசியல்"

## சிறந்த தேசபக்தி கொண்டவர் ஜெயலலிதா

## திமுக கூட்டணி : எந்தெந்த தேதிகளில் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை!




## திடக்கழிவு மேலாண்மைக்கான விதிகளை வெளியிட்டது உச்ச நீதிமன்றம்!

## ஈரானுடன் பதற்றத்திற்கு இடையே... மத்திய கிழக்கு பகுதிகளுக்கு படைகளை மாற்றி வரும் அமெரிக்கா

## ஏஐ வரவால் 40% வேலைவாய்ப்புகள் பாதிக்கும்: சர்வேதச நிதியத்தின் தலைவர் கருத்து


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com    Tamilnaduepaper

சென்னை    23.02.2026 திங்கட்கிழமை    இலவச இ–பேப்பர்